Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්


செப்.06—12,1998


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 273

## பூமராங் முற்றுகை

## புலிகளின் தேடுதல் வேட்டை







## டயானா ஒரு வருடம்



## நடிகர்கள் நாட்டம்

## பிரசவ சாதனை

# முரசம்

## தொல்லை தவிர்ப்புக் குழு

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தொல்லை தவிர்ப்புக்
குழுவில் முறையீடு!
மனித உரிமை
ஆணைக்குழுவில் முறையீடு!
எடுத்துரைப்பு! விசனம் தெரிவிப்பு!
விளக்கம் கோரல்! விசாரணை!
மேற்கண்டவையெல்லாம்
தினசரிகளில் கண்டுவரும்
செய்தித் தலைப்புக்கள்!
குறிப்பிட்ட குழுக்கள்
கூறுவதை பத்திரிகைகள்
அப்படியே போடுகின்றன!
மக்களை முட்டாளாக்கும்
நோக்குடன்தான்
மேற்படிக் குழுக்கள்
செயற்பட்டு வருகின்றன!
மேற்கண்ட குழுக்கள்
இரண்டும்
சுயாதீனமானவையுமல்ல;
சுதந்திரமானவையுமல்ல!
இரண்டு குழுக்களுமே
இன்றைய ஆட்சியாளரால்
தங்கள் விசுவாசிகளைக் கொண்டு
உருவாக்கப்பட்டவை!
இக் குழுக்கள் இரண்டும்
இன்று செய்யும் பணி
என்ன?
மனித உரிமை மீறல்களுக்கு
பரிகாரம் காண்பதைவிட,
இந்த நாட்டில்
மனித உரிமை மீறல்களை
முறையிடவும், விசாரிக்கவும்
ஏற்பாடுகள் உள்ளன
என்று உலகை
ஏமாற்றும் பணியையே
செய்துகொண்டிருக்கின்றன!
அதற்குத் தோதாக
தமிழ்க்கட்சிகளும்
இவர்களிடம் முறையிட்டு,
இந்த நாடகத்தில்
பிரதான பாத்திரம் வகிக்கின்றன!
தொல்லை தவிர்ப்பு குழு
என்பது சுத்த ஏமாற்று!
அப்பாவிப் பத்திரிகையாளர்
மாணிக்கவாசகத்தைக்கூட
இக் குழுவால்
விடுவிக்க முடியாதிருந்தது!
இந்துக் கலாசார திணைக்கள
உதவிப் பணிப்பாளர்
தெய்வநாயகம்பிள்ளை
காவலில் வாடுகிறார்.
மனைவி, பிள்ளைகள்
இக் குழுவிடம் கண்ணீருடன்
முறையீடு செய்தனர்!
இத்தனைக்கும்
இக்குழுவின் தலைவர்
அமைச்சர் ஜெயக்கொடிதான்
இந்து கலாசாரத் திணைக்களத்துக்கும்
பொறுப்பான அமைச்சர்.
இவர்கள் விளக்கம்
கேட்பார்களாம்;
விசாரிப்பவர்கள்
விசாரணை தொடர்வதாக
விளக்கம் தருவார்களாம்!
மொத்தத்தில்
ஏதோ, எல்லாமே
நியாயமாக, ஆதாரபூர்வமாக
நடப்பது போல
காண்பிக்கத்தான்
இந்தக் குழு உதவுகிறது!
அரசுக்கு வெளியுலக
தொல்லைகள் ஏற்படுவதை
தவிர்க்கும் குழு
என்பதே மெத்தச் சரி!
கைதுகள், புதைகுழிகள்
என்பவற்றுக்கான
புகார்கள் அரசுமீது
தெரிவிக்கப்படும்போது,
அந்த அரசால் நியமிக்கப்பட்ட
குழுக்களிடமே முறையிடுவது
எத்தனை பெரிய முரண்பாடு!
வேலிக்கு
ஓணான் சாட்சியா?
அமைச்சர் கதிர்காமரும்
அப்பாவித் தமிழருக்காக
தொல்லை தவிர்ப்புக் குழுவில்
முறையிட்டுள்ளாராம்!
செய்தியைப் படித்ததும்
தலை சுற்றுகிறது!
அமைச்சரவையில் பேசியும்
அமைச்சர் கதிர்காமரால்
பரிகாரம் காண முடியவில்லையா?
போகிற போக்கைப் பார்த்தால்
ஜனாதிபதியும்கூட
தமிழர் துயர் தீர
தொல்லை தவிர்ப்புக்குழுவுக்கோ
மனித உரிமை ஆணைக்குழுவுக்கோ
முறையிடவும் கூடும்!
அப்படியானால்,
இந்த நாட்டை
ஆள்வது யார்?
ஜனாதிபதிக்கும்
அமைச்சர்களுக்கும் மேலாக
மனித உரிமைகளை
மீறும் அதிகாரம்
படைத்த சக்தி எது?
திருவாளர் தமிழ் பேசும்
பொதுஜனத்திற்கு
பைத்தியம் பிடிக்காமல்
இருப்பதுதான்
பெரிய காரியம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## துஷ்ட நிக்கிரக இஷ்ட பரிபாலனம்

மனிதர்களுக்கு கருணை செய்து, அருள் பாலிப்பதற்காகவே இறைவன் துன்பங்களைக் கொடுக்கிறான். சோதனைகள், வேதனைகள் மூலமாக ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தி தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான்.

இதற்கு அருணகிரியார் வரலாறு ஒரு நல்ல சான்று. இளமைக் காலத்தில் மனம்போன போக்கெல்லாம் போய் காம ஸாகரத்தில் உழன்றவர். தமக்கையாரின் செல்வங்களையெல்லாம் அழித்து சிற்றின்ப வேட்கையால் சிதறிப்போனவர் அவர்.


இவரது கொடுமை தாங்க முடியாமல், மோக லாகிரியில் இருந்து திருத்த வழிதெரியாமல், "என்னையே புணர்!" என்று தமக்கையார் கூறியபின்பே ஞானம் பிறந்து முருகப் பெருமானைச் சரணடைந்தார் அருணகிரியார்.

அவரது தெளிந்த உண்மையான பக்தியை முருகப் பெருமான் அங்கீகரித்தான். பேரருள் புரிந்தான். அவரது தொழுநோயைத் தீர்த்தான். அருணகிரியாருக்குப் பழையமயக்கங்கள் யாவும் தீர்ந்து தெளிய, மனம் உரம் பெற்று விளங்கியது.

எரிகின்ற தீயில் எண்ணெய் வார்க்கும்போது பல்கிப் பெருகி எரிகின்ற தீபோல-துயர் மிக்க அருணகிரியார் வாழ்க்கையிலே-கொளுத்தும் வெயில் நாளில் மழை பொழிந்தாற்போல முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் மயில்மேலே காட்சி கொடுத்தான் என்று புலவர் புராணம் கூறுகிறது.

எனவே தவறுகளை, பாவங்களை இறைவன் மன்னிப்பான். ஆனால் தவறு என்பது தெரிந்த உடனேயே மனம் திருந்தி, மறந்துவிட வேண்டும். பதிலுக்கு நல்லவனாக மாறிவிடவேண்டும். இறைவனை முற்றுமுழுதாக சரணாகதி அடைந்து விடவேண்டும். மன்னிப்பும், அருளும் நிச்சயம் கிடைக்கும்!

தொகுப்பு: எம். சேமகரன், அவுஸ்திரேலியா.



## சுவர்க்கம் நுழையும் பொறுமையாளர்கள்

ஒரு மனிதன் அவனுடைய வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் ஏற்படக்கூடிய இன்னல்களையும், துயரங்களையும், அல்லாஹ்விற்காக சகித்துக்கொண்டு இந்த உலகில் வாழ்வானேயானால், அவனுக்கு மறுமையில் மாபெரும் நற்கூலிகள் காத்திருக்கின்றன. (அல்-ஹதீஸ்)

உடலுக்கு தலையிருக்கும் தகுதியில் ஈமானுக்குப் பொறுமையிருக்கிறது. பொறுமையானது, அது முழுமையும் நன்மையுமாக இருக்கிறது. எனவே ஒருவர் பொறுமை என்னும் அணிகலனை அணிந்துகொண்டால், அவர் வழிபாடுகளைச் செய்வதற்கும் வெறுக்கத்தக்க செயல்களை விட்டு விலகிக்கொள்வதற்கும் அவருக்கு எளிதாகி விடுகிறது. ஆதலால் தான் 'இறைவன் நிச்சயமாக பொறுமையாளர்களுடன் இருக்கிறான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (அல்-ஹதீஸ்)

"மறுமைக்காகப் பயந்து இம்மையில் பொறுமையுடையோராய் இருந்த பொறுமையாளர்கள் எங்கே?" என்று ஒரு வானவர் (மலக்கு) மறுமையில் அழைப்பார். அப்போது சிரித்த முகத்துடன் சிலர் எழுந்து சுவர்க்கத்தை நோக்கி விரைந்து செல்வர். அப்பொழுது அங்குள்ள வானவர்கள் "நீங்கள் யார்?" என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள் "பொறுமையாளர்கள" என்று பதில் உரைப்பார்கள். அந்த வானவர்கள் "நீங்கள் சுவர்க்கம் புகுந்து கொள்ளுங்கள்! சுவர்க்கம் புகுந்து கொள்ளுங்கள்!" என்று உரைப்பார்கள். (அல்-ஹதீஸ்)

தொகுப்பு: வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.270

### பரிசுக்குரிய கவிதை

### வழிதேடு

மகிழ்வு தான் வாழ்வா?
முழு நாளும் பகலா?
இருளகற்ற விளக்குண்டு;
துயரகற்ற வழி தேடு!

ம. திருவரசுராசா-
வவுனியா.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### தனிமை!

களுத்துறை சிறையில்
கன காலம் வாழும்
கணவன் தன்
துணைவிக்கு அளிக்கும்
ஆயுட் தண்டனையோ இது !?

செல்வி ப்ரியநேசி-களுத்துறை (தெற்கு)



### இனி....?

இன்னொரு
கிருஷாந்தியா?
அடுத்து,
புதை குழியா...?

எம்.இஸட்.எம். பைஸீன்-
களுத்துறை (தெற்கு).

### விரக்தி!

போருக்குள்
புதைந்து போன
பூமியினைப்
பாராமல்
வதனத்தை
வனிதையிவள்
கால்களிடை
புதைத்தாளோ?

ரேணுகா நிபாய்தீன்-
ஏறாவூர்-02.

### உறவுகளும் உறங்கியதே!

உலவும் போரினால்
உறவுகள் எனக்கில்லை!
விழியது பார்த்திட
இன்பங்கள் இங்கில்லை!
தம்மிசை வாழ்வில்லை
உயர்ந்திட வழியில்லை!
இரவுகளின் முடிவினிலும்
உறங்கவும் முடியவில்லை!

கே. றஞ்ஜனா-இறம்பைக்குளம், வவுனியா.

### கூறிவிட்டோம்!

அம்மாவிடம்
கூறிவிட்டோம்!
பாசமுடன்
செவிமடுத்தார்!
விரைவில்
நிவாரணம்!
நாமிருக்க
இரந்து கேட்க
நம் வாயிருக்க
பயமேன்?

இப்படிக்கு; தமிழ்க் கட்சிகள்.

### அன்றாடப் பிரச்சனை

அழுவதும் இறப்பதும்
அழுது கொண்டு சாவதும்-நம்
அன்றாடப் பிரச்சனை அம்மா!
யாரை இழந்து நீயழுதாலும்
போரை ஒழிக்க யாராலும் ஆகாது!

பு. புவனேசமணி-தேத்தாத்தீவு-01.

### மாற்றம்

மனம் தளராதே பெண்ணே....
மாகாண சபை தேர்தல்வரும் பின்னே;
மனிதர்கள் மதிக்கபடுவர் முன்னே-நல்ல
மாற்றங்கள் ஏற்படும் கண்ணே!

ஸ்ரீ ஜனனிப்ரியன்-ஹேனமுல்லை,பாணந்துறை.



## கவிதைப் போட்டி இல 273

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.09.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.273
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

### போதும்!

பெண் என்றால்
பேயும் இரங்கும்
என்பதால்
யாது பெருமை?
பெண் என்றால்
பேயும் நடுங்கும்
எனக் கூறவைக்க
கூனல் அகற்றி எழு!

இ. சரோஜினி- முழங்காவில்.

### அழைத்து...

வா என்றார்
வந்தோம்!
போ என்றார்
புதை குழிக்கு!
தா என்றால்
தருவாரோ
போன உயிரை?

அ.வினோ- வத்தளை.

### ஒன்றுதான் பதுமாமோ?

அசோக வனத்தில் ஒரு சீதை
அன்றும் இருந்தாள் சிறையினிலே;
ஆயிரம் சீதைகள் சிறையதனில்
இன்றும் உள்ளார் என்பதற்கு
ஈஸ்வரி இவள்தான் பதுமாமோ?

தர்சிக்கா கனகசிங்கம்-
மட்/ கல்லடி வேலூர்.

# வாசக(ர்)சாலை



## குத்தி விடுமா?

முரசே!

'அதிரடி அய்யாத்துரை', 'அல்பிரட் துரையப்பாமுதல் காமினிவரை அரசியல் தொடர்' என்னை மிகவும் கவர்ந்துள்ளன. இளவரசி டயானாவின் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' என்னை கவலையில் ஆழ்த்துகின்றது. 'முள் நிலவு' என் உள்ளத்தை குத்தி விடுமா? அல்லது..? ராஜேஸ்குமாருக்கு வாழ்த்துக்கள்!

ஹுஸைனியா வானன், விடத்தல் தீவு ஹன்பல்.

முரசே!

என் பிரியத்துக்குரியவர்
சதாமைத்
தேர்ந்தெடுத்து
முரசில்
முத்தமிட வைத்ததற்கு
என் சார்பில்
உனக்கு
கோடி வந்தனங்கள்!

'கவிப்பிரியன்' றுவைஸ் ஏ.மஜீத்,
நேரியகுளம், வவுனியா.

என் அபிமான முரசே!

ஒவ்வொரு பிரபலங்களுக்கும் இரசிகர்கள் இருப்பது போல நான் அதிபர் சதாம் ஹுசைனின் தீவிர இரசிகை. அந்த வகையில் முரசார் தரும் 'சதாம் உசே'னின் தொடர் அளவற்ற மகிழ்ச்சியைத் தருகிறது எனக்கு. இடி அமீனின் தொடருக்குப் போட்டியாக வந்துவிட்டதோ சதாம் உசேனின் தொடர்? இரண்டுமே படு விறுவிறுப்பு. இருந்தாலும் இடி அமீனின் அட்டூழியங்களைப் பொறுக்க முடியலீங்க!

செல்வி ஜே. ஆமிஸா,
அக்கரைப்பற்று-05.

என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர்! அதிலும் 'தேன் கிண்ணம்', 'காதில பூ கந்த சாமி', 'சினி விசிட்', 'முள் நிலவு' இனிமையிலும் இனிமை. மென்மேலும் உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்!

செல்வி முருகேஸ்
கலைவாணி,
நீலகாமம், காவத்த.

மலையகத் தலைவர்களின் போலியான வீட்டு வாக்குறுதி- வேலை நிறுத்தப் போராட்டத்தை இடையில் கை விட்டமை, ஹட்டன் ரயில் பாதை குண்டு வெடிப்பில் கைதான மலையகத்தவர்களை விடுவிக்க மௌனம் சாதித்தமை போன்றவற்றை மக்களுக்கு அம்பலப்படுத்திய இராஜதந்திரியின் கட்டுரை பிரமாதம். வடகிழக்கு, மலையகம் என பேதம் பார்ப்பவர்களுக்கு நல்ல பாடமாக இருந்தது!

பி. ஆர். அசோக்குமார்,
டிக்கோயா.

## தமிழ்க் கட்சிகளின் உலக சாதனை

தமிழ்க் கட்சிகளுக்கு அடுத்தவர் நடத்தும் போராட்டத்துக்குப் பின்னால் நிற்கவும், குளிர்பானம் கொடுக்கவும்தான் தெரியும் என்று நாமும் கதைப்பதுண்டு. சென்றவார முரசிலும் அதே கருத்தைக் கண்டதும் மகிழ்ச்சி. போராடாமல் இரந்து கேட்டுப் பெறலாம் என்று சொல்லுகின்ற கட்சிகள் உலகில் வேறெங்கும் கிடையாது. அந்த வகையில் தமிழ்க் கட்சிகள் உலக சாதனை படைத்து வருகின்றன.

பா. மதியழகன், சாவகச்சேரி.

## இவர்கள்தான் கூறவேண்டுமா?

செம்மணி புதைகுழியை இனித் தோண்டியென்ன, விட்டென்ன? இத்தனை நாள் காலம் கடத்திய காரணம் என்ன? இதையெல்லாம் கண்டிக்காத தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விட்டுக் கொண்டிருப்பது நகைப்புக்கிடமானது. ஏதோ இவர்கள் கூறித்தான் தெரியும் என்கிறார்களா? ஜனாதிபதி என்ன ஜப்பானிலா இருக்கிறார்? காதில் பூவும் சுற்றி கையிலும் முழக்கணக்கில் பூ தந்து கொண்டிருக்கின்றன தமிழ்க் கட்சிகள்.

ஆ. ஏகாம்பரம், யாழ்ப்பாணம்.

**எண்ணற்ற எண்ணங்களால்**
**என் போன்ற நெஞ்சங்களை**
**இன்ப வெள்ளத்தில் மூழ்கவைக்கும்**
**'முள் நிலவு' போன்ற தொடர் கதையை**
**அள்ளி வழங்கும் முரசே,**
**உன்னைப் பாராட்ட அகராதியில் கூட**
**சொற்கள் இல்லையே!**

ஏ. அர்ஸத், கரம்பை, பாலாவி.

## அம்மா பக்தர்கள்

முரசே!

முன்பு பலமுறை நீ சுட்டிக்காட்டியதுபோல, தமிழ்க் கட்சிகள் இப்போதும் ஜனாதிபதியிடம் கருணைமனு போட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. எப்போதாவது வரம் கிடைக்காதா என்று தினமும் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள்போல, இவர்களும் ஜனாதிபதியையும், அமைச்சர்களையும் கடவுள்களாக பூசிக்கின்றார்கள். பூசிப்பதோடு நிறுத்தாமல் கடவுள் கண்திறந்து, பொதி தரும், நிவாரணம் தரும், நஷ்ட ஈடு தரும் என்றும் அருள் வாக்குக் கூறிவருகின்றனர். பிள்ளையார் பால் குடிக்கிறார் என்றால்கூட நம்பலாம்; இவர்கள் சொல்வதை எப்படி நம்பலாம்?!

செ. குகநாதன், யாழ்ப்பாணம்.

**'பிரின்சஸ் கேஷ்' கப்பல் விவகாரம் தொடர்பாக, 'காலை வாரிய கப்பல் கதை' மிகச் சிறப்பான தகவல்கள். வன்னியில் உள்ள நாமே வியந்தோம். தொண்டா பற்றிய முரசின் இராஜதந்திரி அலசலும் நன்று.**

**தி. கலா, துனுக்காய்.**

## தவறுக்கு மேல் தவறு

'மலையகம் புலியகமாகுமா?' காலத்திற்கேற்ற அலசல். "மலையகத்தை வடக்கு-கிழக்காக மாற்றவேண்டாம். எங்கள் இளைஞர்கள் தொடர்கைதுகளாலும், நெருக்கடிகளாலும் கொதித்துப் போயிருக்கிறார்கள். இப்படியே சென்றால் மலையகமும் வடக்கு-கிழக்குப் போல் மாறும்!" என்று தீர்க்கதரிசனமாக நாடாளுமன்ற முழக்கம் செய்தவர்கள் இ.தொ.கா.வினர். தமது கருத்தைக் கேளாமல் விட்டதற்காக அரசைக் கண்டிப்பதை விடுத்து, 'வடக்கு இளைஞர்களின் வன்முறை' என்ற பதத்தைப் பாவித்தது தவறு! சுயநலத்தால் விளைந்த தவறு. தம் மடியிலும் கைவைக்கப்படுமோ என்று மடியில் கனம் இருந்ததால் ஏற்பட்ட பயம் நிமித்தம் ஏற்பட்ட தவறு. முரசே! உன் அலசல் தொடரட்டும்.

மு. பெரியதம்பி, அட்டன்.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.

# ஏட்டிக்குப் போட்டியான சந்திப்புக்கள்!

## தமிழ்க் கட்சிகள் துணைபோகுமா?

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக சகல அரசியல் கட்சிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் திட்டமிட்டுள்ளார்.

இதனை அறிந்த நீதியமைச்சர் ஜி.எல். பீரிஸ் அதற்கு போட்டியாக சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளார். இந்த இரு சந்திப்புக் களுமே உலகை ஏமாற்றும் நாடகம் என்று அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

ரணில் கூட்டும் மாநாட்டின் முன்னர் தமிழ்க் கட்சிகளை சந்திக்கிறார் பீரிஸ். ஒரு வேளை தமிழ்க் கட்சிகள் ரணிலின் திட்டத் துக்கு இணங்கிவிட்டால், எதிர்க்கட்சிமீது பழிபோட்டுக் கொண்டு தீர்வைப் பின்போட வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பது அரசின் எண்ணம்.

ஏட்டிக்குப் போட்டியான இந்தச் சந் திப்புக்களின் பொதுநோக்கம் ஒன்றுதான். மறு தரப்பின்மீது பழியைப் போட்டுக் கொண்டு காலத்தைக் கடத்துவதுதான் பொது நோக்கம்.

இவ்வாறான நிலையில் தமிழ் பேசும் மக்களின் கட்சிகள் என்ன செய்யப்போகின் றன? இந்த இழுத்தடிப்பு நாடகங்களில் பங்குகொண்டு உலகை ஏமாற்ற உதவப் போகின்றனவா? இரு சந்திப்புக்களையுமே புறக்கணிக்குமா? மூன்றாம் தரப்பு மத்தியஸ் தம் மூலமே இனித் தீர்வு முயற்சிகள் என்று உலகறியக் கூற இதனை ஒரு தக்க வாய்ப்பா கப் பயன்படுத்தப் போகின்றனவா? என்று அரசியல் விமர்சகர்கள் கேள்வி எழுப்பி யுள்ளனர்.

இந்தியப் பிரதமர் வாஜ்பேயியிடம் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., கூட்டணி, ரெலோ ஆகிய கட்சிகள் கூட்டாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரியிருந் தன.

இந்தநாட்டுக்குள் பிரச்சனை தீராது என்ற உறுதியான முடிவின் பின்னர் கோரப் படுவதே மூன்றாம் தரப்பு மத்தியஸ்த மாகும். இவ்வாறான நிலையில் மீண்டும் அரசினதும், எதிர்க் கட்சியினதும் இழுத் தடிப்பு நாடகங்களுக்கு தமிழ்க் கட்சிகள் துணை போகுமானால், இக்கட்சிகளின் கோரிக்கைகள் விளம்பரம் தேடும் அரசியல் ஏமாற்றுக்கள் என்றே கொள்ளப்படவேண் டும் என்று அரசியல் பார்வையாளர்கள் கூறியுள்ளனர்.

### உலக கண்டனம்

செம்மணி புதைகுழி விவகாரம் உட்பட அரசுக்குக் கெட்டபெயர் ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்தி செய்வதும் கைவிடப்பட்ட பொதியை மீண்டும் கையில் எடுத்துள்ளதற்கு ஒரு காரணமாகும் என்றும் கூறப்படுகிறது.

# கால்களில் விலங்குடன் தப்பிய கைதி

## முகாமில் இருந்த வர்த்தகரும் தப்பியோட்டம்

(நமது நிருபர்)

வவுனியா இறம்பைக்குள புனித அந்தோனியார் தேவாலயத்தில் 31.08.98 திங்கள் காலை நடந்த சம்பவம் பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

காலை 5.30 க்கும் 6 மணிக்கும் இடையில் தேவாலயத்தில் வணபிதா நவரட்ணம் பூசை வழிபாடு நடத்திக் கொண்டிருந்தார்.

அப்போது அவரது கால்களை யாரோ கட்டிப்பிடித்தனர். கால்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட இளைஞன் ஒருவனே அவரது கால்களைப் பிடித்துக் கொண்டிருந் தான். 'அடைக்கலம், அடைக்கலம்' என்று அவன் மன்றாடினான்.

அவனது கால்களில் இருந்து இரத்தம் வழிந்தோடியபடி இருந்தது. வணபிதா உறைந்து போய் நிற்க, சில இளைஞர்கள் தேவாலயத்திற்குள் ஆயுதங்களுடன் புகுந்த னர்.

அவர்கள் புளொட் உறுப்பினர்கள். புளொட் இயக்கத்தின் 'லக்கி முகாம்' என் னும் முகாமில் இருந்துதான் அந்த இளைஞன் தப்பி வந்திருந்தான்.

மலம் கழிக்கச் சென்றபோதுதான் கால் களில் விலங்குடன் தப்பியோடிவந்திருக் கிறான். "அடைக்கலம் என்று வந்தவரை ஒப்படைக்க மாட்டேன், சுடுவதானால் சுடுங் கள்!" என்று வணபிதா கூறிவிட்டார்.

அதேசமயம் தகவல் அறிந்து பொலிசார் விரைந்து சென்று அந்த இளைஞரை தமது பொறுப்பில் கொண்டு சென்றனர்.

அந்த இளைஞர் ஒரு புலி என்கிறது புளொட். அவரை விசாரித்து வருகிறது பொலிஸ் புலனாய்வுத்துறை.

'லக்கி முகாமில்' மேலும் பலர் கால் கைகளில் விலங்குகள் மாட்டி தடுத்துவைக் கப்பட்டுள்ளதாக அந்த இளைஞர் கூறியுள் ளாராம்.

### வர்த்தகரும் ஓட்டம்

இதற்கிடையே புளொட் முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறி என்றழைக்கப் படும் வர்த்தகரும் தப்பியோடியுள்ளார். அதனையடுத்து வவுனியாவில் உள்ள அவருக்குச் சொந்தமான நிறுவனம் புளொட் அமைப்பினரால் மூடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்ற பெயரில் பலரை ஏமாற்றி பணத்தைச் சுருட்டியவர் சிறி. 85 இலட்சம் ரூபா வரை சுருட்டிக்கொண்டு தலைமறைவான சிறி யுடன் புளொட் இயக்கத்துக்கு தொடர்பு இருப்பதாக முன்னர் செய்தி வெளியானது.

சிறியிடம் அடிக்கடி புளொட் நன் கொடை பெற்றுவந்தது. பின்னர் புளொட்டை யும் சிறி ஏமாற்ற முனைந்ததால் முகாமில் தடுத்துவைக்கப்பட்டார்.

தற்போது சிறி தப்பியோடிவிட்டாரா, அல்லது பலியானாரா? என்ற சந்தேகம் மக்களிடம் நிலவுகிறது. முரசுக்குக் கிடைத்த தகவலின்படி இன்னொரு இயக்க உதவி யுடன் சிறி தப்பிச்சென்றுள்ளதாகவே தெரிகிறது. ■

# செம்மணிப் பகுதியில் சந்தேகமான நடமாட்டங்கள்?

## காணாமல் போனோரின் உறவினர்கள் புகார்!

(யாழ் நிருபர்)

யாழ் குடாநாட்டில் செம்மணிப் பகுதி யில் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள் இரவு நேரங்களில் காணப்படுவதாக-காணா மல் போனோரின் உறவினர்கள் பலர் புகார் தெரிவித்துள்ளனர். அப்பகுதியில் வாகன வெளிச்சங்களைக் கண்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

செம்மணியில் மனிதப் புதைகுழிகள் இல்லையென்றால் எப்போதோ அரசு, தோண்ட முன்வந்திருக்கும். புதைகுழிகள் இருப்பதாக நம்புவதால்தான் இழுத்தடிக் கிறது. ஆகவே எது வேண்டுமானாலும் அங்கு நடக்கக்கூடும். மறைக்கும் முயற்சிகளும் நடக்கலாம் என்று நாம் நம்பத்தான் வேண்டி யுள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட மனித உரிமை அமைப்புக்கள் செம்மணிப் புதைகுழி விடயத்தில் சர்வதேச குற்றவியல் சட்டத்தரணிகள் மற்றும் நிபுணர்களது விசாரணைக்கும் சமகாலத்தில் இடமளிக் கப்பட வேண்டும் என்று கோரியிருந்தன. அதனை அரசு ஏற்கமறுத்துள்ளதும் சந்தே கத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

யாழ் குடாநாட்டில் விரைவில் மழைக் காலம் வரப்போகிறது. புதைகுழிகளை யாராவது தோண்டியிருந்தால் அந்த தடயம் கூட மழையில் மறைந்து போகும் எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

செம்மணிப் பகுதிக்கு மனித உரிமை அமைப்புக்கள், பொதுத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கொண்ட குழு அமைத்து கண் காணிப்புச் செய்ய அரசு தவறிவிட்டது என்றும் புகார் தெரிவித்துள்ளனர்.

செம்மணியில் எங்கெங்கே உடல்கள் புதைக்கப்பட்டன என்பது சம்பந்தப்பட்ட வர்கள் தவிர யாருக்கும் தெரியாது. அதனால் புதைகுழிகளைக் கண்டுபிடித்து மறைப்பதற்கும் நீண்டகால அவகாசம் தேவை. அதற்கான தாமதிப்புத்தான் நடக்கிறதோ, என்று காணாமல்போனோர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கேள்வி தொடுத்திருக்கிறார். ■

# இலங்கை அரசுக்கு தந்திகள்!

## மன்னிப்புச்சபை வேண்டுகோள்!

வெலிக்கடைச் சிறையில் கிருஷாந்தி கொலை குற்றவாளி ராஜபக்ஷ தாக்கப்பட் டதை சர்வதேச மன்னிப்புச் சபை வன்மை யாக கண்டித்துள்ளது. இத்தாக்குதல் தொடர் பாக ஆங்கிலத்தில் அல்லது தமது சொந்த மொழிகளில் தந்திகள், ஃபாக்ஸ், அவசரக் கடிதங்கள் போன்றவற்றை இலங்கை ஜனாதிபதி, நீதியமைச்சர் போன்றோருக்கு அனுப்புமாறு மனித உரிமை ஆர்வலர்களுக்கு மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்கா பதவிக்கு வந்தபின்னர் சர்வதேச மன்னிப்புச் சபை மேற்படிவேண்டுகோள் விடுத்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

"ராஜபக்ஷவுக்கு மருத்துவ உதவிகள் உடன் வழங்கப் பட வேண்டும். அவருக்கும் மாபெரும் புதைகுழிகள் தொடர்பான தகவல் தந்த கைதிகள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்!" என்று இலங்கை அரசை கோருமாறு மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தத்தமது நாடுகளில் உள்ள தூதரகங்கள் ஊடாக இலங்கை அரசுக்கு கோரிக்கை அனுப்புமாறும் அவ்வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. ■

# முறை மாறாது

வவுனியா இராணுவப் பொறுப்பதிகாரியை புளொட் உபதலைவர் மாணிக்கதாசன், மற்றும் பௌத்த தேரர், வர்த்தக சங்க பிரதிநிதிகள், ஆட்டோ சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.

அப்போது அவர்களிடம்; "நான் இராணுவ அதிகாரி என்ற முறையில் நிமிர்ந்து நின்றுதான் உங்களிடம் பேசவேண்டியுள்ளது. போராட்டங்களைக் கண்டு அஞ்ச மாட்டோம். பங்கீட்டு முறை மாறவே மாட்டாது. ஆனால் பங் கீட்டு முறைப்படியே தாராளமாக எரி பொருள் வழங்க அனுமதிக்க லாம்" என்று உறுதியாகத் தெரிவித் துள்ளாராம் அதிகாரி. ■

# அக்கரைப்பற்றில் பதற்ற நிலை!

## வரிவிதிப்புக்கு எதிர்ப்பு தெரிவிப்பு!

கடந்த ஒருவாரகாலமாக கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்றில் தமிழ், முஸ்லிம் மக்களிடையே பதற்றநிலை உருவாகியுள்ளது.

முஸ்லிம் விவசாயிகளிடம் புலிகள் வரி அறவிடுவதையும், உழவு இயந்திரங்களை கடத்திச் செல்வதையும் கண்டிப்பதாக அக் கரைப்பற்றில் சுவரொட்டிகள் போடப் பட்டன. இந்த விவகாரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தலையிட்டு நியாய மான முடிவைக் காணும்வரை தமிழ்ப் பகுதிகளுக்கு முஸ்லிம்கள் எவரும் செல்லக் கூடாது, முஸ்லிம் பகுதிக்கு தமிழர்கள் எவ ரும் வரக்கூடாது என்றும் சுவரொட்டியில் கூறப்பட்டி ருந்தது.

பொலிசார் பிரசுரங்களை கிழித்தெறிந்த னர். தமிழ்த் தொழிலாளர்கள் முஸ்லிம் பகுதிக்கு செல்லலாம் எனக் கூறினர். ஆனால் யாரும் அந்த உத்தரவாதத்தை நம்பிச் செல்லவில்லை. மறுநாளும் எச்சரிக்கைப் பிரசுரங்கள் முளைத்தன.

தமிழ்ப் பகுதிகளிலும் அதற்குப் போட்டி யாக பிரசுரங்கள் ஒட்டப்பட்டன. தமிழ் மக்கள் எவரும் முஸ்லிம் பகுதிகளுக்குச் செல்லக்கூடாது. முஸ்லிம்களும் இங்கு வரக் கூடாது என்று அச்சுவரொட்டியில் வாசங் கள் காணப்பட்டன.

பொது நோக்காளர்களின் கருத்துப்படி, "சகல ஆயுதம் தாங்கியவர்களுக்கும் பொது மக்கள் நிதி கொடுக்கவேண்டியுள்ளது. இது முஸ்லிம்களுக்கு மட்டும் உள்ள பிரச்சனை யல்ல. ஆயுதம் யார் கையில் இருக்கிறதோ அவர்களுக்கு சகலரும் பயந்து அவர்கள் கேட்பதைக் கொடுத்து வருகிறோம். இது பொதுவான நெருக்கடியாகும். இதனை சமூகங்கள் மத்தியிலான பிரச்சனையாக மாற்றுவது முறையல்ல," என்றே கூறுகின்ற னர்.

இதற்கிடையே 28.08.98 அன்று பால் வியாபாரிகளான இருவர் புலிகளால் தாக்கப் பட்டு அவர்களது மோட்டார் சைக்கிள்களும் பறிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து முஸ்லிம் பகுதியில் தமிழருக்குச் சொந்தமான வேன் ஒன்றை மறித்து சாரதி அனுமதிப்பத்திரம் அடையாள அட்டை என்பவை பறிக்கப்பட்டன.

அதற்குப் போட்டியாக தமிழ்ப் பகுதி களில் வைத்து முஸ்லிம்கள் சிலரிடம் அடை யாள அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம் என்பவை பறிக்கப்பட்டதாம். புலிகளே பறித்தனர் என்று பறிகொடுத்த முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

தம்மிடம் அறவிடும் வரி தொடர்பாக தீர்க்கமான முடிவு எடுக்கப்படாதவரை தமிழ்ப் பகுதிகளில் உள்ள தமது வயல் நிலங்களில் செய்கை பண்ணுவதில்லை என்று முஸ்லிம் நில உடமையாளர்களும், விவசாயி களும் முடிவு செய்துள்ளனர்.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே சிண்டு முடியும் சக்திகள் சில மோதலைத் தூண்ட பின்னணியில் நிற்பதாகவும் கூறப்படுகிறது.

# புலி உறுப்பினர் சரண்?

(நமது நிருபர்)

கடந்த வாரம் புலி இயக்கத்தின் பிர தேசப் பொறுப்பாளர் ஒருவர் படையினரிட மும், சீருடையினர் இருவர் புலி இயக்கத்தின ரிடமும் பரஸ்பரம் சரணடைந்த இரு வேறு சம்பவங்கள் மட்டக்களப்பில் நடந்தன.

சில காலங்களுக்கு முன்னர் புலி இயக் கத்தின் பிரதேசப் பொறுப்பாளராக இருந்து வந்தவர் வடிவேல் பிரதீபன் (குபேரன்). இவரது தன்னிச்சையான நடவடிக்கைகள் தமிழ்-முஸ்லிம் மக்களிடத்தில் வெறுப்பேற் படுத்தியிருந்தன. இந்த விடயம் புலிகளுக்கும் தெரிவிக்கப்பட்டதால் இவர் புலிகளின் விசா ரணையில் இருந்து வந்தார். பங்கர் சிறை யில் போடப்பட்டதாகவும் கூறப் பட்டது.

நீண்ட காலமாகக் காணாமல் போயிருந்த இவர் திடீரென துணைப்படையினரான ராசிக்குழு வினரிடம், வாழைச்சேனையில் துப்பாக்கி சகிதம் சரணடைந்து விட்டார். தற்சமயம் ராசிக் குழு வினருடன் சேர்ந்து செயற்பட்டு வருகிறார்.

சீருடையினர் இருவர் காணா மல் போயிருப்பதாகவும் இவர்கள் புலிகளிடம் போய்ச் சேர்ந்திருக்கக் கூடுமென்றும் கூறப்படுகிறது.

காணாமல் போன இருவரில் ஒருவர் பெரும்பான்மை இனத் தைச் சேர்ந்தவர். மற்றையவர் முஸ்லிம் என்றும் தெரியவந் திருக்கிறது. அவர் காத்தான்குடி யைச் சேர்ந்தவர். ●

# சம்பூரில் படை முன்னேற்றம்!

திருமலை மாவட்டம் சம்பூரில் 19.08.98 அன்று படை நடவடிக்கை ஒன்று இடம்பெற்றது. அதன்பின்னர் திரும்பிச் சென்ற படையினர் 30.08.98 அன்று மீண்டும் சம்பூர் கிராமத்தை முற்றுகையிட்டனர்.

30.08.98 காலை 7 மணியளவில் பல முனைகளில் இருந்து முன்னேறிய படையினர் சம்பூருக்குள் புகுந்தனர். பொதுமக்கள் எவருக்கும் எவ்வித பிரச்சனையும் கொடுக் காமல் நடந்துகொண்டனர். சம்பூர் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இருந்த புலிகளின் கடையை எரித்த இராணுவத்தினர், புலிகளின் காவல்துறை அலுவலகத் தையும் தீக்கிரையாக்கினர். அருணாசலம் ஜெயந்தி என்பவரது வீட்டுக்குசினியை புலிகள் தமது சமையல் கூடமாக பயன்படுத்தி வந்தனர். அதுவும் தீக்கிரையாக்கப் பட்டது. புலிகளின் சீருடைகள் சில படையினரால் கைப்பற்றப்பட்டன.

பின்னர் 11.30 மணிக்கு சம்பூரைவிட்டு படையினர் திரும்பிச் சென்றனர். புலிகளிடம் இருந்து விலகிய இரு வர்தான் துணையாகவந்து குறிப்பிட்ட இடங்களை அடை யாளம் காட்டியதாகத் தெரிகிறது. படையினர் திரும்பிச் சென்றதும் புலிகள் மீண்டும் சம்பூருக்குற்கு வந்தனர்.

# குறிவைத்துக் கண்ணிவெடி!

## வாகனம் தப்பியது!

புலிகள் இயக்கத்தினரின் முழுக் கட்டுப் பாட்டிலுள்ள மட்டக்களப்பு-தாண்டியடியில் புலிகளைக் குறி வைத்து வெடிக்கவைக்கப்பட்ட கண்ணிவெடியில் சிக்காது மோட்டார் சைக் கிளிலும், பிக்-அப் வாகனத்திலும் வந்து கொண்டிருந்த புலிகள் தப்பிக்கொண்டனர்.

மோட்டார் சைக்கிளில் மூன்று புலிகள் வந்து கொண்டிருந்தபோது சற்றுப் பின்னால் புலிகளின் பிக்-அப் வாகனமும் வந்து கொண்டிருந்தது. இந்த வாகனத்தை இலக்கு வைத்தே கிளைமோர் கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாமென்று கூறப்படு கிறது. எனி னும் தாக்குதல் திட்டம் சற்றுப் பிசகிவிட்டது. மோட்டர் சைக்கிளில் வந்த புலிகள் கண்ணிவெடி வெடித்ததும் பாய்ந்து தப்பிக் கொண்டனர். பின்னர் பின்னால் வந்த பிக்- அப் வாகனத்தில் மோட்டார் சைக்கிளைத் தூக்கிப் போட்டுக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

இக்கண்ணி வெடிச் சம்பவம் 26.08.98 அன்று இரவு எட்டு மணியளவில் இடம் பெற்றது. மறுநாள் காலை கண்ணிவெடி வெடித்த இடத்திற்குச் சென்று தேடுதலில் ஈடுபட்ட புலிகள் வயர், கிரனேட் என்பனவற் றைக் கண்டெடுத்தனர். 'இது நம்மீது தாக்கு தல் நடத்த வந்தவர்களின் பொருட்களே' என்று புலிகள் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 2 1/2 மைல் தூரத்தில் படையின ரின் வவுணதீவு முகாம் உள்ளது. படை யினரோ அல்லது துணைப்படையினரோ தான் புலிகள்மீது குறிவைத்து கண்ணிவெடி வெடிக்க வைத்திருக்கக்கூடுமென்று நம்பப் படுகிறது.

கிழக்கில் புலிகளின் போக்குவரத்தை நோட்டமிட்டு புலிகளின் பூரண கட்டுப்பாட்டி லுள்ள பகுதியில் திட்டமிடப்பட்ட முதலாவது கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் இது வென்பது குறிப்பிடத்தக்கது. ■

# பொலிஸார் மீது சூடு

மட்டக்களப்பு-ஏறாவூர் ஐயங்கேணி முஸ்லிம் பகுதியில் மறைந்திருந்த புலிகள் பொலிஸார் மீது சுட்டதில் எஸ்.குணசேகர (29) என்ற பொலிஸ்காரரும், 4 1/2 வயதுடைய ஒரு குழந்தையும் காயமடைந்தனர்.

காயமடைந்த பொலிஸ்காரர் துப்பாக்கி யுடன் தப்பியபோதிலும், அவருடன் கூட விருந்த சில்வா எனும் பொலிஸ்காரர் புலிகளிடம் துப்பாக்கியைப் பறிகொடுத்தார். இச்சம்பவம் 25.08.98 அன்று காலை 10.45 மணியளவில் இடம்பெற்றது. ■

# வியாபாரிகள் வெளியேற உத்தரவு

## நூற்றுக்கணக்கானோர் பாதிப்பு!

(மன்னார் நிருபர்)

மன்னார் சந்தைக்கட்டடத் தொகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த சுமார் இரு நூறு அங்காடி வியாபாரிகளை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு மன்னார் பிர தேச சபை கேட்டுள்ளது.

இதனால் இவ்வியாபாரிகள் கடும் பாதிப் பிற்கு உள்ளாகியுள்ளனர்.கடந்த ஆண்டு வீதி ஓரங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் களே இவ்வாறு சந்தைப் பகுதியில் தம் வர்த் தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

தினசரி பிரதேச சபைக்கு வாடகை செலுத்தி வரும் இவர்கள் நிரந்தரமாக கடை அமைத்துள்ளதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மன்னார் நகரில் சுப்பர் மார்க்கட்டு களோ, அல்லது வேறு வகையான நவீன வர்த்தக நிலையங்களோ கிடையாது. மேலும் நகரிலுள்ள கடைகளில் விற்கப்படுவதை விட குறைந்த விலையிலேயே இங்கு பொருட் கள் விற்கப்பட்டு வருகின்றன.

வர்த்தக நிலையங்களுக்கு வெள்ளிக் கிழமை விடுமுறை தினமாகும். ஆனால் சந்தையில் அவ்விடுமுறை கிடையாது. அதனால் எல்லா நாட்களிலும் சந்தைகளில் பொருட்களை வாங்கக்கூடியதாக இருந்தது.

தற்போது எழுந்துள்ள சூழ்நிலையினால் மேற்படி இருநூறு வியாபாரிகளும் நடுத் தெருவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டுள்ளது. அத்துடன் இவ்வியாபாரிகளுடன் தொடர்புள்ள மேலும் நூற்றுக்கணக்கான சிறு வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார்ப் பகுதியில் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துவிட்டு மீண்டும் சந் தைக்குக் கொண்டுவந்து சேர்க்க அதிகமான கட்டணம் அறவிடப்படுகிறது. தினசரி சந்தை யாக இது இருப்பதனால் தினமும் பொருட் களை அங்குமிங்கும் கொண்டு செல்லவோ, கொண்டுவரவோ முடியாதிருப்பதாக சந்தை வர்த்தகர்கள் கூறுகின்றனர். ●

# சிறைப் படுகொலை—முடிவுகள் எங்கே?

நீதி அமைச்சரின் அதிகாரத்துக்குட் பட்ட சிறிலங்கா சிறைகளின் பாதுகாப்பு தொடர்பாக அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. 1997 டிசம்பரில் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக் கப்பட்டிருந்த ஒரு முஸ்லிம் மற்றும் இரு தமிழ்க் கைதிகள் சில சிங்களக் கைதிகளால் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

இக்கைதிகளைப் பாதுகாக்க சிறைச் சாலை ஊழியர்களோ இராணுவத்தினரோ தவறிவிட்டனர் என்று அறிக்கைகள் தெரிவிக் கின்றன. தவிர இவர்களில் சிலர் மும்முர மாகத் தாக்குதலில் இறங்கினர் என்றும் தெரிகிறது. இக்கொலைகள் பற்றி விசாரிப்ப தற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இருப்பினும் இதன் முடிவு கள் இதுவரை வெளியிடப்படவில்லை!' என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித் துள்ளது.

களுத்துறைச் சிறையில் தமிழ் முஸ்லிம் கைதிகள் கொலை தொடர்பாக விசாரணை கள் நடத்தப்படும் என்று தமிழ்க் கட்சிகளுக்கு கூறப்பட்டன. தாம் கேட்டதால்தான் விசா ரணை நடத்தப்படுவதாக மக்கள் நினைத் தால் போதும் என்று அத்தோடு அதனை மறந்துவிட்டன தமிழ் கட்சிகள். சர்வதேச மன்னிப்புச் சபை மட்டும் மறக்காமல் இருக்கிறது. ●

# வாக்குறுதி கொடுத்து எட்டுமாதங்கள்

## ஜனாதிபதி கூறிய விசாரணைக்குழு எங்கே?

"இலங்கையில் காணாமற்போதல் பற்றிய விசாரணைகளின் இன்றைய நிலை தொடர்பாக எழுந்துள்ள பல பிரச்சனைகள் ஆழ்ந்த விசனத்தை ஏற்படுத்துகின்றன!" என்று ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம் கூறியுள்ளது. அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"போதிய கால அவகாசமின்மையால் விசாரணைகளைப் பூர்த்தி செய்ய முடியாமற் போன, மூன்று முன்னைய ஆணைக் குழுக்களின் விசாரணைகளைத் தொடர்ந்து நடத்த, மனோரி முத்தெத்துவேகம தலைமையில் புதிய ஆணைக்குழு அண்மையில் நியமிக்கப்பட்டதை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம் வரவேற்கிறது. அம்மூன்று குழுக்களும் தங்கள் அறிக்கைகளை சென்ற ஆண்டு ஆவணி மாதம் கையளித்தன. அவ்வாணைக்குழுக்களுக்குப் பதிலாக தனி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டமை காலங்கடந்ததெனினும் மிக அத்தியாவசியமான ஒரு ஏற்பாடாகும்.

யாழ்ப்பாணக் குடா நாட்டை 1996ம் ஆண்டு நடுப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின் இடம்பெற்ற காணாமற்போதல் தொடர்பான முறையீடுகளை விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றை நியமிக்கத் தவறியமை ஜ.உ.பா. இயக்கத்திற்கு ஆழ்ந்த கவலையை அளிக்கிறது. இது, இனிமேலும் கவனியாது விட்டக்கூடிய ஒரு விடயமல்ல.

### ஜனாதிபதி கூறிவை

காணாமற்போனவர்களின் உறவினர்கள் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பல சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்தியும் அதற்கு முன் கொழும்புக்கு ஒரு பயனற்ற பயணமொன்றை மேற்கொண்ட பின்பும், 1997ம் ஆண்டு மார்கழி மாதத்தில் ஜனாதிபதியைச் சந்திக்க இறுதியில் ஏற்பாடானது.

காணாமற்போதல் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு யாழ்ப்பாண மக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆட்களைக் கொண்ட ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும் என்று ஜனாதிபதி இச்சந்திப்பின்போது வாக்களித்தார் என அறிவிக்கப்பட்டது.

இக்காணாமற் போதல் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கக் கூடாது என்றும் அச்சம்பவங்களுக்கு தான் பொறுப்பேற்பதாகவும் ஜனாதிபதி கூறியதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்த 600 அல்லது அதற்கு மேற்பட்ட காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்படும் சுயாதீனமான குழு ஆறு மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று ஜனாதிபதி வாக்குறுதியளித்ததாக அறிவிக்கப்பட்டது.

அத்துடன் அந்த ஆணைக்குழுவில் தமிழரின் பிரபலமான பிரதிநிதிகள், சட்ட வல்லுனர்கள், மதகுருமார் ஆகியோர் உள்ளடக்கப்படுவார்களெனவும் ஆனால் அரசியல்வாதிகள் சேர்க்கப்படமாட்டார்கள் என்றும் ஜனாதிபதி கூறியதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி வாக்குறுதியளித்து எட்டு மாதங்களுக்கு மேலாகியும் அது இன்றும் நிறைவேற்றப்படாமல் இருப்பதன் காரணத்தை ஜ.உ.பா. இயக்கத்தினால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை.

### இது வேறு குழு

மனோரி முத்தெத்துவேகம தலைமையிலான புதிய ஆணைக்குழு வடக்கு-கிழக்கில் காணாமல் போனோர் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளும் எனப் பலர் எண்ணியது நியாயமானது. ஆனால் நிலைமை அப்படி அமையவில்லை.

இந்த புதிய ஆணைக்குழு பிராந்திய மட்டத்தில் முன்னர் இயங்கிய ஆணைக்குழு மேற்கொள்ளாமல் மேல்மிச்சமாக விட்ட புகார்கள் குறித்தே விசாரணை மேற்கொள்ளலாம்.

வடக்கில் காணாமல் போனோர் பற்றிய புதிய புகார்கள் தொடர்பாக விசாரணை செய்யும் பொறுப்பை இந்தக் குழுவின் ஆணைக்கு உட்படுத்துவது திருப்திகரமாக அமையாது.

### தனியாகத் தேவை


எப்பகுதிப் புகார்கள் தொடர்பான விசாரணைகளுக்கு முதன்மை அளிப்பது என்ற விடயத்தில் ஆணைக்குழு குழப்பமான நிலையை எதிர்நோக்க நேரும். ஒரு புறம், பிரதானமாக தெற்கில் காணாமல்போன ஆயிரக்கணக்கானவர்களின் உறவினர்கள் 1989-1990 தொடக்கம் தகவல் தேட, மறுபுறம் வடக்கில் 1996 ஆண்டிலும் அதனைத் தொடர்ந்த ஆண்டுகளிலும், தற்போதைய அரசின் கீழ்க்காணாமல் போனவர்கள் தொடர்பாக தகவல் தேடும் குடும்பத்தினர். இவ்விரு பகுதியினரும் தங்கள் தங்கள் விசாரணைகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என்று கருதுவதில் நியாயமில்லாமல் இல்லை.

இரண்டாவதாக குறிப்பிடப்பட்டிருக்கும் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்ய ஒருதனி ஆணைக்குழு அவசியமென்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது."

இவ்வாறு ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கத்தின் தலைவர் சூரியா விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# ஜெனிவாவைக் குலுக்கிய பேரணி

## "பொருளாதாரத் தடைகளை அகற்று!"




இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், இலங்கை அரசின் நிவாரண வெட்டு, பொருளாதாரத் தடை என்பவற்றைக் கண்டித்தும் ஜெனிவா நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. பதினைந்தாயிரத்திற்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் திரண்டனர். ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டதோடு பலர் தமது பிள்ளைகளையும் அழைத்து வந்திருந்தனர். ஜெனிவாவில் ஐக்கியநாடுகள் சபை வரை நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் புலிக்கொடிகளும், பிரபாகரனது படங்களும் பெருமளவில் காணப்பட்டன. 10.08.98 அன்று ஜெனிவாவைக் குலுக்கிய நீண்ட பேரணியின் ஒரு காட்சியே இதுவாகும்.

# படகுச் சேவையில் தொடர் இழுபறி

## பணிகளுக்கு ஏற்படும் பாதிப்பு!

மூதூருக்கும் திருமலைக்கும் இடையேயான படகுப் போக்குவரத்து தீர்க்க முடியாத ஒரு பிரச்சனையாகவே இருந்து வருகின்றது. 21 ஆம் நூற்றாண்டில் உலகம் காலடி எடுத்துவைக்கும் நிலையில் உறுதியான ஒரு படகுச் சேவையைக் கூட நடத்த முடியாத அவலநிலையில் நம் நாடுள்ளது!

மூதூர்- திருமலை கடல் வழிப்போக்குவரத்துக்களில் பயன்படுத்தப்பட்டு வந்த மூன்று மோட்டார் லோஞ்சுகளும் பழுதடைந்து நீண்ட காலமாகின்றது. இவற்றைத் திருத்தி மீண்டும் சேவையில் ஈடுபடுத்துகின்ற எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்போது சுமார் இருபது மீன்பிடி வள்ளங்களே அந்தச் சேவையை நடத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பாதுகாப்பற்றதாக இந்தப் பயணம் அமைவதால்தான் பாதுகாப்பான பயணத்துக்கு படகுச்சேவை ஒன்றை நடத்தவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

திருமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசம் அதிகளவு சனத்தொகையைக் கொண்டதாகவும், முக்கியமான ஒரு பிரதேசமாகவும் உள்ளபோதும்கூட தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்படும் ஒரு பகுதியாகவே அது இருந்து வருகின்றது.

அரச ஊழியர்கள் பெருமளவுக்கு இந்தப் படகுச் சேவையையே நம்பியிருக்கின்றார்கள். சீரான படகுச் சேவை ஒன்று இல்லாததால் இவர்களால் வேலைக்கு கிரமமாகச் செல்லமுடியாத நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

மூதூரில் என்னதான் அபிவிருத்தியை மேற்கொண்டாலும்கூட இந்தப் படகுச் சேவையை சீராக நடத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத வரையில் அதனால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. திருமலை மாவட்ட அபிவிருத்தியில் அக்கறை கொண்ட அனைவரும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய விடயமாக இது உள்ளது!

சேனையூர்-அ. அச்சுதன்.

# கிராம சேவகர் இடம் வெற்றிடம்

நுவரெலியா மாவட்டம், அக்கரப்பத்தனை, மன்றாசி ஆகிய இரு கிராமசேவையாளர் பிரிவில் கடந்த இரண்டு வருடங்களாக கிராம சேவையாளர்களின் இடம், வெற்றிடமாகவே இருக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன் பணியிலிருந்த மன்றாசி பிரிவு கிராம சேவையாளர் மரணமடைந்ததைத் தொடர்ந்து அவ்விடம் இன்னும் நிரப்பப்படவில்லை.

அக்கரப்பத்தனை பிரிவில் பணிபுரிந்த பெண் கிராமசேவையாளர் மாற்றலாகிச் சென்று விட்டார். எனினும் அவ்விடம் காலியாகவே இருக்கின்றது. இதனால் இப்பகுதியில் வாழும் பொதுமக்கள் பெரும் சிர்மத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

மரணமடைந்தவர்களின் ஊழியர் சேமலாபநிதிக்கான அத்தாட்சி பெறுவோர், தூர இடங்களில் இங்கிருந்து போய் தொழில் புரியும் அடையாள அட்டை இல்லாது தமக்கென, கிராமசேவையாளரின் அத்தாட்சி பெறுவோர், அடையாள அட்டை விண்ணப்பம் செய்வோர் போன்றோர் நாளாந்தம் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

அன்றாடம் தொழில் செய்து வேதனம் பெறும் பெருந்தோட்ட மக்களின் இது போன்ற பிரச்சனைகளை கவனத்தில்கொள்ள யாருமில்லையா? அதிகாரிகள் மேற்கண்ட கிராமசேவை பிரிவுக்கு கூடிய விரைவில் இரண்டு கிராமசேவையாளர்களை பணியில் அமர்த்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

ஏ.எஸ். தங்கவேல், அக்கரப்பத்தனை.


**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை கீழ்காணும் இடங்களில் சந்திக்கலாம்.

**கல்முனையில் செப்டம்பர் 5,6ம் திகதிகளில்**

T.M.M. பார்மசி – கல்முனை. T.P. - 065-29329

**வவுனியாவில் செப்டம்பர் 12,13ம் திகதிகளில்**

2ம் குறுக்குத் தெரு, ஞானவைரவர் கோவில் வீதி, VANNI INN ல் சந்திக்கலாம்.

**கொழும்பில் செப்டம்பர் 20 முதல் 28 வரை சந்திக்கலாம்**

BEAUTY LODGE, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P. 338165, 338166 - 072-609388
(5 லாம்புச் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)

கடிதத்தொடர்பு:- Dr. P.Arumugam S.A.M.P.
No. 33, Tissa Weerasingam sq, Boundary Road, Batticaloa.





**கலை அலங்கார வகுப்புக்கள்**

- சிகை அலங்காரம்
- அழகுக்கலை
- மணப்பெண் அலங்காரம்
- 4 மாத கற்கைநெறி

**ஆரம்பம்: 27-09-98**

FASNAZ BEAUTY SALON
142, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06.
தொலைபேசி: 589457


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி வேணுசா 30.07.1998

ஜெயகுமார்-மைதிலி தம்பதியினரின் செல்வப் புதல்வி வேணுசா 30.07.1998 அன்று தனது முதலாவது பிறந்தநாளை Toronto வில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: மாமா

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### நவலக்ஷன் 08.09.1998

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தைச் சேர்ந்த சுபாஸ்குமார்-(செல்வா) அன்பரசி தம்பதியினரின் செல்வப் புதல்வன் **நவலக்ஷன்** தனது முதலாவது பிறந்த தினத்தை 08.09.1998 அன்று தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

மகன் லகஷனை ஃபிரான்சில் இருக்கும் அன்பு அப்பா, அம்மா, ஆனைக்கோட்டையில் வசிக்கும் அன்பு அம்மம்மா, அப்பம்மா, ஜெயா சித்தப்பா குடும்பத்தினர், சிவமணிச் சித்தப்பா, சுமதி அத்தை, வனஜா அத்தை, சாந்தன் சித்தப்பா, சுவிஸில் வசிக்கும் பெரியமாமா, ஜெர்மனியில் வசிக்கும் திரு மாமா, சிவாமாமா, மணிமாமா, ஜெயமாமா, அருள்மாமா, றொக்சன் மாமா, இந்தியாவில் வசிக்கும் பெரியம்மா குடும்பத்தினர் கொழும்பில் வசிக்கும் சுகந்தா அத்தை, ஜெர்மன் மாமா, ரமணன் சித்தப்பா, வவுனியாவில் வசிக்கும் சிவகுமார் பெரியப்பா மற்றும் பாட்டிமார், பாட்டாமார், அத்தைமார், சித்தாமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கல்லாறு அம்பாளின் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் இனிதாக வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அம்மம்மா-அ. விமலா

## இரண்டாவது ஆண்டு நினைவு -20.08.1998



### செல்வி ச. சசிகலா

பிறப்பு: 05.02.1979 இறப்பு: 20.08.1996

கண்மணியே! பெற்றமனம் பரிதவிக்க உடன் பிறந்தோர் துடிதுடிக்க உற்றவர்கள் உருகி நிற்க, பாதி வழியில் பயணத்தை முடித்து பாரினில் நீ மறைந்த மாயமென்ன? இரண்டாண்டு சென்றும் உன்னை எண்ணினால் கண்களில் கங்கையே. ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும் உன் ஆருயிர் அன்பிற்கு இணையாகுமா? உன் தெய்வீக முகத்திற்கு ஈடாகுமா? ஏக்கத்தின் எல்லைதனில் எமையெல்லாம் தவிக்கவிட்டு பாரினில் நீ மறைந்ததன் மாயமென்ன?

கனடாவிலுள்ள அண்ணன்மார்-உதயகுமார், வசந்தகுமார், ஜெயகுமார், பெரிய அண்ணி, சின்ன அண்ணி, மருமக்கள் சுஜித் சோபியா-இந்தியாவிலிருக்கும் அம்மா மற்றும் சகோதர சகோதரியர்

தகவல்: ச. வசந்தகுமார், கனடா

# தலைநகரில் புது உத்தி

> "புலிகளுக்கு புதிய தலைமுறை உறுப்பினர்களை அரசே சேர்க்கிறது!"

கொழும்பில் பாதுகாப்புத் தரப்பு புலிகளைப் பிடிக்க தேடுதல் வேட்டை நடத்திக் கொண்டிருக்க, புலிகளும் கொழும்பில் தேடுதல் வேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

25.08.98 செவ்வாய்க்கிழமை அன்று மாலை ஐந்துமணியளவில் டிக்மன் வீதிச் சந்தி யில் புலிகளின் பிஸ்டல் குழு தாக்குதல் நடத்தியது.

கொழும்பில் புலிகளின் புதிய தாக்குதல் உத்திக்கான துவக்கப் புள்ளியே இத் தாக்குதல்.

நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளியாகி இருந்தன.

உண்மையில் நடந்தது என்ன?

துவிச்சக்கர வண்டி ஒன்றில் புலிகள் இருவர் டிக்மன் வீதிச் சந்தி சிக்னல் அருகே காத்திருந்தனர்.

இராணுவக் கப்டன் சென்ற வாகனம் சிக்னலுக்காக தரித்து நின்றபோது, ஒரு புலி அந்த வாகனம் நோக்கிச் சென்று, தன் இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவி சுடத் தொடங்கினார்.

கப்டன் ஆசனத்தில் மடங்கிச் சரிந்ததும், துப்பாக்கிப் பிரயோகம் செய்த புலியும், மற்றவரும் சைக்கிளில் தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும்போது கண்டவர்கள் பயத்தில் ஓடினர். ஆனால் அப்பக்கமாக வந்த ஓட்டோவின் சாரதி மட்டும் சைக்கிளில் சென்றவர்களை பின் தொடர ஆரம்பித்தார்.

கிட்டத்தில் சென்றால் சுட்டுவிடுவார்கள், துரத்துவது தெரிந்தாலோ, சத்தம் போட்டு பலரை அழைத்தாலோ புலிகள் உஷாராகி தன்னை தாக்குவார்கள் என்பதால் மிக எட்டத்தில் ஓட்டோவில் தொடர்ந்தார்.

டிக்மன்வீதி வழியாக சென்ற புலிகள் ஹவெலொக் வீதியில் ஏறியதும், சைக்கிளில் முன்னால் அமர்ந்திருந்த புலி கீழே குதித்து அவ்வீதியால் வந்த பஸ் ஒன்றில் ஏறிவிட்டார். துப்பாக்கிப் பிரயோகம் செய்த புலி அவர்தான்.

அவர் இறங்கிய பின்னர் இன்னொரு புலி தனது சைக்கிளில் பாக்றோட் வழியாக தொடர்ந்து செல்ல, ஓட்டோவும் எட்டத்தில் வால்போல தொடர்ந்து கொண்டிருந்தது.

தொடரப்படுவது தெரியாமல் பாக்றோட் முடிவில் கிருலப்பனை நோக்கி சைக்கிளை திருப்பினார். வலப்பக்கமாக தொடர்ந்து சென்றால் கிருலப்பனையை சென்றடையலாம்.

அந்த திருப்பத்தில் பொல்ஹென் கொட இராணுவ சோதனை அரண் இருக்கிறது. ஆனால் அது தெருவின் வலப்பக்கம் இருப்பதால், இடப்பக்கமாக கிருலப்பனை செல்வதற்கு சோதனை இருக்காது.

இராணுவ சோதனை அரண்களில் சிக்கமுடியாதவாறு முன்கூட்டியே தீர்மானித்த பாதையில்தான் சைக்கிளில் விரைந்தார். ஆனால் ஓட்டோ பின் தொடர்ந்தது அவர் எதிர்பாராத விஷயம்.

பொல்ஹென் கொட இராணுவ சோதனை அரணைக் கண்டதும் ஓட்டோ சாரதிக்கு துணிச்சல் வந்துவிட்டது. ஓட்டோவில் விரைந்து தகவல் சொல்லியிருக்கிறார்.

உடனே துரத்திப்பிடித்தனர் இராணுவத்தினர். பிடிபடும்போது கிரனேட் ஒன்று இடுப்பில் இருந்திருக்கிறது. சயனைட் குப்பியும் இருந்ததாகக் கூறப்படுகிறது. அது சரியாகத் தெரியவில்லை. நடந்தது இதுதான்!

ஆனால் உடனடியாக வெளியான சில செய்திகள் இச் சம்பவத்தை குழப்போ குழப்பென்று குழப்பிவிட்டன.

ஓட்டோக்காரர் துரத்திப் பிடித்தார் என்ற விஷயத்தை, ஓட்டோக்காரர் பிடிபட்டார் என்று வானொலிச் செய்தியில் குழப்பினார்கள்.

'பைக்' என்று பொதுவாக சைக்கிளையும் கூறலாம். மோட்டார் சைக்கிளையும் கூறலாம். அதனால்தான் குழப்பம்.

சுட்டவர்கள் 'பைக்'கில் வந்தனர் என்று கூறப்பட்டதும் மோட்டார் சைக்கிளில் வந்தனர் என்று ஊகித்தும் செய்திகள் வெளியாகின.

மூன்றுபேர் ஓட்டோவில் வந்து சுட, சைக்கிளில் சென்றவர் ஓட்டோவை துரத்திப் பிடித்தார் என்று இன்னொரு செய்தி நேர்மாறாக வெளியானது.

இதற்கிடையே பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் பாதுகாவலர்கள்தான் துரத்திப் பிடித்தனர் என்று கூட செய்தி ஒன்று வெளியாகியிருந்தது.

இந்தச் செய்திக் குழப்பத்தால் பிடிபட்டவர் புலிதானா? அல்லது புலியாக்கிவிட்டனரா? என்று சந்தேகம் வந்துவிட்டது.

ஆனால் பிடிபட்டவர் புலிதான்!

சொந்தப் பெயர் வடிவேல் திவாகரன். யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் வீடு இருந்தது. யாழ இந்துக் கல்லூரியில் படித்தவர். யாழ்ப்பாணத்தில் இருந்தவரையும் ஜாலியான பேர்வழி.

சூரியக்கதிரின் பின்னர் இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் இருந்தபோதுதான் தன் ஜாலியான போக்கையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு புலிகளோடு சேர்ந்தார்.

சாவகச் சேரியில் இருந்த திவாகரனின் வீட்டார் கொழும்பில் வசிக்க தீர்மானித்து புறப்பட்டபோது கூடவே வந்த திவாகரன் திறந்த பல் கலைக்கழகத்தில் சேர்ந்து கொண்டார். தெஹிவளையில் திவாகரன் தன் வீட்டாருடன் வசித்தார்.

திவாகரன் புலிகளின் முக்கியமான ஒருவரல்ல. அவரைக் கைது செய்துள்ளது மூலம் கொழும்பில் புலிகளின் வலைப்பின்னல்களை கண்டுபிடிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

இதுவரை திவாகரனின் வீட்டாரையும், நண்பர்களையும் விசாரித்து வருவதாகவே கூறப்படுகிறது. திவாகரனிடம் இருந்து தேவையான தகவல்கள் கிடைத்திருந்தால் அவரது சுற்று வட்டத்தை தாண்டியும் கைதுகள் நடத்திருக்கும்.

திவாகரனுடன் சென்று பிஸ்டல் சூடு நடத்தியவரின் இயக்கப் பெயர் சுரேஸ் என்று கூறப்படுகிறது.

திவாகரனும், சுரேசும் கொழும்பு மயூராபதி கோவிலடியில் இருந்தே ஒன்றாகப் புறப்பட்டு சென்றனராம்.

'மயூராபதி கோவிலடிக்கு சுரேஸ் வருவார். அவருடன் சேர்ந்துபோ!' என்பதுதான் திவாகரனுக்கு வழங்கப்பட்ட உத்தரவு.

தனக்கு உத்தரவிட்டவர் எங்கிருக்கிறார்? சுரேஸ் எங்கு உள்ளார்? போன்ற விபரங்கள் திவாகரனுக்கு தெரியாது. செல்டெல் தொலைபேசி ஊடாகவே தனது கொழும்புப் பொறுப்பாளருடன் தொடர்பை வைத்திருக்கிறார். தேவை ஏற்பட்டால் பொது இடத்தில் சந்திப்பு நடக்கும். அடுத்த வேலை தொடர்பாக கூறப்படும். அவ்வளவுதான். எவர் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார்கள் போன்ற தகவல்கள் ஒருவருக்கொருவர் தெரியாதளவுக்கே கொழும்பு வேலை முறையை புலிகள் வகுத்துள்ளனர்.

தனியார் தொலைபேசி நிறுவனங்கள் பல வந்துவிட்டன. இது செல்ஃபோன் யுகம்.

செல்ஃபோன்கள் புலிகளின் இரகசிய வேலைகளுக்கு தலைநகரில் நன்கு உதவுகின்றன.

திவாகரனுக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் நண்பி ஒருவர் இருக்கிறார். 'பஞ்சி' என்று அழைக்கப்படுவார். தன்னிடமிருந்த கிரனைட்டை உபயோகிக்காமல், சயனைட் குப்பி கடிக்காமல் திவாகரன் மாட்டுப்பட்டதற்கு காதல் ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

ஆனால் விசாரணையாளர்களோ வேறு கோணத்தில் பஞ்சியிடம் விசாரணை நடத்தியுள்ளனர் என்று தெரிகிறது.

இதற்கிடையே குறிப்பிட்ட தாக்குதல் கப்டனையோ அல்லது வேறு உயர் அதிகாரியையோ குறிவைத்து நடத்தப்பட்டதா? அல்லது யார் உயர் அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் தென்பட்டாலும் சுடுவது என்ற திட்டப்படி நடந்த தாக்குதலா? என்பதுதான் குழப்பமாக இருக்கிறது.

கொழும்பில் டிக்மன் வீதிச் சந்தி உட்பட பிரதான சந்திகளில் காத்திருந்தால் நிச்சயமாக பெரிய தலை ஏதாவது மாட்டும் என்று கணக்குப்போட்டு, அதற்கேற்ப திட்டம் தீட்டப்பட்டது.

டிக்மன் வீதி வழியாக முக்கிய அதிகாரிகள் சென்று வருவதை அவதானித்திருக்கலாம். எனவே அங்கு வந்து காவல் நின்றிருக்கலாம்.



வன்னியில் 22.07.1998 இல் நடைபெற்ற போராட்டம்

கப்ரன் சென்ற வாகனத்தைக் கண்டதும் உயர் அதிகாரி என்று ஊகித்து சுட்டிருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் சுடப்பட்ட கப்ரன் இராணுவ கவச வாகனப் பிரிவில் உள்ள ஓர் அதிகாரி. ஜயசிக்குறுய் உட்பட பல இராணுவ நடவடிக்கைகளில் பங்குகொண்ட படை உயர் அதிகாரியான நீல் டயஸின் கீழ் பணியாற்றுபவர் என்று தகவல்கள் கூறுகின்றன.

ஆகவே திட்டமிட்டுத்தான் குறி வைக்கப்பட்டதா? என்றும் சந்தேகம் வருகிறது.

'காகம் இருக்க பனம் பழம் விழுந்ததுபோன்றதே இதுவாகும். குறிப்பிட்ட கப்ரன் புலிகளின் இலக்கல்ல' என்கிறது பொலிஸ் வட்டாரம்.

உயரதிகாரியான நீல் டயஸ் என்று கருதித்தான் கப்ரனை சுட்டுவிட்டனர். இருவரும் கிட்டத்தட்ட ஒருவிதமானவர்கள் என்பது இன்னொரு தகவல் இது மிகப் பலவீனமான தகவல்.

குறிப்பிட்ட உயரதிகாரியை குறிவைத்து காத்திருப்பது என்றால், அவரது நடமாட்டம் பற்றிய துல்லியமான தகவல்களை புலிகள் அறிந்துள்ளனர் என்றே அர்த்தம். அப்படித் தகவல் எடுக்க முடிந்தவர்களுக்கு ஆள் மாறாட்ட தகவல் கிடைக்க வாய்ப்பில்லை. அணிந்திருக்கும் பட்டியை வைத்தே தராதரத்தை கண்டுபிடித்துவிடலாம்.

தவிர கப்ரன் வாகனத்தில் செல்வதற்கும், நீல் டயஸ் போன்ற மிக உயரதிகாரி செல்வதற்கும் இடையே பாரிய வித்தியாசம் உண்டு. நீல் டயஸ் செல்வதாக இருந்தால் பாதுகாப்பு வாகனமும் கூடச் சென்றிருக்கும்.

மிக முக்கியமான விஷயம் யாதெனில், மிக உயர் அதிகாரிகள் மீதான தாக்குதலுக்கு புலிகள் திட்டமிடும்போது குறி சற்றுக்கூட பிசகாமல் இருப்பதற்காக கரும்புலித் தாக்குதலையே மேற்கொள்வர். வாய்ப்புக்கிடைக்கும் போது கைநழுவ விட்டிருக்கமாட்டார்கள். எனவே ஆள்மாறாட்டம் என்ற சந்தேகத்தை தவிர்த்துவிடலாம்.

குறிப்பிட்ட அதிகாரியைத்தான் தீர்த்துக் கட்ட வேண்டும் என்று இலக்கு வைத்தால், சிக்னல் அருகே காத்திருந்து பயன் இல்லை. அந்த வாகனம் வரும்போது பச்சை சிக்னல் விழுந்திருந்தால் அங்கு நிற்கவே மாட்டாதே. எனவே சிக்னலில் நின்று சுடுவதாக இருந்தால் யார் மாட்டினாலும் அவர்களை சுடுவது என்ற எண்ணத்தில்தான் காத்திருக்க வேண்டும்.

பச்சை உடையில் அதிகாரிபோல யார் தென்பட்டாலும் சுடுவது என்று திட்டமாக இருக்கலாம். அதன்மூலம் பாதுகாப்பு அதிகாரிகளை கலக்கமடையச் செய்வதும், அவர்களது பாதுகாப்புக்காகவும் படையினர் மேலதிகமாக தேவைப்படும் நிலையை உருவாக்கவும் புலிகள் நினைக்கின்றனர்.

## புது உத்தி

ஒரு அதிகாரியை சுட்டால் இருக்கிற சகல படை அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு தந்தாகவேண்டும். அவர்களது வீடுகளுக்கு, வாகனங்களுக்கு என்று பலரை பாதுகாப்புக்கு நிறுத்த வேண்டியிருக்கும்.

இதுவரை முக்கிய தளபதிகளுக்கு மட்டும்தான் உயர் பாதுகாப்பு தரப்படுகிறது. அது தவிர சிக்னல்களிலும் படையினரை நிறுத்தி வைக்க வேண்டி இருக்கும்.

படையினரை மேலும் கொழும்புக்குள் முடக்கிவைக்கவும், தலைநகர பாதுகாப்புக்கு புதுப்புதுவிதமாக சவால் விடும் உத்திகளில் ஒன்றாகவுமே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு தரப்பு உறுதியாக நம்புகிறது. அதனால்தான் சம்பவம் நடந்த சூட்டோடு சூடாக தலைநகர சிக்னல் கம்பங்கள், சந்திகள் அருகே பொலிசாரும் படையினரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

சுட்டவர்கள் சைக்கிளில் வந்தமையால் குறிப்பிட்ட வாகனத்தை பின்தொடர்ந்து வரவும் சந்தர்ப்பம் இல்லை என்பதும் படைத்தரப்பின் கணிப்புக்கு முக்கிய காரணம்.

தலைநகரில் பெரும் தாக்குதல் ஒன்றுக்காக இவ்வாறான தாக்குதலை புலிகள் மேற்கொண்டு, கவனத்தை திசைதிருப்பப் பார்க்கிறார்களா? என்ற சந்தேகத்திலும் முடியைப் பிய்த்துக்கொண்டு இருக்கிறது பாதுகாப்பு தரப்பு.

இதற்கிடையே இன்னொரு பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி முரசுக்கு தகவல் தருகையில்; "குறிப்பிட்ட கப்டன் மீதுதான் குறி வைக்கப்பட்டிருக்கலாம். அவர் பற்றிய தகவல்களை அறிந்த புலிகள் அவரை கண்காணித்து நடமாட்டத்தை அவதானித்திருப்பர்.

அதற்கேற்ப டிக்மன் வீதிச் சந்தியில் இருவரும், கப்டன் வீட்டருகே புலிகளது உளவுப்பிரிவு நபரும் நின்றிருக்கலாம். கப்ரன் புறப்பட்டதும் செல்ஃபோன் மூலம் சுரேசுக்கு தகவல் கொடுக்க, சந்திக்கருகில் தயாராக நின்ற சுரேஸ் சுட்டிருக்கலாம். ஒருவேளை சிக்னல் விழுந்து வாகனம் நிற்காமல் சென்றால் கூட, டிக்மன் சந்தித்திருப்பத்தில் வேகமாக செல்ல முடியாது. அச்சமயம் கிரனைட் வீசி தாக்கவும் திட்டம் இருந்திருக்கலாம்" என்று கூறினார்.

கப்ரன் தரத்தில் உள்ள ஒருவருக்காக கரும்புலி தாக்குதலை பயன்படுத்துவது கரும்புலிகளது முக்கியத்துவத்தை குறைக்கும் என்பதால், பிஸ்டல் குழு மூலம் தாக்கியுள்ளனர் என்பதும் அந்த அதிகாரியின் கணிப்பு.

நிராகரிக்கப்படக்கூடிய கணிப்பாக அது தெரியவில்லை. கவசப்படைப்பிரிவு முக்கிய படைப்பிரிவு என்பதால், சிரத்தை எடுத்து அப்பிரிவு கப்ரன்மீது குறி வைத்திருக்கலாம் என்பது கணிப்பு.

எப்படியோ கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் மட்டுமன்றி பிஸ்டல் குழுத் தாக்குதல்களிலும் புலிகள் இறங்கியுள்ளனர்.

கொழும்பில் புலிகளின் முதலாவது பிஸ்டல் தாக்குதலை ஆரம்பித்து வைத்தவரும் பிரபாகரன்தான். 1979ல் பொத்துவில் எம்.பி. கனகரத்தினம், பிரபாகரன், உமா மகேஸ்வரன் ஆகியோரால் சுடப்பட்டார். படுகாயமடைந்த நிலையில் உயிர் தப்பி, அதன் காரணமாகவே பின்னர் மரணமானார்.

ஆனால், படை அதிகாரி ஒருவரை கொழும்பில் சுட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும். புலிகள் கொழும்பில் தாக்குவதை தடுக்க படையினர் வியூகம் வகுக்க, புலிகள் தங்கள் இலக்குகளையும், உத்திகளையும் மாற்றிக்கொள்கிறார்கள்.

தாக்குதலின் பின்னர் தப்பிச்சென்ற சுரேஸ் குறிபார்த்து சுடுவதில் வல்லவராம். இடம்புதிது, போக்குவரத்து மிகுந்த சாலை என்பதால் ஏற்பட்ட பரபரப்பு போன்றவை காரணமாக சிறிது தடுமாறியது கப்டனுக்கு அதிஷ்டமாகிவிட்டதாம்.

தப்பிச்சென்றவரை இதுவரை பிடிக்க முடியாதது பாதுகாப்புத் தரப்பின் பலவீனத்தையும் புலிகளின் இரகசிய வேலை முறையின் பலத்தையும் காட்டுகிறது. ••

பூமராங் என்றொரு ஆயுதம் இருக்கிறது. எதிரியைத் தாக்கிவிட்டு எறிந்தவர்களிடமே திரும்பவந்து சேரும். ஆதி காலத்தின் அதி சிறந்த ஆயுதங்களில் ஒன்று.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அரசின் இராணுவ, பொருளாதார அழுத்தங்களும் பூமராங் போன்றதுதான்.

உணவை ஆயுதமாக பயன்படுத்தவில்லை என்று அரசு மறுத்தாலும், உண்மை அதுதான்.

அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை நிவாரண வெட்டே நடக்கவில்லை என்றிருந்தார். நிவாரண நிறுத்தம் யாழுக்கு நீக்கப்படுகிறது, வன்னிக்கு தொடரும் என்கிறார் ஜனாதிபதி.

வன்னியில் இருக்கும் மக்கள் புலி மக்கள் என்பதுதான் ஜனாதிபதியின் முடிவானால் ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற கோஷம் என்னாவது? சரி போகட்டும்.

தமிழ்க் கட்சிகளும் அப்படித்தான் கருதுகின்றன. தங்களுக்கு வாக்குப்போட வன்னி மக்களை புலிகள் விடப்போவதில்லை. பின்னர் அவர்களுக்காக கவலைப்பட என்ன இருக்கிறது? என்று நினைக்கிறார்கள் போலும்.

வன்னியில் நிவாரண நிறுத்தத்தை எதிர்த்து போராட்டங்கள் வெடித்திருக்கின்றன. போராட்டங்களில் ஏராளமான சிறு பிராயத்தினரும் காணப்பட்டனர்.

புலிகளை தனிமைப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு புலிகளுக்கு புதிய தலைமுறையை சேர்த்துக் கொடுக்கப் போகிறது பொருளாதார முற்றுகை.


தங்கள் இடுப்பில் குண்டு கட்டிக் கொண்டு தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பலியாவதற்கு காரணம் கடந்த கால அரசின் நடவடிக்கைகளே என்று ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருந்தார்.

அது உண்மைதான் என்றால், இன்று அவரும் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாளை இன்னொரு ஜனாதிபதிதான் கூறவேண்டுமா?

பொருளாதார, இராணுவ முற்றுகை மக்களை தாக்கும்போது, பூமராங் போல அரசை நோக்கியே திரும்பிவரும்.

வன்னியில் புலிகளில் சேரும் புதிய உறுப்பினர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும் பூமராங்தான்.

## அதிரடி அய்யாத்துரை



**கொழும்பில் 'டெக்னிக்கான'** போலி ஆசாமிகள் நடமாட்டம் அதிகரித்துவிட்டது. தங்களை சி.ஐ.டி. என்று அறிமுகப்படுத்திக்கொண்டு சட்டை, காற்சட்டைப் பைகளை அலசுகிறார்கள். எடுத்த பணத்தை உரியவர்கள் முன் எண்ணிக்காட்டிவிட்டு: "உங்கள் பணம் எங்களுக்கு ஏன்?" என்று உரியவர்களின் சட்டைப் பையில் வைத்துவிட்டுப் போகிறார்கள். "அப்பாடா!" என்ற நிம்மதியுடன் விடுபட்ட உரியவர் பின்னர் பணத்தை எண்ணிப் பார்த்தால் பாதித்தொகை அம்பேல்! "எப்படித்தான் கண்ணுக்கு முன்னாலேயே உருவினாங்களோ?" என்று பறிகொடுத்த சோகத்தில் கூட வியக்கினமாம் சிலர்.

**வடக்கு-கிழக்கு** மாகாண கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரி ஆடுற மாட்டை ஆடிக்கறப்பவர். பாடுறமாட்டை பாடிக்கறப்பவர். ரெண்டு எழுத்தாருக்கு வாலைக்காட்டிக்கொண்டு, தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்கு 'சோப்' போட்டுக்கொண்டு, கிழக்கின் தனித்துவ தலைவருக்கு 'ஐஸ்' வைத்துக்கொண்டு அடிக்க வேண்டியதை அடிக்கிறாராம். ஆளுநர் கோபமாக இருப்பதை அறிந்து அவருக்கும் பூப்போடத் தொடங்கியுள்ளாரர்ம். "கலை உள்ளம் படைத்தவர் நம்ம ஆளுநர்" என்று போட்டிருக்கிறாராம் ஒரு போடு!

**அரச பணத்தில்** தமிழ் கலைவிழா, இலக்கியவிழா நடத்தும் அதிகாரி, அவரைப் புகழ சில கூஜாக்கள். அதிகாரியே புகழ்ந்துதான் பிழைப்பு நடத்துகிறார். அவரைப் புகழ்ந்தும் பிழைப்பு நடத்துகினம் சிலர். ஊழலால் நாறிய பெயரைக் காப்பாற்ற இலக்கியவிழா என்று ஊர்ப்பணத்தில் ஊதுபத்தி கொளுத்தியிருக்கிறார் அதிகாரி. திவாலாக்குகிறார் கஜானாவை.

**காக்கிச் சீருடைக்கு** புதிய பொறுப்பு ஏற்றிருப்பவர் மூத்த அம்மையாருக்கு அந்தக் காலத்தில் மெய்க்காப்பாளராக இருந்தவராம். அதனால் பச்சை ஆட்சியில் உச்சத் தொல்லை அனுபவித்தவராம். அதற்குக் கிடைத்துள்ள பலன்தான் உயர் அதிகாரம். ஒழுக்கமானவர், பிரச்சனைகள் இல்லாதவர் என்ற நற்பெயரும் இருக்கிறதாம்.

**பச்சைக்கட்சி நடத்தும்** மாநாட்டை தமிழ்க் கட்சிகள் யாவும் கண்டிப்பது போல அரச பத்திரிகைகள் முன்பக்கச் செய்தி வெளியிட்டன. உண்மையில் கூட்டான கட்சி சம்பந்தமானவர் மட்டும்தான் பச்சைக் கட்சியை கடும் சாடுச் சாடி அரச பேச்சாளர் மாதிரி கருத்துக் கூறினாராம். ஏனைய கட்சிகள் சில அதிகாரத் தரப்பையும் சாடினவாம். அதனைப் போடாமல் பச்சைக் கட்சியையும் தமிழ்க் கட்சிகளையும் மோதவிடுவதுபோல செய்திகள் சமைக்கப்பட்டதாம்.

**யாழ்ப்பாண நகருக்கு** முதன்மையான பாலகர் 'குடி உயர கோன் உயரும்' என்று கூறுகிறார். எத்தனையோ உயிர்களை கொடுத்த போராட்டத்தில் ஒரு கூஜா கூடத் தூக்காமல் இருந்தவருக்கு ராஜாவாக ஆசை வந்தால் யாருக்குத்தான் கோபம் வராது? ஆத்திர மூட்டிவிட்டு பின்னர் வருத்தப்பட்டு பயன் என்ன? குடி உயர கோன் உயரும்! சபாஷ், தான் உயரத்தான் அவர் ஆசைப்படுகிறார்.

**வவுனியாவில்** கழகத்தினருக்கு சீருடைத்தரப்பு கடும் நெருக்கடி கொடுக்குதாம். தாடியோடு யாரையும் கண்டால் கூப்பிட்டு நாலு சாத்துச் சாத்துகிறார்களாம். கழக ஆதரவாளர்களும் மிரட்டப்பட்டனராம். 'ரெண்டு எழுத்தார் என்றால்கூட விடுகினம், கழகம் என்றால் விடுகினம் இல்லை!' என்று நெருக்கடியின் தீவிரத்தை உரைத்தார் ஒரு கழக உறுப்பினர்.

**ஏதோ யாழ்ப்பாண** குடாவுக்கு மனமிரங்கி நிவாரண வெட்டு நிறுத்தப்பட்டது மாதிரி அம்மையாரை தமிழ்க் கட்சிகள் புகழ்ந்திருக்கின்றன. எங்கே போய் தலையை முட்டுவது? இந்தக் காலத்திலை-இத்தனை அனுபவத்தின் பின்னரும் பிரித்தாளும் கலை பற்றி தெரியாத அறிவுக்கொழுந்துகள் இருக்கும்போது, அந்தக் காலத்தில் பிரிட்டிஷ்காரன் பிரித்தாள்வதில் வெற்றி பெற்றது என்ன பெரிய காரியம்?! கண்டன அறிக்கையல்லோ உடனே விட்டிருக்க வேண்டும்?

**கப்பல் விவகாரம்** தொடர்பான அதிகாரத்தரப்பின் நடவடிக்கைகள், கப்பலில் பொருட்கள் அனுப்பிய வர்த்தகர்கள் பற்றிய தகவல்கள் போன்றவற்றை தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்களிடமும் அயலக தூதரக வட்டாரங்கள் துருவிப் பார்த்தனவாம். சம்பவம் பற்றிய முழுத் தகவலையும் தங்கள்நாட்டு தலைநகருக்கு அனுப்பிவிட்டனராம். இங்குள்ள அதிகாரத்தரப்பின் வியாக்கியானங்களுக்கு முற்றிலும் மாறான அறிக்கையாம் அது.

**பச்சைக் கட்சி** கூட்டும் மாநாட்டில் பங்குகொள்ள வேண்டாம் என்று தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்கு அதிகாரமுள்ள சிலர் அன்புக் கட்டளையிட்டுள்ளனராம். கூட்டான கட்சிப் பிரமுகர் ஒருவர்தான் தமிழ்க் கட்சிகள் பங்குபற்றாமல் தடுக்குமாறு தமக்கு நெருக்கமான அதிகாரத் தரப்பாரிடம் ஆலோசனை கூறினாராம்.

**வன்னியில் இருந்து** யாழுக்கு தடையை உடைத்துக்கொண்டு பகிரங்கமாகவே ரெண்டு எழுத்தார் உட்பிரவேசிக்கினம். கொழும்பில் என்னவென்றால், கொழும்பில் இருந்து பிளேனில்தான் யாழுக்கு ரெண்டு எழுத்தார் போகவேணும் எண்டமாதிரியும், வேறு பாதையே கிடையாது எண்டமாதிரியும் கடும் விதிகள் தொடருது. உலக்கை புகவே வழி இருக்க, ஊசிகளைத் தடுக்கினம்.

**இவ்வாரப் பொன்மொழி:**

> "நாலு நாளே பழகியிருந்தாலும்
> நல்லவன் நல்லதைச் செய்வான்!
> நாற்பது வருடம் பழகியிருந்தாலும்
> கெட்டவன் கெட்டதையே செய்வான்!"

## அரசியல் தொடர்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை.




புலிகள் இயக்க பிரதித் தலைவரும், மக்கள் முன்னணித் தலைவருமான மாத்தையா மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தார்.

மாத்தையாவிடம் கிழக்கில் உள்ள புலிகள் அங்கு தமிழ், முஸ்லிம் பிரச்சனை தொடர்பாக கூறினார்கள்.

தமிழ்ப் பெண்களை துன்புறுத்துகின்றனர். அரச படைகளுக்கு உதவிகின்றனர், கொலைகள் புரிகின்றனர் என்று புகார்கள் கூறப்பட்டு வந்தன.

இக்காலகட்டத்தில் முஸ்லிம் ஊர் காவல் படைகள் பற்றி புலிகளின் வெளியீடுகளிலும் குற்றம்சாட்டப்பட்டு வந்தது.

முஸ்லிம்களை தூண்டிவிட்டு கிழக்கில் தமிழ் மக்களை ஒழித்துக்கட்டுவதே பிரேமதாசா அரசின் நோக்கம் என்று புலிகள் கூறிவந்தனர்.

தான் காத்தான்குடிப் படுகொலைக்கு காரணம் என்பதை சுட்டிக் காட்டிய அந்த அறிக்கையில் புலிகள்மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இக் கட்டத்தில் குமார் பொன்னம்பலம், மோதிலால் நேரு ஆகியோர் குறிப்பிட்ட அறிக்கையுடன் தாம் முரண்படுவதாகக்

கிறதோ அவர்களுடன் ஒட்டிக் கொள்வீர்கள்" என்றார்.

இக்கட்டத்தில் விவாதம் சூடுபிடித்தது. அந்தச் சூட்டைத் தணிக்க சிற்றுண்டி வகைகளும், குளிர்பானம், தேனீர் ஆகியனவும் பரிமாறப்பட்டன.

காத்தான்குடிப் படுகொலையை சுவையான சிற்றுண்டிகளை ஒரு கைபார்த்தபடி கட்சிகளின் பிரதிநிதிகள் தொடர்ந்து விவாதித்தனர்.

### கூட்டணி நழுவல்

காத்தான்குடி படுகொலையை யார் செய்தார்கள்? என்று குறிப்பிடாமல் பொதுவான கண்டனமாக தெரிவித்தால் அதில் கையொப்பமிடலாம் என்று கூறினர் தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள்.

# காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகள்

கிழக்கில் முஸ்லிம்கள்மீதான பாரிய தாக்குதல் ஒன்றுக்கு மாத்தையா அனுமதியளித்தார்.

எனினும் பிரபாகரனின் அனுமதியைப் பெறாமல் அத்தகைய பாரிய தாக்குதலுக்கு மாத்தையா துணிந்திருப்பாரா என்பது சந்தேகம்தான்.

03.08.90 அன்று இரவு காத்தான்குடி மீரா ஜும்மா பள்ளிவாசலிலும், ஹுசைனியா தைக்காவிலும் இரவு நேர 'இஷா' தொழுகை நடந்து கொண்டிருந்தது.

அடுத்து தங்களுக்கு நேரப்போகும் பயங்கரத்தை உணராமல் தொழுகையில் ஆழ்ந்திருந்தனர் முஸ்லிம்கள்.

திடீரென்று அங்கு தோன்றினர் புலிகள். துப்பாக்கிகளும், வாள், கத்திகள், இரும்புக் கம்பிகள் முதலான ஆயுதங்களும் அவர்கள் கைகளில் இருந்தன.

தப்பியோட முனைந்தவர்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். வெட்டிக் கொல்லப்பட்டவர்களே அதிகம். தொழுகையில் ஈடுபட்டவர்கள் உட்பட 103 பேர் கொல்லப்பட்டனர். பள்ளிவாசலிலும், தைக்காவிலும் இரத்தம் விளிம்பு கட்டி நின்றது.

எங்கும் மரண ஓலங்கள் எதிரொலித்தன. பெரியவர்கள், சிறியவர்கள் ஆண்கள், பெண்கள் என்ற பாகுபாடு இல்லாமல், புலிகளின் ஆயுதங்கள் ஓங்கி இறங்கின.

படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியாக இருந்தும் இந்த இரவு வேட்டை நடந்து முடியும்வரை படையினர் அப்பக்கம் எட்டியும் பார்க்கவில்லை.

படையினர் வந்தால் தடுத்து நிறுத்தவும் புலிகளின் அணிகள் தயாராக நிறுத்தப்பட்டிருந்தன.

ஏ.பாக்கீர் மொஹைர்டீன் (வயது 65), எம்.எம்.சஹாப்டீன் ஹாஜியார் (60), எஸ்.எம்.எம்.முஸ்தபா (72), எஸ்.எம்.எம்.ஹயாத்து ஹலாந்தர் (60), எம்.முஹமட் ஹாஜியார் (70) போன்ற வயோதிபர்களும் படுகொலையானோரில் அடங்குவர்.

எம்.எம்.அசனார் (09), வை.எல்.எம்.ஜுனைடின் (01), ஏ.எல்.அபுல் ஹசன் (12), எம்.எல்.எம்.தஹியா (08), எஸ்.எம்.அக்ரம் (06), எம்.சி.எம்.நிஸ்வான் (10), எம்.ஐ.அஷ்ரப் (11), எஸ்.ஏ.எம்.இம்தியாஸ் (09) ஆகிய சிறு பிராயத்தினரும் கொல்லப்பட்டோரில் அடங்குவர்

புலிகள் இயக்க முக்கியஸ்தரும், புலிகளின் மக்கள் முன்னணி பிரதித்தலைவருமான கரிகாலன்தான் தாக்குதல் குழுவுக்கு தலைமை தாங்கியிருந்தார். மட்டக்களப்பு நகர பொறுப்பாளர் ரஞ்சித், நியூட்டன் ஆகியோரும் முக்கிய பங்கு வகித்தனர்.

### கண்டனம்

காத்தான்குடிப் படுகொலையை அடுத்து கொழும்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

கொழும்பில் உள்ள அஷ்ரப்பின் இல்லத்தில் முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்க்காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப், கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி, ரெலோ, ஈ.என்.டி.எல்.எஃப் ஆகிய கட்சிகளின் தலைவர்களும், முக்கியஸ்தர்களும் கூடினார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக பிரேமச்சந்திரன், அபுயூசுப், ரெலோ சார்பாக கருணாகரன் (ஜனா), எஸ்.திவ்வியநாதன், ஈ.பி.டி.பி. சார்பாக டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் நடராஜா, சிவதாசன், ஈ.என்.டி.எல்.எஃப் சார்பாக கனகராஜன், யசோதரன், தமிழ்க் காங்கிரஸ் சார்பாக குமார் பொன்னம்பலம், மோதிலால் நேரு ஆகியோரும் கூட்டணி சார்பாக நீலன் திருச்செல்வம், மாவை சேனாதிராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அஷ்ரப் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். விடுதலைப் புலிகள்



ரஞ்சித், நியூட்டன், கரிகாலன்

அதன்பின்னர் அஷ்ரப்பும் முஸ்லிம் காங் கிரசும் தமிழ்க் காங்கிரசுடனும், ஈ.பி.டி.பி. யுடனும் தனியாகத் தொடர்பு கொண்டு கையொப்பம் பெற முனைந்தது.

### புலிகள் மறுப்பு

காத்தான்குடி படுகொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகளின் மக்கள் முன்னணி மறுப்பறிக்கை விட்டிருந்தது.

அரசும், அதன் ஆதரவுடன் இயங்கும் தமிழ்க் குழுக்களும் காத்தான்குடிப் படுகொலையில் சம்பந்தப்பட்டுள்ளதாக புலிகள் சந்தேகம் தெரிவித்தனர்.

இலண்டன் பி.பி.சி.வானொலி காத்தான்குடிப் படுகொலைகளை மறைமுகமாக நியாயப்படுத்தியது.

ஸ்ரீலங்கா தகவல் தொடர்பு சாதனங்கள் தமிழ் மக்களின் படுகொலைகளை மூடி மறைத்தும், முஸ்லிம் மக்களின் படுகொலைகளை பகிரங்கப்படுத்தியும் வருவதாக பி.பி.சி கூறியது.

விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பாக அல்லாமல், புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரிலேயே மறுப்பறிக்கை விடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது;

"தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே இனக்கலவரத்தை தூண்டிவிட சிறீலங்கா இராணுவம் சில ஆயுதக் குழுக்களை திட்டமிட்டு பயன்படுத்தி

பதற்றமடைந்த மக்கள் கூட்டம் கூட்டமாக பள்ளிவாசல் நோக்கிச் சென்றனர்.

பள்ளிவாசல் நோக்கி சென்று கொண்டிருந்த பொதுமக்கள் ஆங்காங்கே மறைந்து நின்ற புலிகளால் தாக்கப்பட்டனர்.

தப்பியோட முடியாதபடி சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்டனர். சுட்டும், வெட்டியும் பலர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு வாவி முடிவுறும் ஏறாவூர் ஆற்றங்கரை கிராமத்தில் இருந்து வடக்காகச் செல்லும் நேரான உள்வீதியான சதாம் ஹுசைன் கிராமம்வரை படுகொலைகள் நடந்தன.

130 பேர் வரையான முஸ்லிம்கள் படுகொலையானார்கள். இத் தாக்குதலின் போதும் காத்தான்குடிப் படுகொலையில் சம்பந்தப்பட்ட அணியே பங்கு கொண்டிருந்தது.

**அற்புதன் எழுதுவது**

தாக்குதல் நடத்திய புலிகளின் அணியில் முஸ்லிம் உறுப்பினர்களும் இருந்தனர்.

12.08.90 அன்று விடிந்தபோது ஏறாவூர் முஸ்லிம் பகுதிகள் எங்கும் இரத்தம் வழிந்தோடியது.

படுகொலை நடந்த பகுதியில் என்ன நடக்கிறது என்று பார்வையிடுவதற்காக புலிகள் இயக்க முஸ்லிம் உறுப்பினர்கள் புன்னைக்குடா வீதியில் வைத்தியசாலை வரை சென்று திரும்பினர். அந்த உறுப்பினர்களும் ஏறாவூரைச் சேர்ந்தவர்களே.

### கரிநாள்

ஏறாவூர் படுகொலைகளை அடுத்து கரிநாள் அனுஷ்டிக்க முஸ்லிம் காங்கிரஸ்

# பள்ளிவாசலில் சிந்திய குருதி

கூறினார்கள்.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் தமிழர் படுகொலைகள் தொடர்பாக அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அதனைக் குறிப்பிடாமல் இருப்பது சரியல்ல என்று மோதிலால் நேரு குறிப்பிட்டார்.

குமார் பொன்னம்பலம் ஒரு கேள்வியை எழுப்பினார்; "மேற்படி கொலைகள் நடைபெற்ற பகுதி அரச படையினரின் கட்டுப்பாட்டில்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புக்கும் குமார் பொன்னம்பலம், மோதிலால் நேரு ஆகியோருக்கும் நல்லுறவு நிலவிய நேரம் அது.

அதனால் அவர்களையும் அனுசரித்துக் கொண்டு செல்லவே அஷ்ரப் விரும்பினார்.

புலிகளைக் குறிப்பிடாமல் கண்டிக்க உடன்பட்டார். ஏனைய கட்சிகளும் ஒருவிதமாக சம்மதித்தன.

வருகிறது.

சிறீலங்கா அரசின் சதிவேலைகள் தொடர்பாக விழிப்பாக இருக்கும்படி முஸ்லிம் மக்களையும், தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்கிறோம்" என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

### ஏறாவூரில் பாய்ச்சல்

மட்டக்களப்பில் காத்தான்குடி படுகொலை

11.08.1990இல் ஏறாவூரில் நடைபெற்ற கொலைகளின் பின்னர் எடுக்கப்பட்ட பட்டியல்

| கி.சே. பிரிவு | கொலை | | கடத்தல் | | காயம் | | விதவை | | அனாதை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குடும்பம் | ஆட்கள் | குடும்பம் | ஆட்கள் | குடும்பம் | ஆட்கள் | குடும்பம் | ஆட்கள் | குடும்பம் | ஆட்கள் |
| 1. ஏறாவூர்-01 | 03 | 03 | 04 | 04 | 03 | 04 | 05 | 05 | 04 | 09 |
| 2. ஏறாவூர்-02 | 04 | 04 | 08 | 08 | 02 | 02 | 06 | 06 | 06 | 19 |
| 3. ஏறாவூர்-03 | 24 | 37 | 07 | 08 | 11 | 12 | 08 | 08 | 12 | 40 |
| 4. ஏறாவூர்-06 | 22 | 27 | 05 | 05 | 08 | 08 | 12 | 12 | 13 | 42 |
| 5. மீராகேணி | 09 | 32 | 01 | 02 | 03 | 03 | 02 | 02 | 02 | 07 |
| 6. ஐயங்கேணி | 19 | 26 | 03 | 03 | 11 | 14 | 06 | 06 | 06 | 22 |
| 7. மிச் நகர் | 01 | 01 | 06 | 06 | - | - | 02 | 02 | 03 | 07 |
| மொத்தம் | 82 | 130 | 34 | 36 | 38 | 43 | 41 | 41 | 46 | 146 |

உள்ள பகுதியாகும். அப்படியிருக்கும்போது விடுதலைப் புலிகள்தான் இதனைச் செய்தனர் என்று எந்த ஆதாரத்தின் அடிப்படையில் கூறுகிறீர்கள்" என்று கேட்டார்.

கரிகாலன், நியூட்டன் ஆகிய புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் தாக்குதலின்போது காணப்பட்டுள்ளனர். மக்கள் கண்டுள்ளனர் என்று அஷ்ரப் கூறினார்.

"இருட்டான நேரத்தில் அத்தனை தெளிவாக இனம் கண்டது எப்படி?" என்று குறுக்காக கேள்வி தொடுத்தார் குமார் பொன்னம்பலம்.

அந்த நேரத்தில் அபுயூசுப் தமிழ்க் காங்கிரஸ் புலிகளுக்கு பயந்து பரிந்து பேசுவதாகக்கூற மோதிலால் சூடாகிவிட்டார்.

"இந்தியப் படைகள் தமிழர்களைக் கொல்லும்போது நீங்கள் அமைதியாக இருந்தீர்கள். எவர் கையில் அதிகாரம் இருக்

ஈ.பி.டி.பி மட்டும் உறுதியாக மறுத்து விட்டது. படுகொலைக்கு யார் காரணம் என்று குறிப்பிட்டால் மட்டுமே கையொப்பம் போடுவோம் என்று ஈ.பி.டி.பி சார்பாக ரமேஷ் நடராஜா கூறினார்.

யார் காரணம் என்று கூறாமல் கண்டிப்பதைவிட கண்டிக்காமல் இருக்கலாம் என்று கூறியது ஈ.பி.டி.பி.

இக் கட்டத்தில் கூட்டணிப் பிரதிநிதிகள் நைசாக நழுவினார்கள். புலிகளை நேரடியாகக் குற்றம்சாட்டினால் கையொப்பம் போட அவர்களும் தயாராக இருக்கவில்லை.

விவாதம் சூடாக நடந்த சமயத்தில், "அறிக்கையை அனுப்புங்கள் ஏற்புடையதாக இருந்தால் கையொப்பம் போடுகிறோம்" என்று கூறிவிட்டு நழுவிவிட்டனர்.

இந்நிலையில் முடிவு எதுவும் எடுக்கப்படாத நிலையிலேயே கூட்டம் கலைந்தது.

கள் தொடர்பான அதிர்ச்சிகள் மறையும் முன்னரே, பள்ளிவாசல்களில் ஓடிய குருதியின் ஈரம் காயுமுன்னரே மற்றொரு படுகொலை அரங்கேறியது.

காத்தான்குடி படுகொலைகள் நடந்து முடிந்து சரியாக ஐந்து நாட்களுக்குள் மட்டக்களப்பு ஏறாவூரில் படுகொலைகள் விரிந்தன.

"11.08.90 அன்று இரவு பி.பி.சி. வானொலியைக் கேட்டுக் கொண்டிருந்த போது முதலாவது வெடிச்சத்தம் காதில் விழுந்தது" என்கிறார் ஏறாவூர் கிராமவாசி ஒருவர்.

பள்ளிவாசலுக்குள் இருந்த ஒலிபெருக்கியில், "கிராமத்திற்குள் கொள்ளையர்களும், சதிவேலைக்காரர்களும் புகுந்துவிட்டனர். பொதுமக்கள் அனைவரும் பள்ளிவாசலுக்கு வாருங்கள்" என்று புலிகள் அறிவிப்புச் செய்தனர்.

முடிவெடுத்தது.

ஈ.பி.டி.பி மட்டுமே கரிநாள் அனுஷ்டிப்புக்கு ஆதரவு தெரிவித்த ஒரேயொரு தமிழ்க்கட்சியாகும்.

காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளை ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகிய கட்சிகள் புலிகள்மீது குற்றம் சாட்டி கண்டித்தன. ஆனால் கரிநாள் அனுஷ்டிப்பில் பங்கு கொள்ள மறுத்து விட்டன.

ஈ.பி.டி.பி கரிநாளை ஆதரித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

கொழும்பில் கொட்டாஞ்சேனை விவேகானந்தா முகாமில் இருந்த தமிழ் அகதி முகாமை கரிநாளன்று தாக்குவதற்கு முஸ்லிம் குழுவினர் முயன்றனர்.

அம் முகாம் ஈ.பி.டி.பி.யின் பொறுப்பின்கீழ் அப்போது இருந்தது. முஸ்லிம் குழுவினர் முகாமை தாக்க முற்படுவதை ஈ.பி.டி.பி.யினர் தடுத்தனர்.

கிழக்கில் கரிநாள் தினத்தில் பிரச்சனைகள் எழாமல் இருக்க பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளுக்கு முன்னரும் முஸ்லிம் குழுக்கள் சில தமிழ் மக்களை கொலை செய்வதில் ஈடுபட்டிருந்தன.

காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளுக்குப் பின்னரும் அக்குழுக்கள் வேட்டை நடத்தின. எண்பதுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

முஸ்லிம் அமைப்பான ஜிகாத் இக் கொலைகளில் முக்கிய பங்குவகித்தது.

### மன்னார் தாக்குதல்

மன்னாரிலும், மாங்குளத்திலும் பாரிய தாக்குதல்களை புலிகள் நடத்தினார்கள்.

படை முகாம்கள்மீது நடத்தப்பட்ட அத்தாக்குதல்கள் பற்றி அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)

# செம்மணி புதைகுழிகள் தடயங்கள் தப்புமா?

**அலசுவது- இராஜதந்திரி**

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் அரசு காண்பித்துவரும் தாமதங்களும், வெளியிட்டுவரும் கருத்துக்களும் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளன.

கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கில் 03.07.98 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் ஒருவரான ராஜபக்ஷ தனது மரண வாக்கு மூலம் போல கூறிய தகவல்கள் உலகெங்கும் அதிர்ச்சி தரத்தக்க தகவல்களாக அமைந்திருந்தன.

ஆனால் இலங்கை அரசு அத் தகவல்களை புறக்கணித்து அந்த வாக்கு மூலத்தையும் புதைகுழிக்கு அனுப்பவே முயற்சித்தது.

பாதுகாப்பு வழங்குவதாக அறிவிக்கப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழிகளுக்கு யார் காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறதோ, அவர்களிடமே பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாலைக் காய்ச்சி பூனையை காவல் வைப்பது போன்ற அணுகுமுறையாகவே இது அமைந்திருக்கிறது.

மக்கள் நடமாட மட்டும் தடை போட்டுவிட்டு, குற்றம் சாட்டப்படுபவர்களிடமே அப்பகுதியை ஒப்படைத்தமை தடயங்களை அகற்றும் முயற்சி என்று சந்தேகிக்க ஏதுவானதேயாகும்.

கிடையாது என்றும் அவர் கூறியிருந்தார்.

'சிறை அதிகாரிகள் பார்க்கும்போது கடிதம் ஒன்றை ராஜபக்ஷ தன் வாய்க்குள் திணித்ததாகவும், அதனை வாய்க்குள் இருந்து கிண்டி எடுத்தனர்' என்றும் ஜி.எல்.பீரிஸ் கூறியிருந்தார்.

நீதியமைச்சரின் அறிக்கை ராஜபக்ஷவை சந்தேகத்துக்குரிய ஒருவராக சித்தரித்திருந்தது. அப்படியே போனால் அது எதிர்க்கட்சி எழுதிய கடிதம்தான் என்றும் கதையை கொண்டுபோயிருப்பார்களோ தெரியவில்லை. அவ்வாறு கூறி ராஜபக்ஷவை ஐ.தே.கட்சியின் கையாள் என்று அரசியல் சாயம் பூசியிருந்தால்கூட ஆச்சரியப்பட இடமில்லை.

அமைச்சர்களைக் கொண்ட இக்குழுவுக்கு உண்மையைக் கண்டறிய அக்கறை இருக்குமானால் மூக்கைச் சுற்றி தொடுவானேன்? நேராகச் சிறைக்கு சென்று ராஜபக்ஷவை அழைத்து விபரம் கேட்க முடிந்திருக்கும்.

ராஜபக்ஷமீதான தாக்குதல் செம்மணி புதைகுழி விவகாரத்தை அரசே மூடிமறைக்கும் முயற்சி என்பது வெகுவிரைவாக அம்பலமானதால், அதனை திசைதிருப்பவும், அரசின் பெயரை காப்பாற்றவுமே தொல்லை தவிர்ப்புக் குழுவும், அரசின் மனித உரிமை குழுவும்

எனவே, செம்மணி புதைகுழிகளைத் தோண்டுமாறு தற்போதும் அரசிடமோ, ஜனாதிபதியிடமோ கோரிக்கை விடுப்பது அர்த்தமற்றதாகும்.

இரண்டு மாதத்தின் முன்பாக செம்மணி புதைகுழி தொடர்பாக அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது வேறு விடயம். ஆனால் புதை குழி விவகாரத்தை மூடிமறைக்க ஆட்சியாளர்களும் அக்கறை காட்டுவது அம்பலமான பின்னர், அதே அரசின் கையில் புதைகுழிகளை தோண்டும் பொறுப்பை ஒப்படைப்பது முறையாகாது.

மரணத்தின் வாயிலில் நிற்கும் ஒருவரிடம் கடைசியாக பெறப்படும் வாக்குமூலத்தை வழக்கு விசாரணைகளில் முக்கியமான ஒன்றாக கொள்வதுண்டு.

மரண தண்டனைக் கைதியான ராஜபக்ஷவின் வாக்குமூலமும் கிட்டத்தட்ட அதுபோன்றதேயாகும்.

ஆனால் அரசும் அதன் முக்கிய அமைச்சர்களும் அந்த வாக்குமூலத்தை மேலதிகாரிகளை மாட்டிவிடும் எண்ணத்தில் கூறப்பட்ட ஒன்றாக வலிந்து சித்தரிக்க முயன்றிருந்தனர்.

இத்தனைக்கும் ராஜபக்ஷ உட்பட கிருஷாந்தி கொலை வழக்கின் எதிரிகளுக்கு அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் மரணதண்டனை வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறிருக்கையில் செம்மணி புதைகுழிகள் பற்றிய வாக்குமூலத்தை மட்டும் பொய்யானது என்று அரசும், அதன் முக்கிய அமைச்சர்களும் சித்தரித்தது அந்த வாக்குமூலத்தையும், உண்மைகளையும், புதைகுழிக்கு அனுப்பும் முயற்சி போன்றதேயாகும்.

நீதிமன்றத்தில் நின்று செம்மணி புதைகுழிகள் தொடர்பாக ராஜபக்ஷ தகவல் வெளியிட்டு இரண்டு மாதங்கள் முழுதாக கடந்துபோயுள்ளன. இந்த இரண்டு மாதங்களில் ஆட்சியாளர்களின் அணுகுமுறைகளில் உண்மைகளை வெளிக்கொண்டுவரும் ஆர்வத்தை காணமுடியவில்லை.

மிகப்பெரும் அவலத்தை உலகம் அறியப்போகிறதே என்ற அச்சத்தில், புதைகுழி விவகாரத்ததை பொய்யாக்கும் காரியங்கள் திரைமறைவில் நடந்து வருகின்றனவா என்ற சந்தேகம் பரவலாக எழுந்திருக்கிறது.

அந்த சந்தேகத்திற்கான காரணங்கள் பின்வருமாறு:

1. அனாவசியமாக கடத்தப்பட்டுள்ள இரண்டு மாத காலங்கள்.
2. செம்மணி வீதியில் பொதுமக்கள் நடமாட விதிக்கப்பட்ட தடை.
3. சிறையில் ராஜபக்ஷவை தாக்கியமையும், வாக்குமூலத்தை மறுக்க நிர்ப்பந்திக்கப்பட்டமையும், அதன் பின்னணியில் அமைச்சர் ஒருவர் இருந்ததாகக் கூறப்படுவதும்.
4. சிறைத் தாக்குதலை மறுத்து அமைச்சர் பீரிஸ் விடுத்த அறிக்கை.

செம்மணியில் புதைகுழிகள் இருப்பதாக ராஜபக்ஷ கூறிய கையோடு, அப்பகுதியில் சர்வகட்சி பிரமுகர்கள், மனித உரிமை குழுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய கண்காணிப்பு குழுவை நியமித்து அப்பகுதிப் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்தி இருக்கவேண்டும்.

கிட்டத்தட்ட ஒரு மாத காலம் அரசு பாதுகாப்பு வழங்கவே முன்வராமல் இருந்தது. பல்வேறு அமைப்புக்களும் குரல் கொடுத்த பின்னரே செம்மணிப் பகுதிக்கு

இத்தகைய பாரதூரமான விடயத்தில் அரசு தன் நம்பகத்தன்மையை நிரூபிக்கத் தவறியுள்ளது. இவ் விவகாரம் கிளம்பிய நாளில் இருந்தே அரசின் செயற்பாடுகள் காலத்தை இழுத்தடிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.

புதைகுழிகள் உள்ள பகுதிக்கு ராஜபக்ஷவை அழைத்துச் செல்வதற்கான உத்தரவை வழங்க நீதியமைச்சு ஒருமாதகாலத்தை விழுங்கியிருந்தது.

அதிகாரிகள் குழு செம்மணி செல்வதற்கான உத்தரவை வழங்குவதற்கு சட்டமா அதிபருக்கு கிட்டத்தட்ட இரண்டு மாத காலம் தேவைப்பட்டுள்ளது.

ஆகக்கூடியது ஒருவார காலத்திற்குள் துரிதமாக முடிவெடுத்து புதைகுழி விவகாரத்தை ஆராய்ந்து பார்ப்பது அரசுக்கு கடினமானதல்ல. ஆனால் அதிகாரிகள் குழுவுக்கு அனுமதி வழங்க மட்டுமே இரண்டு மாதங்களை இழுத்திருக்கின்றனர்.



இந்த நாட்டுக்குள்ளேயே நீதியை பாதுகாக்க ஏற்பாடுகள் இருப்பதுபோல பரபரப்புக் காட்டிவருகின்றன.

இதற்கிடையே அரசின் மனித உரிமைக் குழுவைச் சேர்ந்த யாழ்மாவட்ட அதிகாரிகளுக்கு திடீர் இடமாற்ற உத்தரவு கிடைத்திருக்கிறது.

அரசின் மனித உரிமைக் குழு அரசிற்கு கோரிக்கை விடுப்பதுபோல நடிக்கலாம். ஆனால் அரசுக்கு உண்மையாகவே தலையிடி கொடுப்பதாக அந்த நடிப்பு இடம்பெற்றுவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதில்தான் பிசகிவிட்டனர் மனித உரிமைக் குழுவின் யாழ்மாவட்ட அதிகாரிகள். அரசுக்கு உடன்பாடில்லாத புதைகுழி

அதேபோல அரசும் தனது நம்பகத்தன்மை இவ்விவகாரத்தில் கேள்விக்குள்ளாகியிருப்பதால், இவ்விவகாரத்தை சர்வதேச நிபுணர் குழுவிடம் கையளிப்பதே சரியானதாக அமையும்.

சர்வதேச நிபுணர் குழுவை கோருவதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன.

1) மீட்கப்படும் எலும்புக்கூடுகள் சேதாரம் இன்றி இருப்பதற்கு, தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் தேவை.

2) சமீபகாலத்தில் அப்பகுதியில் புதைகுழிகள் தோண்டப்பட்டு உள்ளிருந்த தடயங்கள் அகற்றப்பட்டதா? என்பதையும் முக்கியமாக ஆராய வேண்டும். இரண்டுமாத கால இழுத்தடிப்பால் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை தீர்க்க வேண்டுமானால், புதை குழிகளை தோண்டமுன்னர், ஏற்கனவே புதை குழிகளில் இருந்து தடயங்கள் அகற்றப்பட்டுள்ளனவா என்பதையே பிரதானமாக கண்டறிய வேண்டியுள்ளது.

## தேவை; சர்வதேச நிபுணர் குழு!

இவற்றின் காரணமாகவே சந்தேகங்கள் எழுந்துள்ளன. குறிப்பிட்ட கால இழுத்தடிப்பு என்பது, தடயங்களை அகற்றுவதற்கும், ராஜபக்ஷவின் மனதை சாம,பேத,தான,தண்ட முறைகளால் மாற்றுவதற்கும் எடுத்துக் கொள்ளப்பட்ட கால அவகாசமோ? என்ற கேள்விகள் மக்களிடையே எழுந்துள்ளதையும் அவதானிக்ககூடியதாகவுள்ளது.

சூரியகந்த புதைகுழிகளைக் கூறி ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் நடத்தியவர் ஜனாதிபதி சந்திரிக்கா.

இன்று அவரது ஆட்சியில் செம்மணிப் புதைகுழிகள் பூதாகரமாக உருவெடுத்துள்ளன. அதனைப் பற்றிய தகவல்களை கூறிய ராஜபக்ஷவிற்கு சிறைச்சாலையில்கூட பாதுகாப்பில்லை என்பது தெளிவாகியுள்ளது.

சிறையில் வைத்து ராஜபக்ஷமீது நடத்தப்பட்ட தாக்குதலும், செம்மணியில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாக கூறியது பொய் என்று அவரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு கையாளப்பட்ட நிர்ப்பந்தமும், புதைகுழி விவகாரத்தை மூடிமறைக்க ஆட்சியாளரும் முன் நிற்பதையே அம்பலமாக்கியுள்ளது.

அதுமட்டுமன்றி பொறுப்பான அமைச்சர் ஒருவரே குறிப்பட்ட பொய் வாக்குமூலத்தை பெறுவதற்கான உத்தரவை வழங்கியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்ட அறிக்கையும் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்திருக்கிறது. ராஜபக்ஷ தாக்கப்படவில்லை என்றும், சிறையில் நடந்த சம்பவத்திற்கும் செம்மணி விவகாரத்திற்கும் இடையே ஒரு தொடர்பும்

நடந்த சம்பவத்திற்கு நேர்மாறாக பொறுப்பான அமைச்சர்களே அறிக்கை விடும்போது, எதுவும், எப்படியும் நடக்கலாம் என்பதை எதிர்பாக்கவே வேண்டியுள்ளது.

ஆனாலும், உண்மையை மறைக்க முடியவில்லை. சர்வதேச மன்னிப்புச் சபைவரை உண்மை சென்றதால், இலங்கை அரசின் மனித உரிமை ஆணைக்குழுவும் உண்மையை மேலோட்டமாக வெளியே கூறவேண்டியதாகியது.

'மனநிலை தெளிவாக இல்லாத நிலையில்தான் செம்மணியில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாக கூறினேன்' என்று எழுதிய காகிதத்தில் கையொப்பம் போடுமாறு சிறை அதிகாரிகள் ராஜபக்ஷவை நிர்ப்பந்தித்தனர்.

ராஜபக்ஷ அதனைப் பறித்து தன்வாய்க்குள் திணித்தார். உடனே அவரது நெஞ்சிலும், வாயிலும், கண்ணருகிலும் தாக்கியுள்ளனர். தொண்டையை நசித்தனர். 'உண்மையைச் சொன்னால் உயிரோடு விடமாட்டோம்' என்றும் எச்சரித்துள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபை உண்மையை உலகறியச் சொன்ன பின்னரே, நடந்தது என்னவென்று விசாரிப்பதாக கூறியிருக்கிறார் நீதியமைச்சர் பீரிஸ்.

அவரது முன்னைய அறிக்கை தீர விசாரிக்காமல் வெளியிடப்பட்ட ஒன்று என்று அவரே ஏற்றுக்கொண்டதுபோல ஆகிவிட்டது.

இதற்கிடையே அரசின் தொல்லை தவிர்ப்புக் குழு சிறைச் சம்பவத்திற்கு மிகக் கரிசனையுடன் விளக்கம் கேட்டுள்ளது. தாக்கியவர்களிடமே விளக்கம் கேட்கும்போது, தவறாகத் தாக்கிவிட்டோம் என்று அவர்கள் கூறப்போவதில்லை.

தோண்டும் விவகாரத்தில் அவர்களது வாய் கொஞ்சம் நீளமானதை ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

குறிப்பாக யாழ் மாவட்ட பாதுகாப்பு தரப்பினருக்கும் மனித உரிமைக் குழு அதிகாரிகளது போக்கு பிடிக்கவில்லை என்று தெரியவருகிறது.

அரசின் மனித உரிமைக்குழு மட்டுமன்றி அரசினால் நியமிக்கப்படும் எக்குழுவிலும் அரசுக்கு விசுவாசமானவர்களாக கருதப்படுவோரே இடம்பெறுவர். அவர்களில் சிலர் சற்று நீதியுடன் நடக்க முற்பட்டு, அரசுக்கு தலைவலி கொடுப்பார்களேயானால் மாற்றப்பட்டுவிடுவர் என்பதை முன்பே இப்பகுதியில் கூறியிருந்தோம்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட அதிகாரிகளுக்கு நேர்ந்துள்ள கதியானது, மனித உரிமை குழு சுயாதீனமானது, சுதந்திரமானது என்பதெல்லாம் பொய்யானதே என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது.

மேற்படி இடமாற்றம் என்பது கூர்ந்து நோக்கப்படவேண்டிய ஒன்றேயாகும். செம்மணி புதைகுழி விவகாரத்தை படையினருடன் தொடர்பான விடயமாகவும், அரசுக்கு தொடர்பில்லாத விடயம் போலவும் தமிழ்க் கட்சிகள் சித்தரிக்க முனைகின்றன. ஆனால் இவ்விவகாரத்தில் அரசு எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் அத்தகைய சித்தரிப்புக்களை தகர்த்தெறிந்து வருகிறது.

மனித உரிமை ஆணைக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒன்று என்பதும், ஜனாதிபதியின் அனுமதி இன்றி இடமாற்றங்கள் செய்யமுடியாது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

போர் பகுதிகளில் விமானங்களை செலுத்தவும், தமது படையினருக்கு பயிற்சி அளிக்கவும் வெளிநாட்டு நிபுணர்களை இலங்கை அரசு பயன்படுத்தியே வருகிறது.

தங்கள் யுத்த வெற்றிக்காகவும், தங்கள் செயலை நியாயப்படுத்தவும் சர்வதேச நிபுணர்கள், சர்வதேச பொலிஸ் உதவிகளை நாடும் ஆட்சியாளர்கள், மிகப் பாரதூரமான மனிதப் படுகொலை விவகாரத்தில் சர்வதேச நிபுணர்களது உதவியை நாட மறுத்துவருகின்றனர்.

இவற்றை சுட்டிக்காட்டி சர்வதேச ஆதரவை திரட்ட முடியாத தமிழ்க் கட்சிகள், புதைகுழி விவகாரத்தில் மறைமுகமாக அரசுக்கு உதவுகின்றன.

இனிமேலும் ஜனாதிபதியிடமோ அரசிடமோ, புதைகுழி விவகாரம் தொடர்பாக விசாரணை கோருவதும், தோண்டுமாறு கேட்டதும், இந்த இரண்டு மாத காலத்தில் நடந்ததாக எழுந்துள்ள பாரதூரமான சந்தேகங்களை மூடிமறைக்க துணை போவது போலாகிவிடும்.

"சர்வதேச நிபுணர் குழுவை அழைத்து புதைகுழிகளை ஆராய வேண்டும்!" என்ற கோரிக்கை மட்டுமே இன்றைய நிலையில் உண்மைகளை வெளிக்கொணரும் அக்கறையுடைய அமைப்புக்களது கோரிக்கையாக இருக்க முடியும்.

சர்வதேச நிபுணர்குழு வரும்வரை குறிப்பிட்ட பகுதியை சர்வ கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு கண்காணிக்கவேண்டும். ஆய்வின்போது அக்குழுவும் கூடவே இருக்கவேண்டும். உண்மைகள் மூடிமறைக்கப்படவில்லை என்பதை நிரூபிக்க இத்தகைய நடவடிக்கைகளே தேவையாகும்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

தமிழ்க் கட்சிகள் சில தீவிர பிரார்த்தனையில் இருக்கின்றன. செம்மணியில் புதைகுழிகளை தோண்டினால் அங்கு மண் வரவேண்டுமே தவிர, மனித உடல்கள் வரக்கூடாது என்பதுதான் பிரார்த்தனை.

அரசாங்கமும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அஞ்சுவதைவிட, தமிழ்க்கட்சிகள்தான் செம்மணியை நினைத்து கலங்குகின்றன.

அதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

மனிதப் புதைகுழிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், பின்னர் அரசாங்கத்தை ஆதரிப்பது தர்மசங்கடமாகிவிடும்.

புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டால் அதன்பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது விசாரணை நடத்துமாறு சும்மா ஒரு பேச்சுக்கு வழக்கப்போல அறிக்கைவிட வேண்டியிருக்கும்.

அதன் காரணமாக அந்த அதிகாரிகளுடன் பகை ஏற்பட்டால், சுதந்திரமாக நடமாடி அடுத்த தேர்தல்களில் வித்தைகள் காட்ட முடியாமல் போகும்.

இப்படி எத்தனையோ காரணங்கள்.

அதனால்தான் செம்மணியில் புதைகுழிகளைத் தோண்டி உடல்களை அகற்ற யாராவது முயற்சிக்கக்கூடும்என்றோ, காலம் இழுத்தடிக்கப்படுதல் அதற்கு தங்கமான வாய்ப்பு என்றோ சாதாரணமாக எழக்கூடிய சந்தேகம்கூட இந்த அரும்பெரும் கட்சிகளுக்கு எழவில்லை.

எழவில்லை என்று சொல்லமாட்டேன். இவர்கள் பொல்லாத சுழியோடிகள். பாம்பின் கால் பாம்பறியும் என்பதுபோல, அனைத்தும் அறிவர். அறிந்துகொண்டே அறியாதது போல நடிக்கின்றனர். ஏனென்றால் அரசு நோக்கி எழும் அதிருப்தி இருபுறம் கொண்ட கத்தி மாதிரி.

அது அரசையும் குத்தும், அரசை அண்டியுள்ள தம்மையும் குத்தும் என்று பயம். அதனால்தான் அரசுமீது அதிருப்தி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள படாதபாடு படுகின்றனர்.

• •

ஜனாதிபதியை சந்தித்துவிட்டு ஈ.பி.டி.பி. ஒரு நீண்டடட... அறிக்கை விட்டிருந்தது.

அறிக்கையைப் பார்த்தால், அம்மையார் இனப்பிரச்சனை, சார்க் பிரச்சனை தவிர அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்த்து விட்டார் என்பது போல இருந்தது.

யாழ் குடாநாட்டில் உள்ள சீருடை வட்டாரம் மேற்படி அறிக்கையை கண்டதும் சிறிது உஷ்ணமானதாம்.

### சந்தேகம் எழாமல் இருக்கும் மர்மம்

நிவாரண வெட்டை எதிர்த்து யாழில் ஏற்பட்ட அதிருப்திகள் சீருடை வட்டாரத்தையே யோசிக்க வைத்திருந்தது.

ஒரு குடும்பஸ்தர் யாரும் தூண்டி விடாமலேயே உண்ணாவிரதம் ஆரம்பித்தார். மேலும் பலர் உண்ணாவிரதங்களிலும், போராட்டங்களிலும்பங்குகொள்ள முன்வந்தனர்.

போராட்டங்கள் ஒருபுறமிருக்க, இச்சூழ்நிலை புலிகளுக்கு வாய்பாகப்போகிறது, மக்களைப்பட்டினிபோட்டு புலிகளுக்கு பலமாக தீனிபோட்டதாக முடியப்போகிறது என்று உயர் அதிகாரிகள் சிலரே சிந்தித்தனராம்.

தங்கள் எண்ணத்தை மேலிடத்திற்கும் தெரியப்படுத்தி இருந்தனராம்.

படையினரது கட்டுப்பாட்டு பகுதியிலேயே பட்டினி என்றநிலை உருவானால், இங்குள்ள மக்களையும் கவர முடியாது, புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள மக்களையும் இங்கு இழுக்க முடியாது என்று எடுத்துக் கூறப்பட்டதாம்.

அதன்பின்னர்தான் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு நிவாரண வெட்டு, அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு நிவாரணம் என்று முடிவெடுக்கப்பட்டதாம்.

மேற்குறித்த முடிவை தாமே தெரிவிக்க சில அதிகாரிகள் மனம் விரும்பியதாகவும், அதற்கிடையே ஈ.பி.டி.பி. ஜனாதிபதியை சந்தித்ததால் ஈ.பி.டி.பி. ஊடாக அந்த முடிவு வெளியானது. அதனால்தான் சீருடை வட்டாரம் அப்செட்டாகிவிட்டதாம்.

பிரின்சஸ் கேஷ் கப்பலில் பொருட்களை இழந்த தமிழ் வர்த்தகர்களுக்கு நஷ்டஈடு வழங்கலாம் என்று தம்மிடம் ஜனாதிபதி கூறியது உண்மை என்று அடித்துக் கூறுகிறது ஈ.பி.டி.பி. ஏன் அப்படிக் கூறினாரோ தெரியவில்லை, நஷ்டஈடு கிடைக்கவே கிடைக்காது என்பது உறுதி.

நஷ்டஈடு தருவதாக ஜனாதிபதி கூறியதாக வெளியான செய்தியைப் பார்த்ததும், பத்திரிகை ஒன்றுடன் தொடர்பு கொண்டு, மேற்குறிப்பிட்ட செய்தி யார் மூலம் வந்தது? என்று சீருடை வட்டாரம் சிறப்பாக விசாரித்ததாம்.

அதன்பின்னர் அறிக்கைகள் தயாராகி மேல் நோக்கிப் பறந்ததாம். அதனையடுத்தே "நஷ்டஈடு கொடுப்பதாக ஜனாதிபதி கூறவில்லை!" என்று ஜனாதிபதி சார்பாக அவரது அதிகாரி ஒருவர் மறுத்திருந்தாராம்.

பிரின்சஸ் கேஷ் விவகாரத்தில் விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதையாக தமிழ் வர்த்தகர்களை சிறையில் வைத்திருக்கும் அரசு, நஷ்டஈடு தரும் என்று எதிர்பார்ப்பது அதீத கற்பனை.

அப்படி கொடுத்தால் கப்பல்மீது குண்டு போட்டது தனது தவறுதான் என்று அரசே ஒப்புக்கொண்டது போலாகிவிடுமே.

தவறை மறைக்கத்தானே தமிழ் வர்த்தகர்கள்மீது தொடர் விசாரணை என்றெல்லாம் அளந்து கொண்டிருக்கின்றனர்.

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 25

**கடந்தவாரம்**

**வெள்ளையர்களை கடுமையாக எதிர்த்த இடி அமீன் பின்னர் அந்த எதிர்ப்பைத் தளர்த்த ஆரம்பித்தான். உகண்டா இராணுவத்தை சீர்படுத்த பிரிட்டிஷ் உதவி கோரினான். உதவ வந்த அதிகாரிக்கு பைத்தியம் பிடிக்காததுதான் குறை.**

**இனி....**

# இடி அமீன்

பிரிட்டிஷ் அதிகாரிக்கு முதலில் கொடுக்கப்பட்ட வேலை, உளவுப் பிரிவை சீரமைப்பது.

பிரிட்டிஷ் இராணுவத்தில் உயர் அதிகாரியான அவருக்கு இடி அமீன் ராஜ உபசாரம் செய்தான்.

அவர் தங்குவதற்கு தனியான மாளிகை ஒன்று தரப்பட்டது. அங்கு பணியாற்ற அழகான பெண்கள் சிலரை அனுப்பிவைத்தான்.

அந்தப் பெண்களில் ஒருத்தி அமீனின் ஆள். பிரிட்டிஷ் அதிகாரியை கண்காணிப்பதுதான் அவளுக்குக் கொடுக்கப்பட்ட பணி. முடிந்தால் அதிகாரியை சந்தோசப்படுத்துவதும் அவளுக்கு அமீன் தந்த கட்டளை.

உளவுப்பிரிவை சீராக்க வந்த அதிகாரியையே உளவு பார்த்தான் அமீன்.


அதிகாரி கண்டிப்பான ஆசாமி. அமீன் அனுப்பிய அழகிகளைப் புறக்கணித்தார். அவர் தொலைபேசியில் உரையாடும்போது காது கொடுத்த அழகியை எச்சரித்தார்.

உகண்டா உளவுப்பிரிவின் முக்கியமான அதிகாரிகளை பிரிட்டிஷ் அதிகாரியிடம் அறிமுகம் செய்யுமாறு தன் செயலாளரான சியம்பாவிடம் கூறினான் இடி அமீன்.

சியம்பா தயங்கினார். தலையைச் சொறிந்தார். **"ஏன்?"** என்றான் இடிக் குரலில் அமீன்.

"எங்கள் அதிகாரிகளை எப்படி அறிமுகம் செய்வது?" என்றார் சியம்பா.

**"அவர்களது பதவிகளைக்கூறி அறிமுகம் செய்யவேண்டியதுதானே!"** என்றான் அமீன்.



சியம்பாவின் முகத்தில் தயக்க ரேகைகள் போகவில்லை. சங்கடத்தில் தன் உடலை அசைத்தார்.

**"என்னவோ சொல்ல விரும்புகிறீர், பயப்படாமல் சொல்லும்!"** அமீன் குறிப்பறிந்து கேட்டான்.

சியம்பா தொண்டையில் முள் சிக்கிக் கொண்டது போன்ற திணறலுடன், "தகுதி இல்லாதவர்களை பதவியில் வைத்திருக்கிறோம் என்று அதிகாரி நினைப்பார். இராணுவ அனுபவமே இல்லாதவர்களை பொறுப்பில் வைத்திருக்கிறோம் என்று தெரிந்தால் பயிற்சி தராமல்கூட திரும்பி விடுவார் அதிகாரி," என்று விளக்க, அமீன் யோசித்து, **"சரி உமக்கு சிரமம் ஏன், நீர் போகலாம்!"** என்றான்

அமீன் அப்படிக் கூறியதும் சியம்பாவுக்கு உள்ளூர கிலியாகிவிட்டது. 'தன் உத்தரவை நிறைவேற்றவில்லை என்று பழிவாங்கிவிடுவானோ?' என்று மிகவும் பயந்தார்.

அமீன் எழுந்துவந்து அவர் தோளில் தட்டி **"முதுக்குக்கு பின்னால் பேசாமல், முகத்துக்கு நேரே சொன்னால் இந்த அமீன் ஏற்றுக்கொள்வான். உமது அபிப்பிராயத்துக்கு மதிப்பளிக்கிறேன். அதை மறந்துவிடும். நானே பார்த்துக்கொள்கிறேன்!"** என்று தோளில் தட்டிக் கொடுத்தான்.

அப்போது ஆவிபறக்க பாம்புக் கறியும், தவளைப் பொரியலும் உள்ளே வந்தன.

"நல்ல **மலைப்பாம்பாக ஒரு டசின் ஏற்பாடு செய்யும். நீர் போகலாம்!"** என்றான் சியம்பாவிடம்.

பிரிட்டிஷ் அதிகாரியிடம் ஆங்கிலம் தெரிந்த பிறிதொரு உகண்டா அதிகாரி மூலம் உளவுப்பிரிவின் பிரதான அதிகாரிகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.



இடது பக்கத்தல் நிற்கும் சிறுவன் அலிகா. இரண்டாவது மனைவியான 'கே'யின் மகன். வலது பக்கம் முவங்கா. நாலாவது மனைவி மெடினாவின் மகன்.

அவர்களது பின்னணிகளை ஆராய்ந்த பிரிட்டிஷ் அதிகாரி குழம்பிப்போனார்.

முன் அனுபவமோ, குறிப்பிட்ட பொறுப்புக்குரிய நுட்பமான அறிவாற்றலோ இல்லாதவர்களுக்கு பெரும் பதவிகள் வழங்கப்பட்டிருப்பது அவருக்கு அதிர்ச்சியளித்தது.

அமீனின் செயலாளரான சியம்பாவுக்கு ஒரு நாள் ஃபோன் செய்தார் பிரிட்டிஷ் அதிகாரி.

"உங்கள் அதிகாரிகளிடம் மாரடித்தால் நான் என் தாய்நாட்டுக்கு திரும்ப முடியாது, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் செல்ல வேண்டியிருக்கும்!" என்றார்

சியம்பா அபிப்பிராயம் கூறவில்லை. தன் ஃபோன்கூட ஒட்டுக் கேட்கப்படும் என்று பயம்.

"இதனை மாண்புமிகு ஜனாதிபதியிடம் நீங்கள் தெரிவியுங்கள்," என்றார் சியம்பா.

நான்கு மாதங்களின் பின்னர் நாடு திரும்பினார் அந்த அதிகாரி. பயிற்சியளிக்க மறுத்து நாடு திரும்பினால் தனக்கும் ஆபத்து நேருமோ என்று பயப்படுமளவுக்கு இடி அமீன் ஆட்சியின் சுயரூபத்தை அவர் அறிந்துகொண்டார்.

"உங்கள் அதிகாரிகளுக்கு பிரிட்டனில் வைத்துத்தான் மேலதிக பயிற்சி தரவேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு உங்களுக்கு அறிவிக்கிறேன்!" என்று அமீனிடம் பவ்வியமாகக் கூறிவிட்டே உகண்டாவை விட்டு வெளியேறினார்.

போனவர் போனவர்தான்; திரும்பி வரவே இல்லை. அந்த அதிகாரி ஊடாக உகண்டா நிலவரமும், அங்குள்ள படை மற்றும் உளவுப் பிரிவு அதிகாரிகளது தகுதியின்மைகளும் வெளியே தெரிந்தன.

உகண்டாவிற்குள் இருக்கும் வரைதானே பயம். வெளியேறி தன் நாட்டுக்குள் சென்ற பின்னர் பிரிட்டிஷ் அதிகாரிக்கு துணிச்சல் வந்திருந்தது.

தகவல் அறிந்த இடி அமீன். **"பிரிட்டிஷ் அதிகாரியுடன் நெருங்கிப் பழகிய உகண்டா அதிகாரிகளின் பட்டியலை என் மேசைக்கு அனுப்பு!"** என்றான் அந்த அதிகாரியை உளவு பார்த்த அழகியிடம்.

பட்டியல் வந்தது. பட்டியலுடன் அழகியும் வந்தாள். **"வேலையை ஒழுங்காகத் தான் செய்திருக்கிறாய்!"** என்று அவளின் பின் புறத்தில் கிள்ளினான்.

அவள் சிணுங்க, இழுத்து தன் மடியில் அமர்த்திக் கொண்டு, அவளின் உதடுகளை தன் விரல்களால் எலுமிச்சைப் பழத்தை பிழிவது போல பிழிந்தான்.

அவளுக்கு வலித்திருக்க வேண்டும். இடிஅமீன் அவளின் தவிப்பை இரசித்தான். அவளது கழுத்தை தன் கரம் ஒன்றால் அழுத்திக்கொண்டு உதடுகளை கவ்வினான். சட்டென்று இறுகக் கடித்துவிட்டான்.

பெண்களின் தவிப்பை இரசிப்பதில் இடி அமீனுக்கு அலாதியான ஆசை இருந்தது.

அவளின் உதடுகளில் இருந்து இரத்தம் கசிந்தது. அவன் பற்கள் ஆழமாக பதிந்ததால் அவள் வலியால் முனகினாள்.

அவளது உதடுகளில் கசிந்த இரத்தத்தை தன் உதடுகளால் அமீன் ருசித்தான். அவள் பயந்துபோனாள்.

என்ன நினைத்தானோ, **"இன்று இது போதும் போ!"** என்றான். மேசையில் கிடந்த அழைப்புமணி அழுத்த, உள்ளேவந்த உதவியாளரிடம் **"இவளுக்கு பத்தாயிரம் ஷிலிங் கொடுத்து அனுப்பு! இவளது வீட்டுக்கு ஃபோன் இணைப்புக் கொடுக்கவும் ஏற்பாடு செய்!"** என்றான்.

அரச வங்கிகளில் பணம் இருக்கிறதோ இல்லையோ அமீனின் செலவுக்காக அன்றாடம் பணம் அனுப்பிக்கொண்டே இருக்க வேண்டும்.

அமீனுக்கு மட்டுமல்லாமல் அமீனின் மனைவியர், காதலிகள், உதவியாளர்கள், உறவினர்கள், அவர்களது கேளிக்கைகள் அனைத்துக்கும் அரச பணம்தான் தண்ணீராகப் பாய்ச்சப்பட்டது.

"பணம் காஜானாவில் காலியாகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஆபிரிக்க நாடுகளின் மாநாட்டை இங்கு நடத்துவது கடினம்!" என்று அமீனுக்கு விளக்கினார் சியம்பா.

ஒபேடே ஜனாதிபதியாக இருந்தபோதே உகண்டாவில் ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களது உச்சி மாநாட்டை நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆபிரிக்க நாட்டுத் தலைவர்கள் உகண்டாவில் ஒன்று கூடுவது தனக்கு சர்வதேசப் புகழ் தரும் என்று கருதிய அமீன் தனது செயலாளரிடம் கூறினான்: **"நாட்டை அடகு வைத்தாவது அந்த மாநாட்டை இங்கு நடத்தியாக வேண்டும்!"**

மேற்கொண்டு அமீனிடம் விவாதிப்பது தன் தலைக்கு மோசம் என்பதால் சியம்பா மறுக்கவில்லை.

போதாக்குறைக்கு அமீனின் அடுத்த உத்தரவு சியம்பாவை மட்டுமல்ல, அரச திறைசேரி அதிகாரிகளையும் தூக்கியடித்தது.

**"ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களது உச்சி மாநாடடுக்காக மாநாட்டு மண்டபம் ஒன்றையும், பிரதிநிதிகள் தங்குவதற்கு நைல் ஹோட்டலையும் பிரமாண்டமாக கட்டியமைக்க வேண்டும். மூன்று மாதங்களுக்குள் முழுப் பணியும் முடியவேண்டும்!"**

என்று உத்தரவிட்டான்.

இரு கட்டடங்களையும் கட்டும் பொறுப்பை யூகோஸ்லாவிய நிறுவனம் ஒன்றுக்கு கொடுக்குமாறும் பணித்தான் அமீன்.

அந்த நிறுவனம் தனது இலாபத்தில் மூன்றில் ஒரு பகுதியை அமீனின் உறவினர் ஒருவருக்குத் தருவதாகப் பேரம் பேசியது.

அதனால் கட்டடம் கட்டும் பொறுப்பு அவர்கள் கைக்குப் போனது.

மூன்று மாதங்களாக இரவு பகலாக 24 மணிநேரமும் வேலைகள் நடந்தன.

அமீனும் அடிக்கடி சென்று கட்டடப் பணிகளைப் பார்வையிட்டு வந்தான்.

மூன்று மாதங்களுக்குள் கட்டடப் பணி முடிவடைவது போலத் தெரியவில்லை.

அந்த நிறுவன உயர் அதிகாரியை அழைத்தான். **"மூன்று மாதத்துக்குள் கட்டடம் பூர்த்தியாகவில்லை என்றால், கட்டடத்திற்குள் உனக்கு சமாதி கட்டிவிடு வேன்."** என்று அமீன் சொன்னது கேலியல்ல என்று தெரிந்ததால், அதிகாரிக்கு மூர்ச்சை யாகாத குறை.



புதிய இயந்திரத் துப்பாக்கி பற்றி அமீனுக்கு விளக்கும் இஸ்ரேலிய அதிகாரி.

"மேலதிகமாக ஆட்கள் வேண்டும், முடிக்கலாம்!"

என்றான். மேலதிகமாக பணமும் செலவானது.

மூன்று மாதங்களில் மாநாட்டு மண்டபமும், நைல் ஹோட்டலும் பிரமாண்டமாக கட்டி முடிக்கப்பட்டன. ஆனால் முன்னர் திட்டமிட்டதைவிட முன்னூறு மடங்கு பணம் செலவானது.

நினைத்தபடி கட்டடப் பணிகள் முடிவடைந்ததை நினைத்து இடி அமீன் சந்தோசப்பட்டான்.

அரச திறைசேரி விரைவாக காலியாகிக் கொண்டிருப்பதை எண்ணி திறைசேரி அதிகாரிகளும், தலைமைக் கணக்கு தணிக்கையாளரும் முடியைப் பிய்த்துக்கொண்டனர்.

இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டான் இடி அமீன்.

## தருவது ரசிகன்

'இவனுக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா?' என்று திறைசேரி அதிகாரிகளுக்கு உண்மையாகவே சந்தேகம் வந்துவிட்டது.

கம்பலாவுக்கு 70 மைல் தொலைவில் இருப்பது நாகசொன்கோலா.

அங்கு விமானப் படைத் தளம் ஒன்றைக் கட்டுமாறு உத்தரவு பிறப்பித்தான் அமீன்.

விமானத் தளத்தின் பெயரும் குறிக்கப்பட்டது.

'ஃபீல்ட் மார்ஷல் இடி அமீன் விமானப் படைத் தளம்.'

**"1967ல் நடைபெற்ற யுத்தத்தில் எகிப்தில் இருந்த விமான நிலையம் ஒன்று இஸ்ரேலால் தாக்கி அழிக்கப்பட்டது. நாம் கட்டப்போகும் விமானப் படைத் தளம் யாராலும் தாக்கமுடியாத தளமாக இருக்க வேண்டும். சுரங்க அமைப்புக்கள் இருக்க வேண்டும்!"** என்று விளக்கினான் அமீன்.

"விமானங்களே போதியளவு கிடையாது. இதற்கு விமானப்படைத் தளம் வேறு தேவையா. தண்டம், தண்டம், அநியாயச் செலவு?" என்று மனதுக்குள் பொருமிய அதிகாரிகள் அமீன் முகம் எதிரே "மிக நல்ல திட்டம். நாங்கள்கூட யோசிக்கத் தவறிவிட்டோம்!" என்றனர்.

**(இடி தொடரும்)**

---

# "ஸ்ரீவித்யா ஏமாற்றிவிட்டார்"



நடிகை ஸ்ரீவித்யா சிறந்த குணசித்திர நடிகை. கமலஹாசனை காதலித்து பரபரப்பாகப் பேசப்பட்டவர். இப்போதும் இருவரும் நண்பர்களாகவே இருக்கின்றனர். தனது வாழ்வில் ஏற்பட்ட சோகங்கள் பற்றி ஸ்ரீவித்யா தமிழக சஞ்சிகை ஒன்றில் எழுதினார்.

அதில் தனது கணவராக இருந்த ஜோர்ஜ் என்பவரை கடுமையாக விமர்சனம் பண்ணியிருந்தார்.

அதனையடுத்து இன்னொரு தமிழக பிரபல சஞ்சிகைக்கு ஜோர்ஜ் அதிரடிப் பேட்டி கொடுத்திருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகள் இதோ:

"ஸ்ரீவித்யாவை முதன்முதலில் நான் பார்த்தது எங்கே தெரியுமா? நடிகர் மதுவின் வீட்டுப் படுக்கை அறையில், முழு போதையில் அரைகுறை ஆடையில் இருந்தார்.

ஸ்ரீவித்யாவை நான் பார்க்கப்போனதே ஒரு தயாரிப்பாளராகத்தான். 'தீக்கனல்' என்கிற என் படத்தில் நடிக்க வைக்கத்தான் அவரை அணுகினேன்.

ஒருநாள் ஸ்ரீவித்யாவின் தாயார் எம்.எல். வசந்தகுமாரி (பிரபல பாடகி) என்னிடம் ஓடிவந்தார்.

"கடனுக்காக என்வீட்டை ஜப்தி செய்யப் போகிறார்கள். உதவி செய்யுங்கள்" என்று கெஞ்சினார். நானும் மனம் இரங்கி ஐயாயிரம் ரூபாய் கொடுத்தேன்.

பணம் கொடுத்ததும் ஸ்ரீவித்யா என்னை தன் வீட்டுக்கு அழைத்தார். அங்கு என்னை மது குடிக்குமாறு வற்புறுத்தினார். நான் மறுத்தேன். ஆனால் ஸ்ரீவித்யா மெக்டவல் விஸ்கியை ஒரஞ்சு ஜூஸ் கலந்து ஒரே பெக்கில் குடித்தார்.

நான் அறிவுரை கூறினேன். "என் அம்மா, அப்பா எல்லோரும் என்னை பணம் காய்ச்சி மரமாக நினைக்கிறார்கள், மகளாக நினைப்பதில்லை!" என்று அழுதார்.

அதன் பின்னர் அடிக்கடி சந்திப்போம். அவர் தனது 'உறவுகள்' எதனையும் என்னிடம் மறைத்ததில்லை.

திரையுலகில் எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி போன்ற நடிகர்களைத் தவிர மீதி எல்லோருடனும் 'நெருக்கமாக' இருந்திருக்கிறார்.

ஒரு பிரபல ஹீரோவை காதலித்து ஏமாந்த கதை எல்லோருக்கும் தெரியும். ஆனால் இது போல் பல கதைகள், காதலர்கள் அவருக்கு உண்டு. அவர்மீது பரிதாபம் ஏற்பட்டே மணந்து கொண்டேன். ஆனால் எனக்கும் உண்மையாக நடக்கவில்லை..." என்று கூறியுள்ளார்.

ஆனால் ஸ்ரீவித்யாவின் உழைப்பில் வாங்கிய பங்களாவை அபகரித்து அங்கு தான் இந்த ஜோர்ஜ் இப்போது வசிக்கிறார்.

"தன்னை பிற ஆண்களுடன் சந்தோசமாக இருக்குமாறு நிர்ப்பந்தித்தார்" என்று ஸ்ரீவித்யா இவர்மீது குற்றம் சாட்டி இருந்தார்.

---

# விளம்பர ஆட்டம்




எதிர்வரும் ஜனவரி மாதம் உலகப் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரர்களான ஜோர்ஜ் போர்மனும் லாரி ஹோம்சும் முதற் தடவையாக அமெரிக்க நியூயோர்க்கில் மோதுகின்றனர்.

இதனை பெரும் பரபரப்பாகி அனுமதிச்சீட்டு விற்பனையில் தூள் கிளப்ப நினைத்தனர் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்.

இரவு விடுதி ஒன்றில் இருந்து கவர்ச்சியான பெண்களை பிடித்தனர். அவர்களுக்கு மிகச் சொற்பமான உடைகளை அணிவித்து, அவர்கள் உடலில் விளம்பர வாசகங்கள் எழுதி ஆடவைத்தனர். விற்பனை தூளோ தூள்!

---

# நாயகன் வில்லியம்



டயானா மறைந்து ஒருவருடம் பூர்த்தியாகி விட்டது. தாயாரைப் போல பிரபலமாகத் தொடங்கி விட்டார் இளவரசர் வில்லியம்.

அவர் பிரிட்டிஷ் இளம் பெண்களின் கனவு நாயகனாக மாறியிருக்கிறார். கல்லூரி மாணவிகள் பலரது அறைகளில் சினிமா நடிகர்களின் படங்களோ, விளையாட்டு வீரர்களின் படங்களோதான் முன்பு இருந்தது.

தற்போது இளவரசர் வில்லியமின் படத்தை தங்கள் அறைகளில் மாட்டி வைத்திருக்கிறார்கள் என்று பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

டயானாவுக்கு இரண்டு புத்திரர்கள். அதில் இளையவரான இளவரசர் ஹரியைவிட வில்லியம் தான் டயானா போன்று கவர்ந்திழுக்கும் ஆளுமையான தோற்றம் உடையவர்.

தாயாரின் இடத்தை பிரபல விடயத்தில் நிரப்பிவிடுவார் வில்லியம் என்கின்றனர்.

---

# கொலைகார சகோதரர்கள்

இந்தியாவில் ஆந்திராவிலும் தமிழகத்திலும் பல கொலைகள், பாலியல் வல்லுறவுகள் புரிந்த படுபாவிகள் கோபாலும், சுப்பிரமணியமும். இருவரும் சகோதரர்கள்.



இவர்களுக்காக வாதடுவதில்லை என்று ஆந்திர மாநில சட்டத்தரணிகள் அனைவரும் முடிவெடுத்துள்ளனர்.

இவர்கள் செய்துள்ள கொலைகள் மட்டும் 42. இத்தொகைகூட இதுவரை அறியப்பட்டவை மட்டும்தான்.

த வீக் பத்திரிகையில் இவர்களது பேட்டி வந்திருந்தது. அசராமல் பேட்டி கொடுத்திருக்கிறார்கள்.

**கே: தொடர் கொலைகள் செய்தீர்களே பொலிஸ் பிடிக்கும் என்று பயம் இல்லையா?**

ப: எங்கே பிடிக்கிறார்கள். என் வீட்டுக்கு அருகிலேயே டீக்கடைக்காரர் குடும்பத்தை குளோஸ் பண்ணினேன். அப்போதும் பிடிக்கவில்லையே.

**கே: குழந்தைகளையும் துளியும் இரக்கமில்லாமல் கொன்றது ஏன்?**


ப: கொலை செய்யும்போது எங்களைக் கண்டுவிட்டன. அதனால்தான் குளோஸ் பண்ணினோம்.

**கே: கொலை செய்த பெண்களை நீயும் வல்லுறவு கொண்டுவிட்டு, உன் தம்பியையும் அனுமதிப்பாயாமே? ஏன்?**

ப: என்னுடன் சேர்ந்து அவனும்தானே கஷ்டப்பட்டான். அதனால்தான்!

---

# ஏவுகணை என்ன செய்யும்?



சூப்பர்பவரான அமெரிக்காவுக்கு இன்று சிம்மசொப்பனமாக மாறியுள்ள வர் பின்லாடன். இவரது சொத்து மதிப்பு கிட்டத்தட்ட 12 ஆயிரம் கோடி ரூபாய்கள்.

கென்யா, தான்சானியா நாட்டு அமெரிக்க தூதரக குண்டுவெடிப்புக் களுக்கு இவரை நோக்கி கைகாட்டுகிறது அமெரிக்கா.

தெற்கு எமன் நாட்டில் இருந்து சவுதியில் குடியேறிய பின்லாடனின் குடியுரிமையை சவுதி இரத்துச் செய்தது. அதனால் தற்போது ஆப்கானிஸ்தானில் இருக்கிறார்.

அமெரிக்காவையும், இஸ்ரேலையும் எதிர்த்துப் போராடுவதே இலட்சியம் என்கிறார். 1995ல் சவுதி அரேபியாவில் ரியாத் நகரில் கார்குண்டு வெடிப்பில் 5 அமெரிக்கர்கள் கொல்லப்பட்ட சம்பவம், 1996ல் டக்ரான் நகரில் இராணுவ குடியிருப்பு தகர்க்கப்பட்டு 19 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டது போன்றவற்றிலும் பின்லாடனுக்கு தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர். அமெரிக்காவின் ஏவுகணைகளால் குறிவைக்கப்பட்டிருக்கும் பின்லாடன்; "இந்த சூப்பர் பவருக்கு உண்மையான முஸ்லிம் பணிய மாட்டான்" என்கிறார் வெகு அலட்சியமாக.



## ஹைர ஹைர ஹைரப்பா

# பிரசவ அதிசயம் பாரப்பா....!

← பிரசவ அதிசயங்கள் முன்னரும் தகவல் பெட்டியில் வெளியாகியுள்ளன. இந்தவாரம் மேலும் சில 'யம்மாடியோவ்' சாதனைகள். அமெரிக்காவில் 27 வயதான கென்னிக்கும் அவரது துணைவியான 29 வயதான பொப்பிக்கும் குழந்தைகள் என்றால் கொள்ளை கொள்ளையான ஆசை.

இவர்களுக்கு முதலில் பிறந்தது பெண் குழந்தை. பெயர்: மிக்கைலா. அடுத்ததாக ஒரு அழகான ஆண் குழந்தைக்காக தம்பதியினர் முயற்சித்ததில் கைமேல் ஏராளம் பலன். ஒரே பிரசவத்தில் ஏழு குழந்தைகள் வரிசையாக பூமிக்கு வந்திறங்கின.

கடந்த ஆண்டு நவம்பர் 19ம் திகதியன்று சிசேரியன் அறுவைச் சிகிச்சைமூலம் ஆறு நிமிடங்களில் ஏழு குழந்தைகளையும் வெளியே எடுத்தனர் டாக்டர்கள்.

இந்தப் பிரசவ சாதனையை அமெரிக்கர்கள் 'ஹைர ஹைர ஹைரப்பா' பாடாத குறையாக வியந்து தள்ளி தம்பதியை புகழ்ந்து தள்ள, ஜனாதிபதி பில் கிளின்ரனும் ஃபோன் பண்ணி வாழ்த்துக் கூறினாராம்.

குழந்தைகளை வளர்க்க வசதியாக அவர்கள் வீட்டிற்கு அருகாமையிலேயே வேலை வாய்ப்புப் பெற்றும் கொடுத்திருக்கிறார். ஓடி ஓடித் தூக்கணும், ஏழுபேரையும் சமாளிக்கணும், ஓய்வு கிடையாது அம்மாவுக்கு! ■



கருவறையில் ஏழு பிள்ளைகளுடன்

## ஆக, ஆறு மட்டும்

→ சில ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவைச் சேர்ந்த பெக்கி தில்லி- கீத் தம்பதியினரைப் பற்றி அமெரிக்கர்கள் ஆச்சரியமாகப் பேசிக் கொண்டனர். ஒரே பிரசவத்தில் சற்றும் அசராமல் ஆறு பிள்ளைகளை ஈன்று, உலக சனத்தொகைக்கு தன்னால் முடிந்த சிறு உதவியைச் செய்திருந்தார் கீத். அதில் இரண்டு பெண் குழந்தைகள், நான்கு ஆண் குழந்தைகள்.

தமது சாதனையை ஏழு குழந்தைகள் பெற்று பொப்பி முறியடித்துவிட்டாரே என்று பொறாமைப்படாமல், தனது வாழ்த்துக்களை உடனே தெரிவித்துவிட்டாராம் கீத். ■



## கறுப்பு-வெள்ளை சாதனை



← ஆறுக்கு முந்தைய அமெரிக்க பிரசவ சாதனை ஐந்து. ஜேக் கீதாம்சன் என்ற வெள்ளையினப் பெண்மணியும், லின்டன் என்னும் அவரது கறுப்பினக் கணவரும் இணைந்து, கண்ணும் கருத்துமாக பாடுபட்டு இந்தச் சாதனையைப் படைத்திருந்தனர்.

ஐந்து குழந்தைகளும் தற்போது வளர்ந்து பருவ வயதை எட்டிக்கொண்டிருக்கின்றனர்.

உலகில் அதிக சனத்தொகைகூடிய நாடுகளான சீனா, இந்தியா போன்றவை ஒரே பிரசவத்தில் பலவெளியீடுகள் சாதனையில் மட்டும் பின்நிற்கின்றன. பிரசவ சாதனைகள் தொடர்ந்தால் சனத்தொகை வெகு ஜோராக உயரும்! ■


## டயானா... டயானா...

இளம் டயானாபோலவே தோற்றம் தரும் இவர் அசல் அல்ல-நகல். படகில் கண்ணாடி அணிந்து நிற்பது டோடி பயட் அல்ல-அவரும் நகலே.

டயானா பற்றிய தொலைக்காட்சிப் படத்திற்காக எடுக்கப்பட்ட காட்சிகளே இவை. டோடி பயட், வில்லியம், ஹரி ஆகியோராக நடித்திருப்பவர்களைவிட டயானாவாக நடித்திருக்கும் அமிசெக்கேல் அசல் டயானாபோலவே இருக்கிறார். டயானா உயிருடன் இருந்திருந்தால் இவரை டூப்பாக பாவித்திருக்கலாம். கமராக்காரர்கள் "இவர்தான் டயானா?" என்று நினைத்து துரத்தி இருப்பார்கள். அசல் டயானா கமராக்காரர்களிடமிருந்து தப்பித்திருக்கலாம்.

இந்த தொலைக்காட்சிப் படம் தவிர, டயானா பற்றிய திரைப் படம் ஒன்றும் எடுக்கப்படுகிறது. தொலைக்காட்சிப் படம் தற்போது இங்கிலாந்தில் வாராந்தம் ஒளிபரப்பாகி வருகிறது.





## நெஞ்சில் பூமுகம்

↓ அணிந்திருக்கும் கோட்டுக்குள் இருந்து எட்டிப்பார்ப்பது பொம்மைத் தலையல்ல. இத்தம்பதியரது வாரிசே தான். மேலை நாடுகளில் பிள்ளைகளை இப்படிக் கொண்டுதிரிவதுதான் தற்போதைய ஃபாஷன். குழந்தைகளுக்கு குளிரும் ஏதும் செய்யாது. தந்தையின் தேகச் சூட்டில் இதமாக இருக்குமாம். ■





## நாம் மூவர், நமக்கு மூவர்!

← ஒரே பிரசவத்தில் உதித்த மூன்று முத்துக்கள் ட்றேசில், மாட்டின், லிசா. மூவரும் பெண்கள்.

வாழ்க்கையில் அதிசயங்கள் எப்போதாவதுதான் நிகழும். இந்த மூன்று சகோதரிகளும் தம்மைப்போலவே ஒன்றாகப் பிறந்த மூன்று சகோதரர்களைக் கண்டுபிடித்ததுதான் மகா சந்தோச அதிசயம். டாறென், ராறா, ஜோன் ஆகியோரே முச் சகோதரர்கள்.

ஒரே திருமண அரங்கில் மூன்று ஜோடிகளும் மாலைமாற்றிக்கொண்டன. இதில் என்ன விசேஷம் தெரியுமா? இதேபோல ஒன்றாகப் பிறந்த மூன்று ஜோடிகள் 1873ல் திருமணம் செய்தனராம். நூறு வருடங்களுக்கு மேலாக இருந்த அந்த உலக சாதனையை இந்த ஜோடி புகுந்து தகர்த்தெறிந்துவிட்டது. சபாஷ், சரியான உடைப்பு!

தகவல் பெட்டி

திரையுலக மறுபக்கம் 68

# பலவீனத்தால் வீழ்ந்த நடிகர்

## குணசித்திர நடிகரின் சோகம்

'செந்தமிழ் தேன்மொழியாள்' பாடலை இன்றும் மெய்மறந்து இரசிக்கலாம். அந்தப் பாடலின் குரலுக்குரியவர் டி.ஆர். மகாலிங்கம். ஸ்ரீவள்ளி உட்பட பல சூப்பர் ஹிட் படங்களின் கதாநாயகன்.

நாடக கம்பனியில் இருந்து திரையுலகுக்கு வந்தவர் மகாலிங்கம். அவர் குரலுக்கு பயங்கர மவுசு.

சிலருக்கு சரீரம் நன்றாக இருக்கும் சாரீரம் நன்றாக இருக்காது. சிலருக்கு சாரீரம் நன்றாக இருக்கும் சரீரம் நன்றாக இருக்காது. மகாலிங்கத்துக்கு இரண்டும் நன்றாக இருந்தது.

ஏ.வி.எம் பட நிறுவனத்தின் படங்களில் நடிக்க ஆரம்பித்தார். ஏ.வி.மெய்யப்ப செட்டியார்தான் மகாலிங்கத்தை திரையுலகுக்கு கொண்டுவந்தவர்.

பெரும் நடிகராக மாறிய டி.ஆர். மகாலிங்கத்திடம் இருந்த ஒரு பலவீனம் அவரை புகழின் உச்சியில் இருந்து உருட்டிவிட்டது.

அது பற்றி அவரை நன்கறிந்த தமிழ்நாட்டின் பழம்பெரும் சினிமா நிருபர் நவீனன் சுவாரசியமாக நினைவு கூருவதைக் கேளுங்கள்:

"டி.ஆர்.மகாலிங்கம் ஏ.வி.எம். நிறுவனத்தின் செல்லப்பிள்ளையாக இருந்தார். அம்பி என்றும் அவரை அழைப்பார்கள்.

'வாழ்க்கை' என்னும் படத்தை ஏ.வி.எம். தயாரித்தபோது அதில் வைஜெயந்திமாலா என்னும் புதுமுகத்தை அறிமுகம் செய்தனர். பிரபல நடிகை வசுந்தராதேவியின் மகள்தான் வைஜெயந்திமாலா.

அந்த ஆடல் அழகி ஏ.வி.எம். ஸ்டூடியோவுக்குள் நுழைவதைக் கண்டுவிட்டு "ஆஹா! என்ன அழகு" என்று அப்படியே சொக்கிப்போனார் மகாலிங்கம்.

அந்த அழகி வாழ்க்கை படத்தில் நடிக்கப்போகும் புதுமுகம் என்று அறிந்ததும் தானும் அதே படத்தில் அவருடன் கதாநாயகனாக நடிக்கும் ஆசை அவரைப் பற்றிக்கொண்டது.

வைஜெயந்திமாலாவை அவர் ஒரு நாள் அதே ஸ்டூடியோவில் கண்டுவிட்டு, தானே சென்று "உன்னுடைய அம்மாவை எனக்குத் தெரியும் நீ அவருடைய பெண்ணாமே. அவர் மிகவும் அழகிய நடிகை, அவரைவிடவும் நீ அழகிய நடிகையாக இருக்கிறாய். நீ நடிக்கப்போகும் படத்தில் நான்தான் கதாநாயகன் என்று கூறினார்.

ஒரு பிரபல நடிகர் தன்னுடன் வலியவந்து பேசுகிறாரே என்ற பெருமையோடு, 'அப்படியா? ரொம்ப சந்தோசம்' என்று சொல்லி விட்டு அழகு மயிலாக அங்கிருந்து நகர்ந்து காரில் ஏறிப்புறப்பட்டார். மகாலிங்கம் அவர் போவதையே நீண்டநேரம் பார்த்துக் கொண்டு நின்றார்.

### மனம் உடைந்தார்

ஆனால் வாழ்க்கை படம் நகைச்சுவை படம் என்பதால் டி.ஆர்.ராமச்சந்திரனை கதாநாயகனாக நடிக்கவைத்தார் மெய்யப்பச் செட்டியார். மனமுடைந்த மகாலிங்கம் ஏ.வி.எம்.மைவிட்டு விலகிப் போனார்.

மகாலிங்கத்தை திருப்தி செய்ய அண்ணா எழுதிய 'ஓர் இரவு' கதையை படமாக்கி கதாநாயகனாக மகாலிங்கத்தை நடிக்கவைத்தது ஏ.வி.எம். அப்படத்தில் நடித்தபோது தனக்கு ஜோடியாக நடித்த வரலட்சுமியுடன் நுக்கியமாகி, அவரை தனது இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டார்.

### ஓர்பகல்

'ஓர் இரவு' படப்பிடிப்புக்கு வரும்போது இருவரும் ஜோடியாகவே வருவர். இருவரும் ஒன்றாக இருந்துவிட்டு வருவதால் மிகத்தாமதமாகவே படப்பிடிப்புக்கு வருவர். இது ஏ.வி.மெய்யப்ப செட்டியாருக்கு தெரியாது. அவர் மிகக் கண்டிப்பானவர்.

ஒருநாள் தெரியவந்துவிட்டது. கையில் மணி பார்த்தார் செட்டியார். பகல் பதினொன்று. காலை எட்டுமணிக்கு வரவேண்டியவர்கள் வரவில்லை.

'ஓர் இரவு' படத்தில் இருந்து மகாலிங்கமும் வரலட்சுமியும் இன்றுமுதல் நீக்கப்படுகின்றனர்' என்று கூறிவிட்டு காரில் ஏறிப்போய்விட்டார்.

உல்லாச ஜோடியாக ஸ்டூடியோவுக்கு வந்த மகாலிங்கமும், வரலட்சுமியும் வாசலில்வைத்தே திருப்பி அனுப்பப்பட்டனர். மகாலிங்கத்திற்கு இருந்த மகத்தான செல்வாக்கு 'ஓர் இரவு' படப்பிடிப்பில் நடந்து கொண்ட முறையால் ஒரு பகலில் சரிந்தது!

அதன்பின்னர் சொந்தமாக படம் தயாரித்தார். தோல்விதான் தொடர்ந்தது. பின்னர் யாரோ சிபாரிசு செய்ததால் பத்மினியோடு ஒரு படத்தில் கதாநாயகனாக நடித்தார். அந்தப் படத்தின் காதல் காட்சியில் பத்மினியிடம் சில்மிஷம் செய்தார். அதனை பத்மினியின் தாயார் சரஸ்வதி அம்மாள் அறிந்து, படத்தயாரிப்பாளரான லஷ்மணனிடம் சொல்லி வருத்தப்பட்டார்.

"படப்பிடிப்பில் மகாலிங்கம் சில்மிஷம் செய்ததாக பத்மினி கூறி அழுதாள். நீங்கள் அந்த நடிகரை எச்சரிக்கை செய்யுங்கள். தொடர்ந்து அவர் அப்படி நடந்துகொண்டால் பத்மினி தொடர்ந்து நடிக்கமாட்டாள்" என்றார் தாயார்.

தயாரிப்பாளர் மகாலிங்கத்தை படத்தில் இருந்தே தூக்கிவிட்டார்.

அதன் பின்னர் சிறு வேடங்களில் நடிக்க ஆரம்பித்தார். வறுமையில் மூழ்கினார். ஸ்ரீவள்ளி படத்தில் கதாநாயகனாக நடித்த மகாலிங்கம், பின்னர் அதே பெயரில் சிவாஜி கதாநாயகனாக நடித்த படத்தில் துணைப்பாத்திரத்தில் தோன்றியதுதான் மகாசோகம்.

□□

### குடும்பம் குலைந்தது

பவித்திரமான பெயரைக் கொண்ட நடிகை அவர். கமலுடனும் ஒரு படத்தில் நடித்திருக்கிறார். அவருக்கு ஒரே ஒரு பலவீனம் இருந்தது. நடுத்தர வயதான நடிகர்களிடம் மட்டுமே ஈடுபாடு காட்டுவார்.

முன்னணி நடிகர்கள் சிலருக்கே உடன்பட மறுத்தவர், குணசித்திர வேடங்களில் நடித்து புகழ்பெற்ற பிள்ளையார் நாமம் கொண்ட நடிகருக்கு குறிவைத்தார்.

நடிகரோ சுத்த சைவம். தன் மனைவிக்கு துரோகம் செய்ய விரும்பாதவர். சில துணை நடிகைகள் தாமாக நாடியபோதும் நிராகரித்தவர். 'ஹோட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒப்புக் கொள்ளாது' என்று கூறுவார்.

அப்படிப்பட்டவரையே நடிகை மயக்கினார். பிரபல கதாநாயகி, பல இலட்சம் இரசிகர்களை தூங்கவிடாத கனவுக்கன்னி தன்னை வலிய வந்து அழைப்பதை பெருமையாகக் கருதினார். விருந்துக்கு சென்றார்.

குடும்பம் குலைந்தது. மனைவி பிள்ளைகள் அவரை நிராகரித்தனர். ஒரு கட்டத்தின் பின்னர் அந்த நடிகையும் அவரை ஓரங்கட்டி விட்டார்.

## "கமலை எனக்கு பிடிக்காது"

நடிகைகள் பற்றி காதல், கல்யாணம் என்றுதான் கிசுகிசுவரும். உங்களைப் பற்றி 'எய்டஸ்' என்று வந்ததே? என்று ரோஜாவிடம் ஒரு கேள்வி. தமிழக சஞ்சிகையின் கேள்விக்கு ரோஜாவின் பதில்:

"உங்களுக்கு ஒன்னு வேணும்னு தோணும். அது கிடைக்கலேன்னா 'அய்யய்யோ' என்று தானே சொல்வீங்க. தமிழ்கூட சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்று பழமொழி இருக்கே அந்தக் கதைதான்.

எல்லோருக்கும் ஹீரோயின் என்றால் ஒரு ஆசை இருக்கும். அதான் காரணம்.

செல்வமணி என்னும் பெரிய இயக்குநர் எனக்கு பின்பலமா இருக்கிறதால பல பேருக்கு கோபம், எரிச்சல்.

ஒரு பெரிய ஹீரோ எங்கிட்ட 'இப்படி எய்ட்ஸ்னு போட்டிருக்காங்களே ஃபீல் பண்ணலையா?' என்று கேட்டார்.

'இல்ல சார். எனக்கு பாதுகாப்பு யாராவது ஒரு ஹீரோ கூட வந்து என்னை கேட்கணும் என்று நினைச்சாக்கூட, எய்ட்ஸ் என்று விட்டுடுவாங்க என்று சொன்னேன். உடனே அந்த ஹீரோவோட கண்ணுல தண்ணி வந்துவிட்டது!" என்று கூறியிருக்கிறார்.

அதே பேட்டியில் ரோஜா கூறியுள்ள இன்னொரு சங்கதி: 'இயக்குநர்களில் மணிரத்னம், விக்ரமன் பிடிக்கும். நடிகர்களில் பிரபு, கார்த்திக் பிடிக்கும். கமலஹாசனை எனக்குப் பிடிக்காது. எல்லோருக்கும் அது தெரியும்!'

## திரையுலக கடவுள்

### ஷங்கர்-விஜய் லடாயா?

தமிழ்த் திரையுலகின் இன்றைய கடவுள் விஜய். 'நிலாவே வா' படமும் பாதகமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது.

காதல், நிச்சயதார்த்தம் போன்றவற்றால் விஜய் மார்க்கெட் சரியவில்லை.

கல்யாணத்தின்பின் அப்பாஸ் மார்க்கெட் ஆட்டம் கண்டதுபோல விஜய் மார்க்கெட்டும் ஆட்டம் காணும் என்று கூறப்பட்டது. ஆனால் ஆடாமல் அசையாமல் இருக்கிறது.

படு படு பிஸியாக இருக்கிறார். ஷங்கருக்குக்கூட கால்ஷீட் தரமுடியவில்லை. தொடர்ந்து நூறு நாள் கால்ஷீட் கொடுக்கலாமா? என்றார் ஷங்கர். 'முடியாது மன்னிக்கவும்' என்றுவிட்டார் விஜய். இதனை விஜய்க்கு எதிர்வட்டாரம் ஷங்கர், விஜய் இடையே லடாய் மாதிரி கதை கட்டி விட்டனராம்.



ஷாருக்கான்-ப்ரீத்தி ஜிந்தா
படம்: உயிரே



## மூன்று க...

'புதுமைப்பித்தன்' படத்தில் பா...
ரோஜா பிரியாராமன், தேவயா...
என்பதுதான் கதையாம்.
பார்த்திபன் நடிப்பதாக
கைவிடப்பட்டது அதனால்
தனிக்கதை.
'கல்யாண சுந்தரம்...
கைவிடப்பட்டுள்ளன...
சொந்தத்தில் படம்...
'விஜய்', 'முரளி...
காதல் கதைகளுக்...
வைத்து படம்...
போயுள்ளனர்...
ஜிடும் கோபத்...

## அவர்கள் மறக்கவில்லை

கட்டழகு கவர்ச்சிப் புயல் சில்க் சுமிதாவை திரையுலகம் மெல்ல மெல்ல மறந்துவிட்டது. இந்த பூவைச் சுற்றிய திரையுலக வண்டுகள்கூட மறந்துபோய், வேறு பூக்களை சுற்றுகின்றன.

தெலுங்கு ரசிகர்கள் மட்டும் மறக்காமல் சுமிதாவுக்கு நினைவுச் சிலை ஒன்றை ஆந்திராவில் வைத்துள்ளார்கள். தெலுங்கில் சுமிதா போதை ததும்பும் கவர்ச்சியுடன் நடித்த பழைய படங்கள் இப்போது திரையிடப்பட்டால் அரங்கில் கனத்த மௌனம் நிலவுகிறதாம்.

சுமிதாவின் பின்னர் ஏராளமான கவர்ச்சி நடிகைகள் வந்திருக்கலாம். கதாநாயகிகளே திகட்ட திகட்ட கவர்ச்சி காட்டுகிறார்கள். ஆனால் யாராலும் சுமிதாவை நெருங்க முடியவில்லை.



பிரகாஷ்ராஜ்-மதுரிமா
படம்: குரு பார்வை

## கலைப்புலி செய்தால்...?

கலைப்புலி தாணு பழம் தின்னு கொட்டைபோட்ட தயாரிப்பாளர். விளம்பரம் செய்வதிலும் புலி. 'கூலிக்காரன்' படத்திற்காக விஜயகாந்துக்கு பிரமாண்டமான சிலை செய்து வைத்து கலக்கியவர்.

சிவாஜி, அர்ஜுன் நடிக்கும் 'மன்னவரு சின்னவரு' படத்தை தயாரித்து வருகிறார் தாணு.

படத்தொடக்க விழாவில் பேசிய தமிழக அரசின் உயரதிகாரி மலைச்சாமி "தாணுவின் பெயரிலேயே புலி இருக்கிறது. புலி எது செய்தாலும் சரியாகத்தான் இருக்கும்" என்றார்.

## குஷ்பு வருத்தம்

கார்த்திக் நடிக்கும் 'அத்தை மகள்' படத்தை இயக்கும் சுந்தர்.சி, சத்யராஜ், சரத்குமார் ஆகியோர் நடிக்கும் படங்களையும் இயக்குகிறார். சரத்குமார் நடிக்கும் படத்தின் பெயர்: ஒருவன்.

'அழகர்சாமி' படத்தில் சத்யராஜுக்கு ரம்பாவை ஜோடி சேர்க்கப் போகிறாராம். சுந்தருக்கும், ரம்பாவுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கு தீர்ந்ததில் ஒரே ஒருவர் வருத்தமாக இருக்கிறார். அவர்: குஷ்பு.

## நாக்கு நறுக்

சொல்லாமலே எல்லாப் படங்களையும் ஓரம் கட்டி விடும் போலிருக்கிறது 'சொல்லாமலே' படம்.

தன் காதலியிடம் ஊமைபோல நடித்து, பின்னர் கிளைமாக்ஸில் காதலுக்காக தன் நாக்கையே வெட்டிக் கொள்கிறார் லிவிங்ஸ்டன்.

'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்' போன்ற படங்களின் வெற்றியால், கிளைமாக்ஸில் வித்தியாசமாக ஏதாவது செய்தாக வேண்டும் என்ற கட்டாயம். இதில் நாக்கை அறுத்து காட்டியாகிவிட்டது. இனிவரும் படங்களில் எதையெல்லாம் அறுக்கப்போகிறார்களோ?!

## ...காதலிகள்

...ர்த்திபனுக்கு ஒன்றுக்கு மூன்று ஜோடிகள். ...ணி. இதில் யாரை கரம் பற்றுகிறார்

... இருந்த காங்கேயம்காளை பின்னர் ... சிமைப்பகவான ரவளி வருந்தியதும்

...', 'வெவரமான ஆளு' போன்ற படங்களும் ... நொந்துபோன பார்த்திபன் மறுபடி ... தயாரித்து இயக்கத் துணிந்து விட்டார். ...', 'பிரசாந்த்' என்று இளம் நாயகர்களின் ...கு மவுசு கூடிவிட்டதால்தான் பார்த்திபனை ... எடுக்க முன்வந்த பலர் ஒதுங்கிப் ...ாம். இதனால் தற்சமயம் காதல் மீதே ...த்தில் இருக்கிறார் பார்த்திபன்.

## சூப்பர் கூட்டணி

சத்யராஜ், மணிவண்ணன் கூட்டணி பலவெற்றிப் படங்களை அள்ளிவழங்கியது. 'கனம் கோட்டார் அவர்களே, 'வீரப்பதக்கம்', 'தோழர் பாண்டியன்' ஆகிய படங்கள் மட்டும் சிறு சறுக்கல்.

இதே கூட்டணி புதிய படம் ஒன்றை தரப்போகிறது. படத்திற்கு 'கவசம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். கோவைக் குண்டு வெடிப்பை' மையமாக வைத்து எடுக்கப்படும் படம் இது. துப்பறியும் அதிகாரியாக நடிக்கிறார் சத்யராஜ்.

24 மணிநேரம், 'சின்னத்தம்பி பெரியதம்பி' விடிஞ்சா கல்யாணம், பாலைவன ரோஜாக்கள், ஜல்லிக்கட்டு, அமைதிப்படை போன்ற சூப்பர் ஹிட் படங்களைத் தந்த இந்தக் கூட்டணி கவசத்தையும் சூப்பர் ஹிட்டாக்குமா?!

## மறுபடி சேரும் ஜோடி

சத்யராஜ், ரோஜா இணைந்து நடித்த படம், 'எங்கிருந்தோ வந்தான்'. அது சரியாகப் போகவில்லை.

அதன்பின்னர் இந்த ஜோடி பிரிந்தது. மறுபடி தற்போது இணைகிறது. குஷ்புவின் காதலர் சுந்தர்.சி இயக்கும் படம் 'அழகர்சாமி'. அப்படத்தில்தான் சத்யராஜும் ரோஜாவும் இணைகின்றனர்.

கவுண்டமணி, செந்தில், மனோரமா, பொன்னம்பலம், ராதாரவி ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: தேவா. பாடல்கள்: பழனிபாரதி, அறிவுமதி.

## காதோடு சொல்லுகிறோம்

**வி**சித்திரமான நடிகை காரில் போய்க் கொண்டிருக்கையில், குறுக்கே போனார் ஒரு இளைஞர். தெருவைக் கடக்கும் அவசரம். நடிகைக்கு போதை மயக்கம். காரை நிறுத்துமாறு சாரதியிடம் கூறிவிட்டு, அந்த இளைஞரை 'தே- - யா மகனே' என்று திட்டித் தீர்த்தாராம்.

**பி**ற நடிகர்களுடன் ஒட்டி நடிக்க வேண்டாம். உரசி நடிக்க வேண்டாம் என்று பூவின் பெயர் கொண்ட நடிகைக்கு மனைவியான காதலர் கட்டளைபோட்டாராம். "நீ மட்டும் நடிகைகளை விதம் விதமாக பாதி நிர்வாணமாக்கி ரசிக்கலாம். நடிப்பு சொல்லிக் கொடுக்கிற சாக்கிலே பிடிக்கலாம், நான் மட்டும் நடிக்கக்கூடாதாக்கும்" என்று செப்பினாராம் நடிகை. காதலர் அடங்கி பணிந்து விட்டார்.

**ஹீ**ர நடிகைக்கும், குமார நடிகருக்கும் இடையே பழையமாதிரி லவ் தளைக்க வைக்க அரும்பாடுபடுகின்றனராம் நட்சத்திர தம்பதி. சேர்த்து வைப்பது, பிரித்து வைப்பது, கிளு கிளு சந்திப்புக்கு ஏற்பாடு செய்வது போன்ற காரியங்கள் என்றால் நட்சத்திரத் தம்பதிக்கு அல்வா சாப்பிடுவது மாதிரியாம்.

**ர**ம்ப நடிகையை இந்தியில் பிரபல நடிகர் ஒருவர் 'டிஸ்கஷன்' செய்ய அழைத்தாராம். ஸ்ரீதேவியுடனும் கிசுகிசுக்கப்பட்ட அந்த நடிகரின் அழைப்பை அன்புடன் ஏற்று அவருடன் சில நாட்கள் தங்கியிருந்து 'டிஸ்கஷன்' முடித்து வந்தாராம் நடிகை.

**க**விதையோடு தொடர்புடைய பெயர் கொண்ட நடிகையிடம் 'டிஸ்கஷனில்' வசமாக மாட்டிக்கொண்டாராம் பிரமச்சாரி தயாரிப்பாளர் ஒருவர். தன்னை பிரமச்சாரி என கூறிக்கொள்ளும் அந்த தயாரிப்பாளர் தமிழக அரசியல் தலைவர் ஒருவருக்கு வலது கரம். புது நடிகைகள் யார் தோன்றினாலும் அவர்கள் தன்முன் தோன்ற வேண்டும் என்று விரும்புவார் பிரமச்சாரி. கவிதைத்தனமான நடிகையையும் அப்படித்தான் அழைத்தார். சம்மதித்து சென்ற நடிகை அவரை உடும்புப் பிடியாக பிடித்து பெரும்தொகை கறந்து விட்டாராம்.

**த**ம்மை நாடி வரும் தயாரிப்பாளர்களிடம் தங்கைகளை சிபாரிசு செய்யும் நடிகைகளைப் பார்த்திருக்கிறோம். நட்சத்திர தம்பதியின் வாரிசான நடிகை புதுமை செய்கிறார். தன் அக்காவை சிபாரிசு செய்கிறார். நடித்து மார்க்கெட் சரிவடைந்து இருக்கும் வனிதமான அக்காவுக்கு தங்கையின் சிபாரிசில் தெலுங்குப் படம் ஒன்றில் வாய்ப்புக் கிடைத்ததாம்.

## மச்சினருக்கு கல்தா!

'லவ் பண்ணுங்க சார்' படப்பிடிப்பில் கவுண்டமணியும், ஆர்.சுந்தர்ராஜனும் கட்டிப்புரண்டு அடிபட்டது பழைய செய்தி.

அந்தப் பட இயக்குநர் ரங்கநாதனுடன் பேரம் பேசினார் கவுண்டமணி. "நஷ்டஈடாக சில இலட்சங்கள் தருகிறேன். அந்த ஆளை தூக்கிவிக. நான் நடிக்கிறேன்" என்றாராம். ரங்கநாதன் யோசிக்கவில்லை தூக்கிவீசிவிட்டார். இத்தனைக்கும் ஆர்.சுந்தர்ராஜன் படம் இயக்கியபோது அவரது உதவியாளராக இருந்தவர் ரங்கநாதன்.

அது மட்டுமா, ஆர்.சுந்தர்ராஜனுக்கு ரங்கநாதன் மச்சினர் முறை. "முதலில் கவுண்டரை வம்புக்கிழுத்தவர் சுந்தர்ராஜன்தான். அதனால் தான் அவரை நீக்கினேன்" என்கிறார் ரங்கநாதன்.



கரண்-ரேஷ்மா
படம் கண்ணாத்தாள்




## இரவு விஜயம்

சென்னையில் அடையாறு பார்க் ஷெரட்டான் ஹொட்டல் பிரபலமானது. தற்போது மேலும் பிரபலமாகி வருகிறது.

பிரபல அரசியல் புள்ளிகள், தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், சில நடிகர்கள் இந்த ஹொட்டலில்தான் ரூம் எடுத்துத் தங்குவார்கள்.

அருணா, சாந்தி கிருஷ்ணா போன்ற மார்க்கெட் டல்லான நடிகைகள் முதல், சூப்பர் நடிகைகள் வரை இங்கு வந்துபோகிறார்களாம்.

இரவு பதினொரு மணிக்கு மேலே உள்ளே போய் அதிகாலை இரண்டு மணிக்கு டாட்டா சொல்லி விட்டு போய்விடுகிறார்கள்.






ரம்பா

## கல்யாண கலாட்டா

திருமணம் செய்தவனுக்குத்தான் என் தியேட்டரில் மனேஜர் உத்தியோகம் என்று கூறுகிறார் மணிவண்ணன். உடனே தனக்கு கல்யாணமானதாகவும், மனைவி இறந்துவிட்டதாகவும் கூறி குஷ்புவின் படத்தைக் காட்டுகிறார் சத்யராஜ். வேலை கிடைக்கிறது. 'நீதான் என்புருஷன்' என்று குஷ்புவே நேரில் வர.. சத்யராஜ் முழிக்க, ஜாலியான குழப்பம். வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் படம் கல்யாண கலாட்டா.

குஷ்பு இருந்தாலும் கவர்ச்சிப் பிரமாண்டம் காட்ட மந்த்ராவை போட்டுள்ளனர். எம்.ஜி.ஆர் போல பேசுவதிலும், நடிப்பதிலும் கைதேர்ந்தவரான சத்யராஜ், இப்படத்தில் சிவாஜி முதல் அஜித்குமார் வரை பலர் மாதிரியும் நடித்து கலகலப்பூட்டுகிறார். சிரிக்க மட்டும் பார்க்கலாம்!

## நடிகர்கள் நாடிய பொருள்

தமிழ்ப்பட உலக பிரபல நடிகர் ஒருவர் வெளிநாடு சென்று திரும்பி வந்திருந்தாராம். வந்ததும் வராததுமாக தன் சக நடிக நண்பர்கள் சிலருக்கு ஃபோன் செய்து ஒரு தகவலைக் கூறியிருக்கிறார்.

அடுத்த நொடியே புறப்பட்ட நடிகர்கள் குறிப்பிட்ட நடிகரின் வீட்டை முற்றுகையிட்டனர்.

அந்த நடிகர் சென்றுவந்த நாடு அமெரிக்கா. கொண்டுவந்த பொருள் 'வயாக்ரா.'

இந்த விவகாரம் எப்படியோ நடிகைகள் வட்டாரத்தை எட்டியுள்ளது. ஹீரோக்கள் சிலருடன் நெருக்கமான நடிகைகள் கலக்கத்தில் இருக்கிறார்களாம்.

திரையுலகில் நடிகைகளுக்கு வில்லனாக மாறப்போகிறது வயாக்ரா. ஏற்கனவே நடிகைகள் பலரை பாடாய் படுத்துகிறார்கள். தங்கள் வக்கிரங்களின் வடிகாலாக அவர்களை மாற்றியிருக்கிறார்கள்.

இந்த இலட்சணத்தில் வயாக்ராவும் இவர்கள் கையில் கிடைத்தால் தங்கள் கதி என்னாகுமோ என்றுதான் நடிகைகள் கலங்கிப்போயுள்ளனர்.

## 13 வருட போராட்டம்

'ஆசை' பட வில்லன் பாத்திரம் பெயர் தேடிக் கொடுத்தது. அதற்கு முன் 'டூயட்' பட வில்லன் பாத்திரமும் பிரமாதம்.

அதன் பின்னர் கதாநாயகனாகவும் உயர்ந்த பிரகாஷ்ராஜ், 'இருவர்' படத்தின் மூலம் சிறந்த துணை நடிகர் தேசிய விருதும் பெற்றார்.

ரகுவரன் பாணியில்தான் பிரகாஷ்ராஜ் நடிப்பதாக கூறப்படுவதுண்டு. அவர் மறுக்கிறார்.

"நான் அப்படி நடிக்கமாட்டேன். ஒருவேளை அப்படி தெரிந்தால், என்னை வைத்து இயக்கியவர்களிடம் கேளுங்கள்" என்று கோபப்படுகிறார்.

தெலுங்கு, கன்னடம் போன்ற பிறமொழிப்படங்களிலும் வில்லனாக நடிக்கிறார்.

கிட்டத்தட்ட பதின்மூன்று வருடங்கள் சினிமாவில் வாய்ப்புத் தேடி போராடினாராம். இப்போதுதான் அதிஷ்டம் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது.

**முகப்பில்**
கௌசல்யா
கீர்த்திரெட்டி

# தூறல் மழை ஞாபகங்கள்

எப்போதும்
என்-இதயத்தை
நனைத்துக் கொண்டிருக்கும்
இன்பத் தூறல்கள் அவை!
..
ஒரு நாள்...
வகுப்பு முடிந்த-
மாலை நேர மங்கலில்
அந்த தூறல் மழை!
..
எனக்கு-
நீ தந்த குடை
அன்பிலா...?
அனுதாபத்திலா...?
என-
பிரித்துப் பார்க்க முடியாத
பின்னல்!
..
குடை தந்துவிட்டு
உன் தோழியோடு
நீ-சேர்ந்த போது
உனக்குப் பதிலாய்...
என் தோழனையல்லவா
என்னோடு-
அணைத்துக் கொண்டேன்!
..
அது-
நான் நனையாமல்
தந்த குடையல்ல,
என்னுள் இருக்கும்
நீ-நனையாமல்
தந்த குடை!
..
இன்னொரு நாள்...
நீண்ட இடைவெளிக்குப் பின்
நம்-சந்திப்பின்போது
தூறிய தூறல்...
..
அந்த-
வழிப்பாதை தூறலில்-
உன்னை நனைத்து
எனக்கு
குடை தந்த போது
நான் மறுத்து
உன் பரிவு-நினைப்பில்
குளிர்காய்ந்து வந்தேனே!
..
சேர்ந்திருந்த நாம்
பிரியக் கூடாதென்று
சிலமணிநேரம்
தொடர்ச்சியாய் பெய்ததே
அந்தத் தூறல்....!
..
எனக்கு வரும்
வரண்ட சோகங்களை
இந்த-தூறல்களில்
நனைத்துத் தானே
சுகம் காணுவேன்!
..
அவை-
எப்போதும்
என்-இதயத்தை
நனைத்துக் கொண்டிருக்கும்
இன்பத் தூறல்கள்!

ரெட்ணம் சாந்தசீலன்-பொத்துவில்.

# தேன் கிண்ணம்



## என்னுயிரே பிரியாதே!

நானே
நீயாகி
நீயே
நானாகி
போன பின்னும்,
எனக்கில்லா
மதிப்பு
உனக்கு
அதிகம்தான்!
**
என் வார்த்தைகள்
உணர்த்தா
உண்மைகள்
உன்
மௌனத்தினால்
எவ்வாறு
உணர்த்துகிறாய்?
**
அன்பே!
நீயின்றி
என் வாழ்வில்லை
என்பது
உனக்குத்
தெரியாதா?
**
மறந்தும் நீ
எனைப் பிரிந்தால்
என்
செய்வேன்
நான்
உலகில்?
**
என்
உறவுக்கு
உறவாகி
உயிருக்குக்
காவலாகி
உடன் இருக்கும்
'அடையாள அட்டையே'
பிரியாதே எனைவிட்டு!
**

அகிலா ஜெகதீசன்-
வவுனியா.

## (கொ)லை!

மனிதப் படுகொலைகள்,
மகா சாதாரணங்கள்!
இனித்தப்ப முடியாது,
இந்த யுக மானிடம்!

கணிதப்போர் நடத்துகின்ற,
புதிய வரலாறு இது!
உலோகங்களின்,
துளித் துளி வார்த்தைகளுக்குக்
கட்டுப்படுகின்ற

மானிட வரலாறு இது!
கொலைகளுக்குப் பரிசு வழங்கும்
புதிய நோபல் இது!
விரல்களில் எமனைச் சுண்டும்,
வீர விளையாட்டு இது!

ஹிட்லரைத் தோற்கடிப்பது,
எப்படி என்ற இலகு சிந்தனை!
காலத்தை,
கைகளுக்குள் பொத்தி வைக்கும்
கடைசிக் கண்டுபிடிப்பிது!

சடங்களுக்காய்ச் சண்டையிட்டு,
விடங்களை அருந்திய
சடலங்கள் இவை!

தேடுங்கள் என்று சொல்லித்
தெரிவுகளை இடறிவிடும்
மூடங்கள் இவை!

ஈச்சையூர்ச் சிவா.



அன்னை தெரேசாவுடன்



குழந்தை வில்லியமுடன்



# புன்னகை அரசி



சிநேகிதியின் குழந்தைகளுடன்

டயானாவை விபத்து கொய்து விட்டது. அவர் உதடுகளில் வழிந்து கொண்டிருந்த புன்னகையை மரணத்தின் கொடூரக் கரங்கள் அழித்துவிட்டன. அந்தச் செய்தியை உலகம் அறிந்து, கண்கள் பனிக்க, கடும் சோகம் விரிந்தநாள் ஆகஸ்ட் 31,1997- நேற்றுப்போல இருக்கிறது. ஒரு வருடம் உருண்டோடிவிட்டது . ஆனாலும் டயானா அவரை நேசித்தவர்களின் நினைவுகளில் இருந்து உருண்டுவிடவில்லை.

# இந்த வாரம் உங்கள் பலன்

(06.09.1998 தொடக்கம் 12.09.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், இராகு. |
| கடகம் | - செவ்வாய், சுக்கிரன், புதன். |
| மீனம் | - குரு. |
| மேடம் | - சனி. |

சந்திரன்- கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக் குறை நீங்கும், பண வரவு. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- தொழில் மேன்மை, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- காரியானுகூலம், இனசன நன்மை. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- உறவினர் உதவி, கடன் சுமை நீங்கும். | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- வெளிவிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 3 மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், வீண் விரோதம். | பகல் | 12 மணி |
| **திங்கள்**- தொழில் கேடு, பணக் கஷ்டம். | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 3 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| **சனி**- காரியக்கேடு, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- வெளிவிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| **வியாழன்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 3 மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 மணி |
| **சனி**- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் நஷ்டம், பணவரவு குன்றும். | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- வெளிவிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 மணி |
| **வியாழன்**- வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 1 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளிவிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல். | 12 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பகல். | 12 மணி |
| **வியாழன்**- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- கடன்தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் | 11 மணி |
| **சனி**- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- தொழில் நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், பலவித பேறு. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், மனக் கவலை. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- உயர்ந்த எண்ணம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- வீண் குறை கேட்டல், அந்நியர் பகை. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- முயற்சி பலிதம், தொழில் மந்தம். | பகல் | 12 மணி |
| **வியாழன்**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| **வெள்ளி**- வெளிவிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **சனி**- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனமகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- தொழில் நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், பலவித பேறு. | பி.ப. | 3 மணி |
| **புதன்**- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- காரியானுகூலம் தொழில் சிறப்பு. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், கடன் சுமை. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 மணி |
| **புதன்**- வெளிவிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், பண வரவு. | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- மனக் குறை நீங்கும், பலவித பேறு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 12 மணி |
| **சனி**- வீண் குறைகேட்டல், இனசன விரோதம். | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- வெளிவிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| **வியாழன்**- கடன் சுமை, யோசனை மிகுதி. | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| **சனி**- உறவினர் இழப்பு, மனக் கவலை. | பி.ப. | 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

## பப்பாளி இருக்க பார்மஸி எதற்கு?



நகர்ப்புறங்களைவிட ஏனைய இடங்களில் பப்பாளிப் பழம் விலை குறைவு. விலை குறைவு என்பதால், அதில் இருக்கும் சத்துக்களை குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள்! மனிதனின் ஆரோக்கியத்திற்குத் தேவையான 'டொனிக்' போன்ற சத்துக் கள் அதில் நிறைய உள்ளன. கூடவே விட்டமின்கள் 'ஏ'யும் 'டி'யும் அதிகம் உள்ளன.

வயிற்று வலி, நிமோனியா, கண்நோய்களுக்கு பப்பாளி நல்ல மருந்தாகும். வயிற்றைச் சுத்தப் படுத்த இது அத்தியாவசியமாகத் தேவைப் படுகிறது.

பொதுவாகவே பழுத்த, இனிப்பு நிறைந்த பப்பாளியைச் சாப்பிட வேண்டும். ஈரலுடன் தொடர்புடைய நோய்கள், சளி, இரத்தத்தில் ஏற்படும் கோளாறுகள், சரும நோய்கள் போன்றவை பப்பாளியால் கட்டுப்படுகிறது.


பெண்கள் பப்பாளிப் பழம் நிறையச் சாப்பிடலாம். மதிய உணவுக்குப் பிறகு அதனைச் சாப்பிடுவது சிறந்தது. தினமும் சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிட்டும்.

பப்பாளிப்பழம் அழகையும் மெருகூட்டுகிறது. இதன் சாறை முகத்தில் தேய்த்தால் முகத்தில் இருக்கும் புள்ளிகள் நீங்கும்.

பப்பாளிச்சாறு குடித்தால் வயிற்றில் ஏற்படும் கிருமித்தொல்லை நீங்கும். இரத்தம் தொடர்புடைய நோய் இருப்பவர்கள் தினமும் அதிகாலையில் வெறும் வயிற்றில் பப்பாளி சாப்பிட்டு வரவேண்டும்.

## டயானா அணியாத ஆடை

இளவரசி டயானாவின் பெரும்பாலான ஆடைகளை வடிவமைத்துக் கொடுப்பவர் அன்ட்ரு ராம்ரூப் என்னும் பிரசித்தி பெற்ற ஆடை தயாரிப்பாளர். இவர் வடிவமைத்துக் கொடுத்த ஆடைகள் அத்தனையும் டயானாவுக்கு கன கச்சிதமாகப் பொருந்தியுள்ளன. டயானா மனம் திறந்து ராம்ரூப்பைப் பாராட்டுவார்.



அன்ட்ரு ராம்ரூப்

எத்தகைய சந்தர்ப்பத்துக்கு உடை தயாரிக்க வேண்டும் என்று மட்டும் ராம்ரூபிடம் டயானா கூறுவாராம். அதற்கு ஏற்றாற்போல் ஆடை அமைந்துவிடுமாம். ராம்ரூபிடம் காரணத்தைக் கூறாமல், "மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும். அதிக வர்ணங்களில்லாத- எடுப்பாகக் காட்டக்கூடிய உடை வேண்டும். ஒரு சில நாட்களுள் தயாரித்துத்தர முடியுமா?" என்று ஒருமுறை ராம்ரூப்பிடம் கேட்டார்; எத்தகைய நிகழ்ச்சி என்பதைக் கூறவில்லை.

ராம்ரூப், எளிமையும் அழகும் ஆளுமையும் பிரதிபலிக்கத் தக்க ஆடையை ஒரு வாரத்தில் தயாரித்து கென்சிங்டன் மாளிகை சென்று டயானாவிடம் கையளித்தார்.

டயானாவின் முகத்தில் மகிழ்ச்சிப் பிரவாகம் கரை புரண்டோடியதாம். அங்கேயே அந்த ஆடையை அணிந்து பார்த்தபோது மிகப் பொருத்தமாக இருந்ததாம். வெகுவாகப் பாராட்டியதுடன் அடுத்த நாளே தன் கைபடவே எழுதிய நன்றி தெரிவிக்கும் குறிப்பினையும் அனுப்பிவைத்தாராம்.

உலகளாவிய ரீதியில் ஒளிபரப்பாகும் 'பனரோமா' தொலைக்காட்சி பேட்டியின் போது அணியவே இந்த ஆடை. பேட்டியைப் பார்த்த அனைவரும் அந்தக் கருநீல ஆடையையும் பாராட்டாமலில்லை என்றே சொல்லலாம்.

மேலே உள்ள படத்தில் ராம்ரூப் தன் கையில் வைத்திருக்கும் ஆடையைப் பார்த்துப் பார்த்து இன்றும் கண்ணீர் விடுகிறார். டயானா விபத்தில் சிக்கி அகால மரணமடையுமுன் தன்னிடம் மூன்று ஆடைகள் தயாரித்துத் தரும்படி கூறியிருந்தாராம்.

அவை பூரணமாக முடியுமுன்னே தனது வாழ்நாளை டயானா முடித்துக் கொண்டார். பாதி முடிவடைந்த அந்த மூன்று ஆடைகளை தனது பணிமனையில் தொங்க விட்டுள்ளார் ராம்ரூப். பல பேர் பெரும் பணத்துடன் வந்து அவரை இரந்துகேட்டபோதும் அவர் அவற்றை விற்கவில்லை.

அவற்றை எப்போதும் டயானாவின் நினைவாக ராம்ரூப் வைத்திருக்கிறார்.

"இந்த ஆடைகள் இளவரசி டயானாவுக்காக மட்டுமே தயாராக்கப்பட்டவை. இவற்றை வேறொருவர் அணிவதை நான் உயிருள்ளவரை அனுமதிக்க மாட்டேன். அவர் உயிருடனிருந்து இவற்றை அணியும் போது நிச்சயம் பெரு மகிழ்ச்சி அடைந்திருப்பார்!" என்று சோகமாகக் கூறுகிறார்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EI

பெயர்:......................

முகவரி:......................

......................

தொழில்:......................

கையொப்பம்:......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-09-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.






ஹைகுரோவ் மாளிகை

## அறிமுகமில்லாத குரல்



டயானாவுடன் மறுமுனையில் பேசிய குரல் அவருக்கு பரிச்சயமில்லாதது.

'டயானாவின் அபிமானி' என்று அந்த ஆண்குரல் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது.

அந்தப் ஃபோன் வரும்போது நேரம் நள்ளிரவாகியிருந்தது. தனிமையின் புழுக்கத்தில் இருந்த டயானாவுக்கு அந்தக்குரல் அனுதாபம் தெரிவித்தது.

குரலுக்குரியவருக்கு அதிக வயது இருக்காது என்று நினைத்தார் டயானா.

அறிமுகமில்லாத ஒருவருடன் எதற்குப் பேசவேண்டும்? என்று தொடர்பைத் துண்டிக்க நினைத்தார். ஆனாலும் அந்தக் குரலில் ஒரு ஈர்ப்பு இருந்தது. மிக அந்தரங்கமாகப் பேசும் குரலாக அவர் காதுக்குள் ஒலித்தது.

பொதுவாகப் பேசத் தொடங்கிய மறு முனைக் குரல் படிப்படியாக அந்தரங்கமான பேச்சுக்களை ஆரம்பித்தது.

"இந்த நள்ளிரவில் தனிமை உங்களை வாட்டுகிறதா?

இந்தப் பிரபஞ்சத்திலேயே மிக உன்னத அழகியான உங்களைக் கட்டியாள இளவரசருக்குக் கொடுத்து வைக்கவில்லை.

உங்கள் கால் அழகைப் பார்த்தே நான் பல இரவுகள் தூங்காமல் இருந்திருக்கிறேன்.

அந்தக் கால்களை இப்போது நான் முத்தமிடத் தொடங்குவதாக நினைக்கிறேன். நுனிவிரலில் ஆரம்பித்து என் உதடுகளால் ஒத்திக் கொண்டே முன்னேறுகிறேன்.

நீங்கள் சிலிர்க்கிறீர்கள். கண்களை மூடிக் கொண்டு முணுமுணுக்கிறீர்கள். 'கெட்ட ராஸ்கல்' என்று என்னை சபிக்கிறீர்கள்.

என் தலையில் குத்துகிறீர்கள். பிராண்டுகிறீர்கள். நான் என் காரியத்தில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் உங்களை சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமாகிறேன்.

என் உதடுகள் ஒரு தேவதையின் தங்க உடலை எங்கெல்லாம் ஸ்பரிசித்துவிட்டன? என்னால் நம்பமுடியவில்லை."

அவன் அதற்குமேலும் விபரித்துக் கொண்டே இருந்தான். டயானா குறுக்கே எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டே இருந்தார்.

டயானா மூச்சுவிடும் சப்தம் மறுமுனை வரை எட்டியது. அதனால்தான் டயானா கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார் என்று அவனுக்குத் தெரிந்தது.

கால்களை மட்டுமல்லாமல், அதற்குமேலும் அவன் விபரித்தான். அந்த நள்ளிரவுக் குளிரும், தனிமையும், அறிமுகமில்லாத ஆண்குரலின் சூடான பேச்சும் டயானாவுக்கு புதிய அனுபவமாக இருந்தது.

### கனவா, நனவா

ஃபோன் வழியாக அவன் கைகள் நீள்வது போலவும், ஸ்பரிசிப்பதுபோலவும் பிரமை தோன்றியது.

தன் கட்டிலில் தலையணைக்கு அடியில் டயானாவின் கால் அழகு தெரியும் படத்தை வைத்திருப்பதாக அவன் கூறினான்.

அப்படத்தில் எங்கெங்கு தான் தினமும் முத்தம் கொடுப்பேன் என்று கூறியபோது, தனக்கு அவன் மீது கோபம் வருகிறதா, அல்லது உள்ளூர இரசிப்பு வருகிறதா? என்ற உணர்ச்சிகளை இனம் காணமுடியாத நிலையில் இருந்தார்.

எதுவுமே பேசாமல் தொடர்பை துண்டித்துவிட்டு படுத்துக்கொண்டார்.

மறுபடி ஃபோன் செய்வானோ என்று நினைத்தார். அவன் எடுக்கவில்லை. அதன் பின்னர் எப்போதும் அந்தக் குரலை டயானா கேட்கவில்லை.

இந்த அனுபவத்தையும் வழக்கம்போல தன் சிநேகிதிகளிடம் விவரித்தார் டயானா.

'ஃபோன் வந்தது போல கனவு ஏதாவது கண்டிருப்பேனோ?' என்றும் சந்தேகப்பட்டாராம்.

அந்தப் ஃபோன் குரல் ஆழ் மனதில் உறங்கிக்கிடந்த உணர்ச்சிகளை உசுப்பி விட்டது.

தவிர்க்க விரும்பிய ஆண்துணையை தவிர்க்க முடியாத ஒன்றாக மீண்டும் மனதில் கிளர்ச்சி ஏற்படுத்திவிட்டது.

மீண்டும் ஃபோன் குரல் கேட்காததால் தான் கண்டது கனவா, நனவா என்று சந்தேகம் வந்தது. கனவோ, நனவோ அந்தக் குரலில் வழிந்த காமம் டயானாவுக்குள் சங்கமம் ஆகிவிட்டது.

அறிமுகமில்லாத அந்த ஆண்குரல் தன் அங்கங்களை வர்ணித்ததை நினைத்த டயானாவுக்கு சாள்ஸுடன் காதல் மலர்ந்த காலங்களும் நினைவில் தோன்றின.

இளவயதிலேயே உடலைப்போணுவதில் டயானாவுக்கு அக்கறை இருந்தது. அவரை நீச்சலடிப்பதில் மீன் என்றே கூறலாம். நீச்சலும், விளையாட்டுக்களும் டயானாவின் அங்கங்களை அளவோடும், அழகோடும் வைத்திருந்தன.

டயானாவுடன் நெருங்கிப்பழக ஆரம்பித்த போது அவரது அங்கங்களில் தெரிந்தும் தெரியாததுபோல பட்டுக்கொள்வார் சாள்ஸ்.

"உன் உடலமைப்பு சொல்லி வைத்து அளவெடுத்துச் செய்ததுபோல இருக்கிறது!" என்று முதன்முதலில் டயானாவை முழுவதும் அறிந்த தடையற்ற முதலிரவில் சாள்ஸ் கூறினார்.

### ஹைகுரோவ்மாளிகையில்

டயானாவைப்பிரிந்து சாள்ஸ் தங்கியிருந்த மாளிகை ஹைகுரோவ் மாளிகை என்றழைக்கப்படும்.

அந்த மாளிகையை எட்டு இலட்சம் பவுண் (சுமார் 8 கோடி 64 இலட்சம் ரூபாய்) கொடுத்து சாள்ஸ் வாங்கியிருந்தார். அப்போது தன் காதலியான டயானாவை அந்த மாளிகையைச் சுற்றிக்காட்ட அழைத்துச் சென்றார்.

18ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பிரமாண்டமான மாளிகை அது. உள்ளே பெரிய தோட்டமும் இருக்கிறது.

அந்த மாளிகையைப் பார்த்ததும் டயானா பெரும் ஆச்சரியத்துக்கு உள்ளாவார் என்று சாள்ஸ் நினைத்தார்.

ஆனால் டயானாவுக்கு அந்த மாளிகையின் கண்ணை உறுத்தும்விதமான அலங்கார வேலைப்பாடுகள் பிடிக்கவில்லை. சாள்ஸ் முன்பாக முகம்சுளிக்கக்கூடாது என்று நாகரிகம் காத்தார்.

சாள்ஸ் அந்த மாளிகையின் மிகப் பெரிய கட்டிலறைக்கு டயானாவை அழைத்துச் சென்றார்.

அறையைச் சுற்றி டயானா பார்வையிட்டுக் கொண்டிருக்கும்போதே பின்புறமாக வந்து டயானாவைத் தழுவிக்கொண்டார்.

டயானாவின் வயிற்றில் பதிந்த சாள்ஸின் கரங்கள் அங்கிருந்து மேலேறியபோது, டயானா தடுக்கவில்லை.

சாள்ஸ் மெய்மறந்து தான் ஸ்பரிசித்த அங்க கச்சிதங்களை புகழ்ந்துதள்ளினார்.

இப்போது அதனை நினைக்கையில் மது குடித்த நரி என்றுதான் சாள்ஸை கூறத் தோன்றியது டயானாவுக்கு.

ஹைகுரோவ் மாளிகையில் முன்னர் தன்னைத் தழுவிய கட்டிலறையில், இப்போது கமீலாவை அணைத்துக் கொண்டிருப்பார் சாள்ஸ் என்று நினைக்கையில் டயானாவுக்கு பொறாமையும் சிறிது தலைதூக்கும்.

### பிள்ளைகள் ஆர்வம்

தன் பிள்ளைகள் இருவரும் கென்சிங்டன் மாளிகைக்கு வந்தால் அவர்களை அணைத்தபடியே பொழுதைப் போக்க டயானா விரும்புவார்.

அவர்களோ தமக்கு விருப்பமான வீடியோப் படங்களைப் பார்ப்பதிலோ, வீடியோ விளையாட்டுக்களில் ஈடுபடுவதிலோ பொழுதைப் போக்கவே விரும்புவர்.

இதனால் டயானா சிறிது ஏமாற்றம் அடைவதுண்டு.

பிள்ளைகள் இருவரும் ஆரோக்கியத்துடன் வளர்ச்சியடைந்துவருவது டயானாவுக்கு சந்தோசத்தைத் தரும்.



வளர வளர அவர்கள் தன்னை விட்டு விலகிப் போய்க் கொண்டு இருப்பார்களோ என்ற அச்சமும் எழும்.

பிள்ளைகள் இருவரும் இருக்கும் வரை கென்சிங்டன் மாளிகை கலகலப்பாக இருக்கும். அவர்கள் பள்ளிக்கூடம் போய் விட்டால் அந்த மாளிகை களை இழந்து விடும்.

அங்குள்ள தொலைபேசிகளின் மணி மட்டும் அங்கு நிலவும் அமைதியைக் குலைக்கும்.


(அடுத்த வாரமும் வரும்)



**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**ஜி. வனிதா,
629 A, அளுத்மாவத்த வீதி,
கொழும்பு-15.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி**

**தினமுரசு- அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 17**

- முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
- 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
- தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.





> எண்ணுங் காரியங்க ளெல்லாம்–வெற்றி
> யேறப் புரிந்தருளல் வேண்டும்–தொழில்
> பண்ணப் பெருநிதியம் வேண்டும்–அதிற்
> பல்லோர் துணைபுரிதல் வேண்டும்!
>
> –சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நெஞ்சில் வீரம் வேண்டும்!

**ஒரு** காட்டிற்குள் மான் கூட்டம் ஒன்று வசித்து வந்தது. அந்த மான் கூட்டத்தில் மிகவும் கொழுத்த மான் ஒன்றும் இருந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்த குட்டி மான் ஒன்று, இந்தக் கொழுத்த மான் மிகவும் பலமானது, மற்ற விலங்குகளை விடப் பயங்கரமானது என எண்ணியது.

காரணம் கொழுத்த மான் உருவத்தில் மற்ற மான்களை விடப் பெரிதாகவும், நீண்ட கொம்புகளையும் கொண்டிருந்தது. அத்துடன் வேகமாக ஓடவும் கூடியது.

ஒருநாள் கொழுத்த மான் வேகவேகமாக ஓடிவந்தது. ஓடிவந்து நின்றுகொண்டு அப்படியும் இப்படியும் பார்த்தது.

இதைக்கண்ட குட்டிமான், கொழுத்த மானிடம் ஓடிப்போனது. அங்கு சென்று, கொழுத்த மானிடம்:

"ஏன் இப்படி ஓடிவந்து அங்குமிங்கும் பயந்தபடி பார்க்கிறீர்கள்?" என்று கேட்டது.

"என்னைத் துரத்திக்கொண்டு ஒரு வேட்டை நாய் ஓடிவந்தது. எப்படியோ அதனிடமிருந்து தப்பிவிட்டேன். இருந்தாலும் பின்னால் வருகிறதா என்றுதான் பார்த்தேன்!" என்று மூச்சிரைத்தபடி சொன்னது.

"நீங்கள் வேட்டை நாயை விட மிகவும் பெரிதாக இருக்கிறீர்கள். உங்களிடம் கூரிய கொம்புகள் இருக்கின்றன. ஆனால் வேட்டை நாயிடம் கொம்புகளே கிடையாது. நீங்கள் மிகவும் வேகமாக ஓடிக்கூடியவர்.

ஆனால் வேட்டை நாயைப் பார்த்து நீங்கள் 'பயந்து ஓடிவருகிறேன்' என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது!" என்று சொன்னது குட்டிமான்.

இதைக் கேட்ட கொழுத்தமான், குட்டி மானிடம்:

"நீ சொல்வது எல்லாம் சரிதான். நான் வேட்டை நாயை விட உருவத்தில் பெரியவன். கூர்மையான கொம்புகள் என்னிடம் இருக்கின்றன. இந்தக் கொம்புகளால் பிறர் உடம்புகளைக் குத்திக் கிழிக்க முடியும்.



மற்ற விலங்குகளை விட வேகமாக ஓடக்கூடிய வலிமை என் கால்களுக்கு உண்டு. இவைகள் எல்லாம் இருந்தும் என்ன பயன்?


என்னிடம் இருக்கும் இவ்வளவு திறமைகள் இல்லாத வேட்டை நாயிடம் வீரம் இருக்கிறது. நெஞ்சத்தில் வீரம் இல்லாவிட்டால் எவ்வளவு பெரிய உருவமாக இருந்தாலும் பயன் இல்லை!" என்று உள்ளதை உள்ளபடியே கூறியது கொழுத்த மான்.

'ஒருவரின் தோற்றத்திற்கும், வீரத்திற்கும் சம்பந்தமில்லை. வீரம் நெஞ்சில்தான் உள்ளது. உருவத்தில் இல்லை' என்பது குட்டிமானுக்கு அப்போதுதான் புரிந்தது.

## அதிசயம் – ஆனால் உண்மை!



**பிரசீலின் டிஷி ஒக்கிட்:** ← இந்த வண்ணமலரின் ஒரு இதழ் மனித முகம் போல் காட்சியளிக்கும்.



**ப்ரையோ ஃபைலம்:** ↗ இந்தச் செடியின் இலையோ, தண்டோ, அல்லது இச்செடியின் வேறெந்தப் பகுதியாவது நிலத்தில் விழுந்தால் மீண்டும் முளைத்து எழும்பும்.



**கூடு:** ↑ ஜாவா நாட்டில் செத்தஸ் எனப்படும் தேனீக்கள் இலைகளை ஒட்டிக்கூடு அமைக்கின்றன. பின் கூட்டின் மேல் இலைகளினாலான தனிக் கூரையைப் பொருத்தி மழையில் இருந்து கூட்டைக் காக்கின்றன.



**கடல் பச்சோந்தி:** ← ஆழ் கடல்களில் சுற்றுச் சூழல்களுக் கேற்ப தனது நிறத்தை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் மீன் இனம் ஒன்றுள்ளது. இவை கடல் பச்சோந்திகள் என்று அழைக்கப்படுகின்றன.

## வாரம் ஒரு நாடு

### எரித்ரியா

தலைநகர் – அஸ்மேரா.
பரப்பு – 1,17,600 சதுர கிலோமீட்டர்.
மக்கள் தொகை – 34.8 இலட்சம்.
மொழி – திக்ரிங்கா, வட்டார மொழிகள்.
சமயம் – கிறிஸ்தவம், இஸ்லாம்.
எழுத்தறிவு – 50%
நாணயம் – பிர்.
தனி நபர் வருமானம் – 77 டொலர்.

**அமைவிடம்:**

கிழக்கே செங்கடல், தெற்கே எத்தியோப்பியா, மேற்கேயும் வடக்கேயும் சூடான் ஆகியநாடுகளை எல்லைகளாகக் கொண்டது.

**வரலாறு:**

எத்தியோப்பியாவின் மாகாணங்களில் ஒன்றாகவிருந்த எரித்ரியா 1993ம் ஆண்டு



மேமாதம் 24ம் திகதி எரித்ரியா என்னும் புதிய நாடாக உதயமானது. 1962ம் ஆண்டு எரித்ரியாவை எத்தியோப்பிய மன்னர் தனது நாட்டுடன் இணைத்தபோது பெரிய கலவரம் ஏற்பட்டது. இது சுமார் 30 வருடங்கள் வரை நீடித்தது.

**பொருளாதாரம்:**

விவசாயமே முக்கிய தொழில்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.09.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 261**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 259

**பரிசுக்குரியவர்:**
அப்துல் கபூர் நவ்ஷாத்,
அல்–ஹிஜ்ரா மகா வித்தியாலயம், முள்ளிப்பொத்தானை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| முருகதாஸ் ராஜேஸ்வரி, வெஸ்லி உயர்தர பாடசாலை, நற்பிட்டிமுனை-07. | பி. பாலவிஷ்ணு, பரிசுத்த திருத்துவ கல்லூரி, ஆவெலிய, நுவரெலிய. |
| நிஷாந்தினி ரட்ணம், இ/தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | ஏ.எல். அகமட் றஸ்மி, ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்., திருகோணமலை. |
| ஏ. மாஜித், அல் ஹாமியாம. வித், நேரியகுளம், வவுனியா. | ச. சுகைனா பானு, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்., திருகோணமலை. |
| ஜெ.கிஷோர் குமார், சென் ஜோன் பொஸ்கோஸ், ஹட்டன். | ஏன்சன் பர்னாந்து, புனித ஆசிர் வாதப்பர் கல்லூரி, கொழும்பு-13. |
| இராசநாயகம் விண்டு, மட்/ களுதாவளை ம.வி., களுதாவளை-01. | ஆ. சாந்தி, க/விபுலானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு. |

## உடலுறுப்புக்களின் இயக்கம்




**நா**ம் ஒரு நாளைக்கு சாப்பிடும் உணவை நன்றாக மென்று தின்றால் நமது வாயில் உள்ள உமிழ்நீர்ச் சுரப்பிகள் ஒரு லீட்டருக்கும் கூடுதலான உமிழ்நீரைச் சுரக்கும்.



ஒரு மனிதனின் இதயம் சராசரியாக வாழ்நாளில் 15 கோடி லீட்டர் இரத்தத்தை பம்ப் செய்கிறது.



ஒரு குண்டூசியின் முனை நமது கையில் அல்லது உடலின் எந்தப் பாகத்திலாவது பட்டால், அதை நரம்புகள் மூளைக்குத் தெரிவிக்க, உடனடியாக கையைத் தூக்கி விடுவோம். இப்படி நரம்புகள் மூலம் மூளைக்கு எடுத்துச் செல்லும் செய்தியின் வேகம் எவ்வளவு தெரியுமா? மணித்தியாலத்துக்கு 300 கிலோமீட்டர்.

## சிறிய புகையிரதப் பாதை

**உ**லகிலேயே மிகவும் சிறிய நாடு போப்பாண்டவர் வசிக்கும் வத்திக்கான். இந்நாட்டின் தலைநகரான வத்திக்கான் சிட்டியில்தான் உலகிலேயே மிகவும் சிறிய புகையிரதப் பாதை இருக்கிறது.

இப்புகையிரதப் பாதை இத்தாலி புகையிரதத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இதன் நீளம் எவ்வளவு தெரியுமா? வெறும் 27 மீட்டர்தான்.

## முட்டைக் கோவா

**மு**ட்டைக்கோவாவை ஆங்கிலத்தில் கபேஜ் என்று அழைக்கின்றனர். மத்திய தரைக்கடல் நாடுகளில் இருந்து வந்தது தான் முட்டைக்கோவா. கோலி ஃபிளவர் என்பதும் முட்டைக்கோவா இனத்தைச் சேர்ந்த தாவரம்தான்.



இலைகளால் சுற்றி மூடிவைக்கப்பட்ட மொட்டுப் போன்று காணப்படும் முட்டைக் கோவாவின் பிறப்பிடம் ஐரோப்பா. இதை ஏனைய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தியது ஐரோப்பாதான்.

ஜெர்மனியில் முட்டைக்கோவா, கோலி ஃபிளவர் தவிர புரோகோஸா என்ற கோவா இனத்தைச் சேர்ந்த தாவரமும் உள்ளது.

## சமுராய் நண்டு

**ஜ**ப்பான் நாட்டை ஒட்டிய கடல் பகுதியில் 'ஹெய்கே' என்று ஒருவகை நண்டுகள் உள்ளன. இதன் மேற்புறமான



ஓட்டுப் பகுதி மனித முகம் போன்று இருக்கும்.


பண்டைய ஜப்பானில் சமுராய் வீரர்களில் ஹெய்கே, கென்ஜி என்று இரு பிரிவுகள் இருந்தன. 1185ம் ஆண்டு இந்த இரு பிரிவினருக்குமிடையே கடற்போர் நடைபெற்றது. இப்போரில் ஹெய்கே பிரிவினர் தோற்றுவிட்டனர்.

தோல்வியுற்ற ஹெய்கே வீரர்கள் நண்டுகளாக மாறிவிட்டனர் என்று ஜப்பானிய மீனவர்கள் நம்புகிறார்கள். ஹெய்கே வீரர்களின் முகம்தான் இந்த நண்டுகளின் ஓடுகளில் மனித முகம் போல் தெரிகிறது என்று அங்கு ஒருகதை சொல்லப்படுகிறது.

இதன் காரணமாகத்தான் இந்த நண்டுகள் ஹெய்கே நண்டுகள் என்று அழைக்கப்படுகின்றன.

## முகச்சவரச் செய்திகள்

★ **ம**த நம்பிக்கை காரணமாக முதன் முதலாக தாடி மற்றும் மீசையை முதன் முதலில் மழித்துக் கொண்டவர்கள் எகிப்தியர்கள்.



★ கிரேக்கர்களுக்கு முதன் முதலாக முகச்சவரம் செய்யும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர் மகா அலெக்ஸாண்டர். போரின்போது எதிரிகளிடம் சிக்கிக்கொள்ளாமல் இருக்க தாடியை மழிக்கச் சொல்லி அவர்தான் அறிவுறுத்தியிருந்தார்.

★ ரோமானியர்களுக்கு முகச்சவரம் பற்றிய பழக்கத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் ஸிபியோ அஃப்ரிகேனஸ் என்ற ரோமானியர்.

★ இதன் பின்னர்தான் ஆங்கிலேயர்களுக்கு முகச்சவரம் செய்யும் பழக்கம் அறிமுகம் செய்யப்பட்டது.

## ஹனி பட்ஜர்

**ஆ**பிரிக்க நாட்டில் காணப்படும் ஹனி பட்ஜர் என்ற இச்சிறிய விலங்கின் உணவு தேன் ஆகும். இது மரங்களின்



மீது ஏறி தேன் கூடுகளைப் பிய்த்து வீழ்த்தித் தேனை உறிஞ்சிக் குடிக்கும்.

தேன், பழம் போன்ற உணவுகளை உட்கொள்ளும் இந்த விலங்கு ஆமை, பாம்பு போன்ற பிராணிகளையும் தின்னும்.

இதன் தோல் மிகவும் வலிமையாக இருப்பதால் பாம்பு, புலி போன்ற விலங்குகளில் இருந்து இது தப்பிக்கொள்கிறது. வேறு விலங்குகளால் இதனை ஒன்றும் செய்ய முடியாததால் இதற்கு எதிரிகளே இல்லை என்று சொல்லலாம்.

இரண்டாம் பாகம்
அங்கம் 02

# ஒரு குற்றம்



**எழுத்துலக வேந்தன் சுஜாதா**

"எல்லாரும் பெர்மனெட்டா ஒரு சிரிப்பு வெச்சிருக்காளுக! எப்படி இருக்கா பாருங்க! அழிச்சுப் போட்டா ரெண்டு ரேணுகா பண்ணலாம் போல இருக்கா!"

"மிஸ்டர் கணேஷ்?"

"கணேஷ்!"

"ஸாரி திஸ் இஸ்?" என்று டிக்கெட்டைப் பார்த்தாள்.

"வசந்த்."

அவள் முன் சின்ன டெலிவிஷன் திரை இணைக்கப்பட்ட டைப் இயந்திரங்கள் போல் ஒரு சாதனம் இருந்தது. அதில் அவள் விரல்கள் விளையாட டெலிவிஷன் திரையில் அவர்கள் இருவரின் பெயர்களும் தோன்ற அருகே ஒரு சின்ன சதுரம் பளிச் பளிச் என்றது.

அவள் ஒரு டிராயரைத் திறந்து... "உங்களுக்கு ஒரு மெஸேஜ் இருக்கிறது" என்று ஒரு கவரை அவர்களிடம் கொடுத்தாள். "கேட் நம்பர் ஒன்பது. இன்னும் அரை மணியில் உங்கள் ம்யூனிக் விமானம் புறப்பட்டுவிடும் வேகமாகச் செல்லுங்கள்!" என்றாள்.

நடக்கையில் அந்த உறையைப் பிரித்தான். 'ஹெர் கணேஷ் நல்வரவு. நீங்கள் தங்குவதற்கு ப்ரஸிடண்ட் ஹோட்டலில் ஏற்பாடாகியிருக்கிறது. அங்கே பார்க்கலாம்' என்று எழுதி அடியில் கையெழுத்து புரியவில்லை.

"யார்ரா அது?"

"பொலிசா?" என்றான் வசந்த்.

"இல்லை அவுங்களா? போனாத்தான் தெரியும்!"

"இப்ப மணி என்ன?"

"தெரியலை. அதிகாலைன்னு நினைக்கிறேன். மேற்கே போகப் போக டைம் குறையுமில்லை!"

"இப்ப தூங்கறதா, முழிச்சுண்டிருக்கறதா? ஒண்ணும் புரியலை..."

முதல் தடவையாக ஃப்ராங்ஃபோர்ட் விமான நிலையத்துக்கு வெளியே பார்க்க முடிந்தது. ஒன்பதாம் நம்பர் கேட்டில் நுழைவதற்கு முன் அவர்களை தீவிரமாக சோதனை செய்தார்கள். ஹைஜாக் பயம்.

அந்தச் சிறிய ஹாலில் அந்த கலாராதனா பெண்களும் அந்த மை எழுதிய ஆண்பிள்ளையும் வாத்தியக்காரர்களும் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள்.

"ஹலோ!" என்றான் ரேணுகாவைப் பார்த்து.

"மறுபடியும் சந்திக்கிறோம்."

"நீங்களும் ம்யூனிக் வருகிறீர்களா?"

"ஆம் சொன்னேனே!"

"ஹலோ லாவண்யா?"

"ஹலோ சேகர்!"

"சேகர் இல்லை வசந்த்!"

நுழைவாயிலில் பிளாஸ்டிக் உறைகளில் ரொட்டித் துண்டும் கேக்கும் இருந்தன. பிரயாணிகள் விமானத்துக்குச் செல்லும் போது ஆளுக்கொன்றாகப் பொறுக்கிக் கொண்டு சென்றார்கள்.

லூஃப்தான்ஸாவின் சின்ன விமானத்தில் அவர்கள் ஏறுமுன் முதல் தடவையாக குளிர் அவர்களைத் தாக்கியது. அதுவரை வெளியே என்ன நடக்கிறது, என்ன சீதோஷ்ணம் என்கிற பிரக்ஞையே இல்லாமல் இருந்துவிட்டு, இப்போது வினோத தேசத்தின் புதிய குளிர் அவர்களை எலும்பில் தொட்டது.

"இந்தக் குளிர்ல ஒண்ணுமே செய்ய முடியாது போலிருக்கே?"

கணேஷ் வசந்த்தை முறைத்தான்.

அந்த சிறிய விமானத்தின் சூட்டுக்குள் மறுபடி உட்கார, கணேஷ் அந்தக் கடிதத்தைப் பார்த்தான். கீழே கையெழுத்திட்டிருக்கிறது! பொலிஸாகத்தான் இருக்க வேண்டும். ராஜேந்திரன் செய்தி சொல்லிவிட்டார். கணேஷுக்குத் தெம்பு பிறந்தது. தனியில்லை நாம். நமக்குப் பின்னே ஒரு பெரிய சக்தியின் பாதுகாவல் இருக்கப்போகிறது. எதற்குப் பயப்பட வேண்டும், மேல் நாட்டுக்கே உரித்தான திறமையுடன் வந்த உடனே செய்தி காத்திருக்கிறது. எங்கோ சென்னையில் வாங்கின டிக்கெட் நம்பரையும் பெயரையும் மேற்கு ஜெர்மனியில் இருக்கும் கம்பியூட்டர் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறது. இங்கே குற்றங்கள் பெரிசாக இருக்கும். குற்றங்களை முறியடிக்கிற முறைகளும் பெரிதானவை. பார்க்கலாம். வரப்போகும் தினங்களில் வசீகரமான ஒரு பயம் இருப்பதை கணேஷ் தன் நரம்புகளில் உணர்ந்தான்.

ம்யூனிக்!

மேற்கு ஜெர்மனியின் பெருமை நகரம். பவேரிய ஆல்ப்ஸ் மலையடிவாரத்தில் அமைந்த தொழிலும், கலையும், அழகும், சுத்தமும் அபரிமிதமான நகரம்.

விமான நிலையத்தின் வாசலில் டாக்ஸி பிடித்தார்கள்.

"ஹோட்டல் ப்ரஸிடெண்ட்!" என்றான் கணேஷ்.



அது பிரபலமான ஹோட்டலாகத்தான் இருக்க வேண்டும். டாக்ஸிக்காரன் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் கதவைத் திறந்து உள்ளே காட்டினான். அந்த பி.எம். டபிள்யூ. வண்டி புறப்பட்டு சில செகண்டுகளில் எழுபது மைல் வேகம் பிடித்தது.

"யோவ், மொள்ள ஓட்டுய்யாங்கறதுக்கு ஜெர்மன்ல என்னன்னு கத்து வெச்சுக்கணும்... பறக்கறானே!"

"பொதுவா இதெல்லாம் சாதாரண வேகம் இந்த ஊர்ல."

விஷ் விஷ் விஷ் என்று கார்கள் அவர்களைக் கடந்தன. சாலையில் வெண்ணெய் அகலமான மகாராஜ பாட்டை. வலதுபக்க டிராஃபிக்கே அவர்களுக்குத் தலைசுற்றியது.

கட்டடங்களில் யு.எச். எஃப். டெலிவிஷனின் ஏரியல்கள். கண்ணாடிக் குப்பின் ஜெர்மனியின் அத்தனை சௌகரியங்களும் 'வாங்கு வாங்கு' என்று கொட்டிக் கிடந்தன. சாலையில் கார்களைத்தவிர வேறு நடமாட்டமே இல்லை. தாழ்வான ஸ்ட்ரேட்டஸ் மேகங்களின் ஊடே சோகையான சூரியன். ஆகாயத்தில் தொங்கும் போக்குவரத்து விளக்குகள் எங்கேயோ ஒரு கம்பியூட்டரின் ஆணையின்படி பச்சையில் தொடர்ந்து அவர்களைச் செலுத்திக் கொண்டிருக்க டாக்ஸிக்குள் தொடர்ந்து பாப் சங்கீதம் வெடிக்க கணேஷ் வெளியே பார்த்தான். அங்கங்கே பசுமைக்கும் இடம்விட்டு நடப்பட்ட நெட்டைக் கட்டடக் கண்ணாடிகளில் அந்தக் கார்களின் பிம்பங்கள் நெளிந்து நெளிய 'மஹரிஷி கம்ட்' என்ற சில போஸ்டர்களைப் பார்த்தான். மகேஷ் யோகி அங்கேயும் சிரித்துக் கொண்டிருந்தார். தூரத்தில் ஒலிம்பிக் டவர் தெரிந்தது. பேயரிஷ் சே... என்று ஏதோ படிப்பதற்குள் இரண்டு பர்லாங் கடந்து விட்டார்கள். திறந்த ரெயில் வண்டிகளில் அடுக்கடுக்காகக் கார்கள். சாலையின் மத்தியில் டிராம் வண்டிகள் அத்தனை நாகரிகத்தின் மத்தியில் ஒரே ஒரு இடிந்த சர்ச். உலக யுத்தத்தின் ஞாபகமாக அப்படியே வைத்திருக்கிறார்கள்.

ஹொட்டல் பிரஸிடெண்ட்டின் வாசலில் குண்டாக ஒருத்தன் அலம்பிக் கொண்டிருந்தான். கன்னங்களில் இரண்டு ஆப்பிள் தெரிந்தது. உள்ளே சென்றார்கள்.

"குடென் மார்கன்" என்றாள் அந்தப் பெண்.

"எல்லோரும் பன்னி மாமிசத்தைத் தின்னு ஏராளமா வளர்ந்திருக்காளுக" என்றான் வசந்த்.

"என் பெயர் கணேஷ். எனக்கு இங்கே இடம் ரிசர்வ் ஆகியிருக்கிறது," என்றான் ஆங்கிலத்தில். "அய்ன் மினிட் பிட்டே" என்றாள்.

"என்ன சொல்றா?"

அவள் புறாக் கூடுகளில் தேடினாள். ஒரு டெலிபிரிண்டர் இருந்தது. ஆப்பிள் உள்ளே வந்து, அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் ஒரு சாவியை எடுத்து அவனிடம் ஏதோ பேசினாள். அவன் இவர்கள் பெட்டிகளைக் கேள்வி கேட்காமல் ஒரே கையில் கவர்ந்து கொண்டு லிப்ட் பக்கம் சென்றான்.

"ரூம் நம்பர் நோய்ன் ஆறட்" என்று மறுபடியும் சிரித்தாள் அவள். ஒரு பல் தூக்கலாக இருந்தது.

வசந்த் அவளிடம் சென்று, "ஐம் இன்டியன். யூ ஜெர்மன். வி ஆர் ஃப்ரண்ட்ஸ்" என்றான்.

அவள் தலையசைத்து "ஐ யாம் யூகோஸ்லாவியன்!" என்றாள்.

"ஐ இண்டியன். யூ யூகோஸ்லாவியன் வி ஃப்ரெண்ட்ஸ்" என்றான்.

"ஆஸ்ஸோ!" என்று நிறையச் சிரித்துக் கண்ணடித்தாள்.

"கண்ணடிக்கிறா பாஸ்! கூப்பிட்டா வந்துருவா போல இருக்கு!"

"கன்னத்தில் அடிப்பா. தாங்குவாயா?"

ஒன்பதாம் மாடியில் எட்டாவது ரூமில் ஆப்பிள் அவர்கள் பெட்டியை வைத்துவிட்டுக் காத்திருந்தான்.

"இவனுக்கு ஏதாவது குடுக்கணுமா பாஸ்?" என்று பர்ஸை எடுத்தான். "தாராசிங் மாதிரி இருக்கான்."

அவன் தலையாட்டிவிட்டு மையமாகச் சிரித்துவிட்டு எதுவும் வாங்காமல் கிளம்பி விட்டான்.

அறைக்குள் இரண்டு கட்டில்கள் இருந்தன. வெப்பம் அளிக்க ஒரு ரேடியேட்டர் மாதிரி ஒன்று இருந்தது. ஒரு டெலிவிஷன் செட் இருந்தது. சிறிய சௌகரியமான அறை. கணேஷ் ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். ஒரு ஜெர்மனியரும் அவர் மகனும் தன் வீட்டின் ஜன்னல் கதவுகளைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள். சுத்தம் அவர்கள் இரத்தத்தில் இருக்க வேண்டும்.

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. திறந்தான். இரண்டு வெள்ளைக்காரர்கள்.

"மிஸ்டர் காணிஷ்?"

"கணேஷ்"

"ஸாரி! கணேஷ். சரிதானே? என் பெயர் ஸ்டைன் ஹாஃப்-ம்யூனிக் பொலிஸ். இவர் என் சகா, ஹோனிஷ். ஹோனிஷ்-கணேஷ்! நல்ல பொருத்தம். எப்படியிருந்தது பிரயாணம்..?"

"நன்றாக இருந்தது தாங்ஸ்"- இது வசந்த்!

"ஆஸ்ஸோ! குடென் மார்கன்."

வசந்த் மையமாகச் சிரித்து கை குலுக்கினான். "உட்காருங்கள்."

ஸ்டைன் ஹாஃப்புக்கு ஐம்பது வயதிருக்கலாம். காலேஜ் புரொபசர் போலிருந்தார். சதுரமான உடலமைப்பு. சிவப்பும் நீலமும் கலந்த உன்னதமான ஸூட். சொற்ப மயிரைத் தழைய வாரியிருந்தார். ஃப்ரேம் இல்லாத மன்னமாரா முக்குக் கண்ணாடி. கண்கள் நீலமாக இருந்தன. முகத்தில் சமீபத்திய க்ஷவரப் பச்சை.

ஹோனிஷ் இளைஞன். செம்பட்டைத் தலை. நீலமான கண்கள். நீலக்கண்களை நிறையச் சந்திக்கப் போகிறோம் என்று பட்டது கணேஷுக்கு. மெல்லிய உதடுகள். சற்று நீண்ட மூக்கு. துருதுருப்பான பார்வை. கட்டம் கட்டமான சட்டை போட்டுக் கொண்டு ஜீன்ஸ் அணிந்திருந்தான். அவர்களைப் பார்த்தால் பொலிஸ் ஆபீஸர்கள் மாதிரிச் சொல்ல முடியாது.

"ஸ்மோக்" என்று மால்பரோ சிகரெட் பாக்கெட் ஒன்றைக் காட்டிப் பற்ற வைத்துக் கொண்டான். லைட்டர் ஜெர்மனிய சாதுர்யத்துடன் ஒரே க்ளிக்கில் ஜோதி நீண்டது.

"சொல்லுங்கள். என்ன விஷயம்? நீங்கள் இந்திய பொலிஸா?" அவர் இங்கிலீஷில் கொஞ்சம் அமெரிக்க வாடை.

"இல்லை. நான் ஒரு லாயர். இவன் என் அஸிஸ்டெண்ட்."

"இண்டிய பொலிஸ் முலமாக இண்டர்போல் முலமாக செய்தி வந்ததே எங்களுக்கு?"

"இந்திய பொலிசுடன் தொடர்பு கொண்டோம். ஏறக்குறைய அவர்கள் சார்பில் வந்திருக்கிறோம் என்று சொல்லலாம்."

"சரி குற்றம் என்ன?"

"அதுதானே தெரியாது!"

"தெரியாதா?"

(தொடர்ந்து வரும்)

---

அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

05

ராஜையா

"...வகுப்புல பாடம் எழுதுற; வீட்ல எழுதுற; ஆபீசுக்குப் போய் பார்த்தா தெரியும்; அங்கேயும் எல்லோரும் எழுதறாங்க. இந்த எழுத்துக் கலையை உலகத்திலேயே முதன்முதலா கண்டுபிடிச்சது யார் தெரியுமா?"

"யார் மாமா?"

"நாமதான். ஐயாயிரம் வருஷத்துக்கு முன் நம்ம நாட்டுக்குப் பேர் மெசபடோமியா. இங்கிருந்து சுமெரியர்கள்தான் முதன்முதலா எழுத்துக் கலையை உலகத்துக்கு அறிமுகப்படுத்தினாங்க!"

இத்தகைய தகவல்களைக் கேட்டு, "அடேங்கப்பா" என்கிற மாதிரி கண்களை விரிப்பான் சதாம். தன் நாட்டுப் பெருமைகளை சின்னச் சின்னவார்த்தைகளில் கேட்க பிரமிப்பாக இருக்கும் அவனுக்கு...!

"நம்ம அரபு மண்ணில பெட்ரோல் இருக்கு. அதனாலதான் அரபு மண்ணுக்கு கிராக்கி. இந்த பெட்ரோலுக்கு என்னிக்கி மவுசு வந்துச்சு தெரியுமா?"

மாமா கேட்டார்.

உதட்டைப் பிதுக்கினான் சதாம்.

"அதுக்கு ஒரு கதை வச்சிருக்கேன். 'போர்க்கப்பல்' கதை சொல்லட்டுமா?"

"சொல்லுங்க, சொல்லுங்க...!"

உற்சாகமாக சதாம் கூவினான். மாமா 'போர்க்கப்பல்' கதையை ஆரம்பித்தார்.

"இந்த நூற்றாண்டோட தொடக்கத்துல..."

"அப்படின்னா...?"

"பத்தம்பது வருசத்துக்கு முந்தின்னு வச்சிக்கோயேன். அப்ப இங்கிலாந்து நாடுதான் உலகத்துலேயே பெரிய சூப்பர் ஸ்டார்...!"

"சூப்பர் ஸ்டாரா?"

"ஆமா! சண்டை போட்டு நிறையப் பேரை தோக்கடிக்கிற ஆளைத்தானே சூப்பர் ஸ்டார்னு சொல்றோம். அதுமாதிரி இங்கிலாந்தும் நிறைய நாடுகளோட சண்டை போட்டு, தோக்கடிச்சு, அந்த நாடுகளை அடிமையா வச்சிருந்துச்சு!"

"இங்கிலாந்துக்கு மட்டும் ஏது மாமா அவ்வளவு பலம்?"

"இங்கிலாந்தோட பலம், அதன் நவீன போர்க்கப்பல்கள்தானாம். இங்கிலாந்து போர்க்கப்பல்கள் ஒரு சண்டையில எறங்கினா ஜெயிக்காம திரும்பாதாம்!"

இதைக்கேட்டு சதாம் அந்தச் சண்டைக் காட்சியைக் கற்பனை செய்து பார்த்தான். அவனுக்கு போர்க்கப்பல் தெரியாது. ஆனால் காகிதக் கப்பல் தெரியும். அவன் ஆற்றுக்குப் போகும் போதெல்லாம் காகிதக் கப்பல் செய்து தண்ணீரில் மிதக்க விட்டிருக்கிறான். அப்போது அடுத்த சிறுவனின் காகிதக் கப்பலை இவன் கப்பல் மோதித் தள்ளிவிட்டால் "ஹைய்...யா...! என் கப்பல் ஜெயிச்சிருச்சு!" என்று கைதட்டி குதித்திருக்கிறான். அந்தக் காகிதக் கப்பலைவிட பல மடங்கு பெரிய இங்கிலாந்து போர்க்கப்பல், ஆற்றைவிட பெரிய கடலில் இன்னொரு நாட்டு போர்க்கப்பலுடன் மோதினால் எப்படி இருக்கும் என்று கற்பனையில் பார்த்தான் சதாம். 'த்ரில்'லாக இருந்தது.

"இப்படி இங்கிலாந்துக்கே பெரிய பலமா இருந்த போர்க்கப்பல்களுக்கு ஒரு பிரச்சனை வந்துச்சு. அந்தக் கப்பல்களுக்கு வேணும்கிற அளவு சாப்பாடு கிடைக்கல. அதான் பிரச்சனை."

"கப்பல் சாப்பிடுமா மாமா?"

"ஆமா! நாம சாப்பிடுறதாலதான் ஓட முடியுது. ஆட முடியுது. நடக்க முடியுது. அதுமாதிரி கப்பலுக்கும் சாப்பிட்டாத்தான் கடல்ல ஓட முடியும். சண்டைபோட முடியும். ஆனா, ஒரு வித்தியாசம்- நமக்கு ரொட்டி சாப்பாடு. கப்பலுக்கு நிலக்கரி சாப்பாடு அப்ப!

பிரச்சனை என்னன்னா, இங்கிலாந்து கப்பல்களுக்குப்போதுமான அளவு சாப்பாடு- நிலக்கரி கிடைக்கல. நிலக்கரி அபூர்வமா கிடைக்கிற பொருள். அதனால அது எக்கச்சக்கமான விலை. அப்படியே எவ்வளவு பணம் போட்டாலும், போதுமான அளவு நிலக்கரி கிடைக்கல. இதனால் இங்கிலாந்து போர்க் கப்பல்கள் பட்டினி கிடக்கும் ஆபத்து வந்திருச்சு. போர்க்கப்பல்களோட பலம் போயிட்டா, நம்ம கதி என்னாகும்னு 'சூப்பர் ஸ்டார்' இங்கிலாந்துக்கு ஒரே பயம். இந்தப் பிரச்சனைக்கு முடிவு கட்ட என்ன செய்யலாம்னு பெரிய பெரிய ஆட்களெல்லாம் உட்கார்ந்து ஆராய்ச்சி பண்ணினாங்க. கடைசியிலே, போர்க்கப்பல்களுக்கு நிலக்கரிக்குப் பதிலா தாராளமாகவும், குறைஞ்ச விலையிலயும் கிடைக்கிற பெட்ரோலை சாப்பாடா குடுக்கலாம்னு முடிவு செஞ்சாங்க. 1911-ம் வருஷம் முதல் முதலா இங்கிலாந்து போர்க்கப்பல்கள் பெட்ரோல் சாப்பிட்டு ஓட ஆரம்பிச்சது. போர்க்கப்பல்களுக்கு பெட்ரோல் என்னிக்கி பயன்பட ஆரம்பிச்சதோ அன்னியிலிருந்துதான் நம்ம அரபு மண்ணுக்கும், அரபு பெட்ரோலுக்கும் மவுசு ஏற ஆரம்பிச்சுதாம்..."



கதையைக் கண் கொட்டாமல் ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான் சதாம். அரபு நாடுகளில் கிடைக்கும் பெட்ரோலுக்கு நல்ல கிராக்கி என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால், அந்த பெட்ரோலுக்கு உலக அளவில் எப்போது மவுசு வந்தது என்று மாமா சொன்னபிறகுதான் சதாமுக்குத் தெரியும். புதிய தகவல் ஒன்றைத் தெரிந்து கொண்ட மகிழ்ச்சி அவன் முகத்தில்.

அந்த மகிழ்ச்சியை மாமா சொன்ன அடுத்த கதை குலைத்துவிட்டது. இந்தக் கதைக்கு மாமா கொடுத்த தலைப்பு- "அடிமைச் சங்கிலி!"

"அடிமைச் சங்கிலி" கதையைச் சொல்ல ஆரம்பித்தார் மாமா....

"பெட்ரோலுக்கு மவுசு ஏறுச்சா? அவ்வளவுதான். வளைகுடாவை ஒட்டியிருக்கிற நம்ம அரபு மண்ணுக்கு வந்துச்சு ஆபத்து!"

சதாம் திடுக்கிட்டான், "ஆபத்தா? எப்பிடி மாமா?..."

"சொல்றேன்...! பெட்ரோல் தேவைப்படுற நாடுகளும், பெட்ரோலை வச்சு லாபகரமா பிசினஸ் பண்ணலாம்னு கணக்குப்போட்ட பணக்கார நாடுகளும் பெட்ரோல் சத்து அதிகம் இருக்கிற நம்ம அரபு மண்ணைப் பிடிக்க வேட்டை நாய் மாதிரி 'நான் முந்தி, நீ முந்தி'னு போட்டி போட்டன. அந்தச் சமயத்துல அரபு பிரதேசத்தை ஒட்டோமான் ராஜா ஆட்சி செஞ்சுக்கிட்டிருந்தார்."

"ஒட்டோமான் ராஜாவும் அரேபியரா, மாமா?"

"ஆமா, ஆனா அவர் ஈராக்கியர் இல்ல. துருக்கியர். அவரோட தலைநகர் இஸ்தான்புல். இந்த நகரத்தோட பழைய பெயர் கான்ஸ்டாண்டிநோபிள். ஒட்டோமான் சாம்ராஜ்ஜியம் ரொம்பப் பெரிசு. அது கிழக்கே சவூதி அரேபியாவோட ஒரு பகுதியிலிருந்து மேற்கே துருக்கிவரை பரவியிருந்துச்சு. ஈராக், ஜோர்டான், சிரியா, லெபனான், குவைத் எல்லாம் அதுக்குள் அடக்கம்.

"1914ல் முதல் உலகப் போர் வெடிச்சது. உடனே இங்கிலாந்தும், ஃபிரான்சும் கூட்டா படையெடுத்து வந்து ஒட்டோமான் ராஜாவை விரட்டியடிச்சிட்டு மொத்தப் பிரதேசத்தையும் பிடிச்சுக்கிடுச்சு."

(தொடர்ந்து வரும்)

# முள் நிலவு

## நிலவு 11

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள 'விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

"அப்பா..! ஒரு மத்திய மந்திரியோட பையன் மாப்பிள்ளையா வர்ற யோகத்தை வேண்டாம்னு சொல்லிட்டு- அதுக்காகத் தன்னைப் பெத்தவங்களையும் உதறித் தள்ளிட்டு என்முகம் எப்படியிருக்கும்னு தெரியாமலேயே கழுத்தை நீட்டத் தயாராயிருக்கும் நிலாதான் நம்ம வீட்டுக்கு மருமகள். இப்ப நம்ம வீட்ல இருக்கிறது மிஸ் நிலா இல்லை. மிஸஸ் நிலா கிருஷ்ணகாந்த். மிஸஸ் நிலா கிருஷ்ணகாந்தை வெளியே போகச் சொல்ல உங்களுக்கோ அம்மாவுக்கோ உரிமையில்லை..."

வெங்கடேஷ்வரன் வாய்விட்டுச் சிரித்தார்.

"ஓ! நீயும் இவ்வளவு தீவிரமாயிருக்கியா...?"

பக்கத்தில் நின்றிருந்த செளந்தரம் குறுக்கிட்டுக் கேட்டாள். "என்னங்க சொல்றான் பையன்...?"

வெங்கடேஷ்வரன் தன் இடது கை விரல்களால் ரிஸீவரைப் பொத்திக் கொண்டு மனைவியிடம் கண் சிமிட்டி சொன்னார்:

"இப்போ நிலா, 'மிஸ்' கிடையாதாம். அவளை வீட்டை விட்டுப் போகச் சொல்ல உனக்கோ, எனக்கோ உரிமையில்லையாம்..."

கேட்டுக் கொண்டிருந்த நிலாவுக்கு கண்களில் நீர் கட்டிக்கொண்டது.

"மாமா...! அந்த ரிஸீவரை என் கையில் தர்றீங்களா...?"

அவர் நீட்ட நிலா வாங்கி காதில் வைத்தாள்.

சொன்னாள்.

"தேங்க்ஸ்..."

"யாரு...?" மறுமுனையில் கிருஷ்ணகாந்த் கேட்டான்.

"மிஸஸ். நிலா கிருஷ்ணகாந்த்..."

"நான் ரொம்பவும் உரிமை எடுத்துக்கிட்டேனா...?"

"நோ...நோ... உங்க உரிமையை நீங்க சரியான நேரத்துல பயன்படுத்திக்கிட்டீங்க.. தட்ஸ் ஆல்..."

"நிலா!"

"ம்..."

"எனக்கு ரொம்ப ஆச்சர்யமாயிருக்கு..."

"எதுக்காக ஆச்சரியம்..?"

"என்னோட முகம் எப்படியிருக்கும்னு உனக்குத் தெரியாது! இருந்தாலும் எப்படி இவ்வளவு அட்டாச்மெண்ட்? மந்திரி வீட்டு சம்பந்தத்தையும் உதறித்தள்ளிட்டு பெத்தவங்களையும் புறக்கணிச்சுட்டு வர ஒரு சாதாரண பெண்ணினால முடியாது..."

"எனக்கு சொன்ன வார்த்தை தான் முக்கியம். 'ஏ வேர்ட் ஷுட் பி ஏ வேர்ட்.' எனக்கு நீங்கதான்னு முடிவான பின்னாடி இன்னொருத்தருக்கு அங்கே இடமில்லை... என்னோட அம்மாவுக்கு இதெல்லாம் புரியாது. எப்படிச் சொன்னாலும் அவங்க காதுல போட்டுக்க மாட்டாங்க. ஸோ... எங்கப்பாவோட மறைமுக ஆசீர்வாதத்தோடு உங்க வீட்டுக்கு வந்துட்டேன்... இனிமே நீங்க வர்றவரைக்கும் உங்க வீட்லதான் இருக்கப்போறேன். எனி அப்ஜெக்ஷன்?"

"நோ... அப்ஜெக்ஷன்...! இப்ப உனக்கு ஒரு குட் நியூஸ்..."

"என்ன...?"

"எனக்கு லீவு ஸாங்ஷன் ஆயிடுச்சு... எதிர்பார்த்த தேதிக்கு முன்னாடியிருந்தே லீவு கொடுத்துட்டாங்க. நான் அடுத்த வாரம் இந்நேரம் உனக்கு பக்கத்துல இருப்பேன்..."

"ரியலி...?"

"நான் மெட்ராஸ் வந்து சேர்ந்த அடுத்த தினமே உனக்கும் எனக்கும் ஒரு கோயில்ல கல்யாணம். சாயந்தரம் ரிசப்ஷன்...! எங்கப்பா கிட்ட ரிஸீவரைக் குடு நிலா. நான் அவர்கிட்ட கல்யாண ஏற்பாடுகளைப் பத்தி பேசிடறேன்."

"இதோ..."

நிலா ரிஸீவரை வெங்கடேஷ்வரனின் கையில் கொடுத்துவிட்டு, மனசில் குதிக்கிற சந்தோஷத்தோடு சமையல் கட்டை நோக்கிப் போனாள்.

●●●

மறுநாள் மாலை ஐந்து மணி.

வேர்க்கடலையை உரித்து வாயில் போட்டுக்கொண்டே டி.வி.யில் டிஸ்கவரி சானலைப் பார்த்தபடி இருந்த சிவராஜனின் தோள்மேல்-கோபமாய் கை விழுந்தது.

நிமிர்ந்தார்.

பாக்யம். கண்களில் கனல்.

"என்ன?" சொத்தை வேர்க்கடலை ஒன்றை டஸ்ட்பின்னுக்குள் எறிந்துகொண்டே கேட்டார்.

"பெண்ணை அந்த வீட்ல விட்டுட்டு இப்படி கவலையில்லாமே டி.வி. பார்த்துட்டு உட்கார்ந்திருக்கீங்களே... இது நியாயமா?"

"நியாயமில்லைதான்..! என்ன பண்ணச் சொல்றே?"

"நீங்களாவது போய் சொல்லி கூட்டிட்டு வரலாமில்லையா?"

"அவ வர மாட்டாளே...! உனக்கு இருக்கும் பிடிவாதம்தான் அவளுக்கும் இருக்கும்..."

"நீங்க போய் அவளைக் கூட்டிட்டு வரலைன்னா நான் வேற ஒரு நடவடிக்கையில் இறங்க வேண்டியிருக்கும்..."

"வேற ஒரு நடவடிக்கையா?"

"ஆமா..."

"அதென்ன அப்படியொரு நடவடிக்கை...?"

"நான் பொலிஸுக்கு போலாம்னு இருக்கேன்."

சிவராஜன் திகைத்தார்.

"இது நம்ம வீட்டு விவகாரம்! அதுல பொலிஸுக்கு என்ன வேலை? பொலிஸே போய்க் கூப்பிட்டாலும் நிலா வரப்போறதில்லை. இந்தப் பிரச்சனையை ஸ்மூத்தா ஹேண்டில் பண்றதுதான் சரியான வழி..."

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே-

"டிரிங்"

வாசலில் காலிங் பெல் கூப்பிட்டது.

பாக்யம் போய்த் திறந்தாள்.

பின்வாங்கிய கதவுக்கு வெளியே-

நிலா நின்றிருந்தாள்.

....

நிலாவைப் பார்வையில்-வாங்கியதும் சட்டென்று ஒரு மலர்ச்சிக்குப் போனாள். கணவரிடம் திரும்பி பரவசமாய்க் கத்தினாள்.

"என்னங்க... நம்ம நிலாவே வந்துட்டா...! வா... நிலா உள்ளே வா... எனக்குத் தெரியும்... உன்னால அந்த வீட்ல இருக்க முடியாதுன்னு எனக்கு நல்லாவே தெரியும்..."

நிலா மெளனமாய் வீட்டுக்குள் நுழைய சிவராஜன் அவளை வியப்பாய்ப் பார்த்தார்.

"என்னம்மா வந்துட்டே..?"

"உங்களையும் அம்மாவையும் இன்வைட் பண்ணிட்டு போலாம்னு வந்தேன்.."

"இன்வைட் பண்ணிட்டு போலாம்னு வந்தியா! எதுக்கு...?"

"இதோ இதுக்குத்தான்..." சொன்னவள் தன் கையிலிருந்த வானிடி பேக்கைப்பிரித்து ஒரு அழைப்பிதழை எடுத்து நீட்டினாள்.

பாக்யம் கோபமாய் இரண்டடி முன்னே வந்து நிலாவின் கையிலிருந்த அழைப்பிதழைப் பறித்தபடி கேட்டாள்.

"என்னடி இது...?"

"என்னோட கல்யாண அழைப்பிதழ். வர்ற வெள்ளிக்கிழமை காலை ஆறு மணியில் இருந்து ஏழு மணிக்குள்ளே ரத்தின விநாயகர் கோயில்ல வெச்சு எனக்கும் கிருஷ்ணகாந்துக்கும் கல்யாணம். கல்யாண நாள் பக்கத்துல வந்துட்டதாலே அழைப்பு நெருங்கின சொந்தக்காரங்களுக்கு மட்டும்தான். என்னோட மாமாவும் அத்தையும் அவங்க சம்பந்தப்பட்ட உறவுக்காரங்களை கூப்பிடப் போயிருக்காங்க. நான் எனக்கு இருக்கிற ஒரே சொந்தமான உங்களைக் கூப்பிட வந்திருக்கேன்..."

"என்ன திமிர்டி... உனக்கு..?" கையை ஓங்கிக் கொண்டு பாய்ந்த பாக்யத்தை ஒரு உஷ்ணமான பார்வையோடு கையமர்த்தினாள் நிலா.

"இங்கே நான் குழாயடி சண்டை போடறதுக்காக வரலை. என்னோட குடும்ப வாழ்க்கைக்கான ஆரம்ப நாள் எதுன்னு சொல்லிட்டு போக வந்தேன். அப்பா இந்தக் கல்யாணத்துக்கு கண்டிப்பா வருவார்னு நினைக்கிறேன். நீயும் வந்தா எனக்கு சந்தோஷம்... ஆனா உனக்கு வர மனமிருக்காது. காரணம் பணம்ங்கிற இரும்புத்திரைக்குப் பின்னாடி நீ நின்னுட்டிருக்கே...! அந்தத் திரை விலகும்போது உனக்கு மத்தவங்க மனசு தெரியும்."

பாக்யத்தின் கோபம் இப்போது கணவரின் மேல் திரும்பியது.

"என்னங்க... அவ பாட்டுக்கு பத்திரிகையைக் கொண்டாந்து கையில கொடுத்து கல்யாணம்ங்கிறா..! ஏதாவது பேசினா வாய்க்கு பதில் தர்றா.. நீங்க யார் வீட்டு விவகாரத்தையோ பார்த்துட்டு பேசாம இருக்கிற மாதிரி இருந்தா என்ன அர்த்தம்...?"

சிவராஜன் பக்கத்தில் போய் நின்று நிலாவின் தோளை மெல்லத் தொட்டார்.

"என்னம்மா.. இதெல்லாம்...?"

"அப்பா... அவர் ஸ்டேட்ஸிலிருந்து புதன்கிழமை வர்றார். அவர் எதிர்பார்த்ததுக்கு முன்னாடியே லீவு ஸாங்க்ஷன் ஆயிருக்காம். நம்ம வீட்டுப் பிரச்சனையைப் பற்றியும் அவர்கிட்ட ஃபோன்ல சொன்னேன். அவர் உடனே நீ மிஸ். நிலாவா இருந்தாத்தான் ஊர்ல இருக்கிறவங்க ஒரு மாதிரிப் பேசுவாங்க... அந்தப் பேச்சை நிறுத்தனும்னா நீ மிஸஸ் நிலாவா மாறணும். புதன்கிழமை நான் ஸ்டேட்ஸிலிருந்து வர்றேன். வெள்ளிக்கிழமை கல்யாணம். பத்துப் பதினைஞ்சு நாள் ஊர்ல இருந்துட்டு ரெண்டு பேருமே ஸ்டேட்ஸ் போயிடலாம்னு சொன்னார்."

"அப்ப சரிதான்...! நீ பத்திரிகையைக் குடுத்துட்டு போயிட்டே இரும்மா...! வர்ற வெள்ளிக்கிழமை தானே கல்யாணம். நானும் உன்னோட அம்மாவும் வந்துடறோம். முகூர்த்தம் காலையில ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குத்தானே....?"

"ஆமாப்பா..."

"கரெக்டா வந்துடறோம்...! நீ போய் கல்யாணத்துக்கு வேண்டிய மத்த விஷயங்களை எல்லாம் கவனிம்மா..."

"ரொம்ப தேங்க்ஸ்ப்பா..! வர்றேன்..."

"இரும்மா...! காப்பி சாப்பிட்டு போலாம்"

"வேண்டாப்பா...! ஆட்டோ வெயிட்டிங்ல இருக்கு. இன்னும் எனக்கு வேண்டிய முக்கியமான சில பேரைக் கூப்பிடணும்."

"எதிர்வீட்டு ரைட்டர் ஆர்.கே.வைக் கூப்பிட்டியோ...?"

"இதோ....! இப்ப அங்கதான் போயிட்டிருக்கேன்.."

நிலா வாசலை நோக்கிப்போக- பாக்கியம் ரெளத்திரமாகி வெறிக்கூச்சல் போட்டாள்.

"என்னங்க! அவளைக் கண்டிக்கிற லட்சணம் இதுதானா?"

"ஏதோ எனக்குத் தெரிஞ்ச அளவு கண்டிச்சுட்டேன்... யார் என்ன கண்டிச்சாலும் அந்த கல்யாணம் நிக்கவா போகுது..? நடக்கப்போறது நம்ம பொண்ணு கல்யாணம். போயிட்டு வந்துடலாம்..."

பாக்யம் ஆங்காரமாய்க் கத்தினாள்.

"அந்த ஓடு காலியோட கல்யாணத்துக்கு நான் வரமாட்டேன். உங்களையும் போக விடமாட்டேன்..." கைக்குக் கிடைத்த ஃப்ளவர் வாஷ் ஒன்றைத் தூக்கி சுவர் மூலையை நோக்கி எறிந்து விட்டு-பெரிதாய் அழ ஆரம்பித்தாள் பாக்யம்.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)



**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

# கவியரசுவின் சுயசரிதை 13

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

"கண்ணதாசன்!"

"டால்மியாபுரத்தில் அடிபட்டவனா?"

"ஆமாம்! நான் தான் குரூப் லீடர்."

"உன்னைக் கைது செய்திருக்கிறேன்!"

அவர் சொன்னாரோ இல்லையோ இரண்டு பொலிஸ்காரர்கள் அவன் அருகில் வந்து நின்றார்கள்.

சட்டையில்லா அந்தத் திறந்த திருமேனி முதன் முதலாக பொலிஸ் காவலுக்கு ஆளானது.

வேலூர் சதாசிவம், அரியலூர் வடிவேலு, தாத்தையங்கார்பேட்டை தஸ்தகீர் உட்பட பலரும் கைது செய்யப் பட்டார்கள்.

அந்த ஆஸ்பத்திரியிலேயே புதிய கட்டடமொன்று கட்டப்பட்டிருந்தது.

திறப்பு விழாவுக்காக அது காத்துக் கொண்டிருந்தது.

மந்திரிகள் வந்து திறந்து வைக்க வேண்டிய அந்தக் கட்டடத்தை, அந்தக் கைதிகள் அன்று திறந்து வைத்தார்கள்.

ஆஸ்பத்திரியில் வேறு இடம் இல்லாததால் அந்தக் கட்டடத்தில் போட்டுப் பூட்டப் பட்டார்கள்.

ஆஸ்பத்திரியைச் சுற்றிலும் ஆயுதப் பொலிஸ் நிறுத்தப்பட்டது.

அன்று மட்டும் கைதிகளைப் பார்ப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை.

அன்று இரவும் அவன் எதுவும் உட்கொள்ளவில்லை.

கொடிய வெயிலில் கடுமையான தடியடிப் பிரயோகம் நடந்திருந்ததால், அவனுக்குத் தாகமே அதிகமாயிருந்தது.

அவனுக்காக வந்திருந்த உணவுப் பொட்டலம், பிரிக்கப்படாமலே கிடந்தது.

கிட்டத்தட்ட ஒரு செம்பு தண்ணீர் முழுவதையும் குடித்து விட்டு அவன் தரையில் சாய்ந்தான்.

அவனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட கம்பவுண்டர், அகலமானதும், கனமானதுமான பூத்துண்டு (டர்க்கிடவல்) ஒன்றை அவனுக்குக் கொடுத்தார்.

அது ஒரு மெத்தை போலவே இருந்தது.

அவன் உயரத்துக்கும் அது சரியாக இருந்தது.

அவன் கொண்டு வந்திருந்த வாடகைக் காரின் டிரைவர், பொலிஸ் கெடுபிடிக்குப் பயந்து பணம்கூடக் கேட்காமல் காரை, காரைக்குடிக்கே கொண்டுபோய் விட்டார்.

அவனுடைய சட்டையும் அதிலே போய்விட்டது.

அந்தப் பூத்துண்டை விரித்து அன்று இரவு அவன் பிரக்ஞை இல்லாமல் தூங்கினான்.


இரவு சுமார் பன்னிரண்டு மணி இருக்கும்.

பூட்டியிருந்த கதவு திறக்கப்பட்டது.

ஜில்லா சூப்பிரிண்டன்ட் விஸ்வநாதன் நாயர் இரண்டு ஜவான்களுடன் உள்ளே நுழைந்தார்.

அங்கிருந்த ஒவ்வொரு கைதியையும் ஊர் பேரைக் கேட்டுக் குறித்துக் கொண்டார்.

அவன் தூக்கம் கலைந்த போதிலும் தூங்குகிற பாவனையில் படுத்துக் கொண்டிருந்தான்.



அவன் முதுகில் கைத்தடியால் மெதுவாகத் தட்டினார் சூப்பிரிண்டன்ட்.

உடனே ஒரு குரல் ஆத்திரமாக் கேட்டது. "தலைவரைத் தொடாதே!" என்று.

"சாரி," என்று வருத்தம் தெரிவித்த சூப்பிரிண்டன்ட் "அவர் பெயரையும் ஊரையும் நீங்களே சொல்லுங்கள்!" என்று, அந்தக் குரல் கொடுத்தவரைக் கேட்டார்.

அந்தக் குரலுக்குரியவர்தான் அரியலூர் வடிவேலு!

அவனுடைய ஊர், பெயரை வடிவேலு சொன்னார்.

குறித்துக்கொண்ட சூப்பிரிண்டண்ட் கதவைப் பூட்டிக் கொண்டு போய்விட்டார்.

பொழுது புலர்ந்தது!

அவன் எழுந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

நாலடி தூரத்திற்கு ஒரு பொலிஸ் வீதம், நிறுத்தப்பட்டிருந்தனர்.

வெளியூர்களிலிருந்து கைதிகளைப் பார்க்க வந்தவர்களில் பலபேர் உள்ளே வரமுடியாமல் தெருவிலேயே அலைந்து கொண்டிருந்தனர்.

அந்த ஆஸ்பத்திரிக் கட்டடத்தின் ஜன்னலுக்குப் பின் பக்கத்தில் கடைத்தெருவின் ஒரு பகுதி இருந்தது.

ஜன்னலுக்கும் கடைகளுக்கும் இடையே சுமார் நாற்பது அடி தூரம்தானிருக்கும்.

ஒரு கடையில் பத்திரிகைகளின் வால்போஸ்டர்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

அவன் கூர்ந்து கவனித்தான்.

ஒவ்வொரு வால்போஸ்டரிலும் "கண்ணதாசன் மரணப் படுக்கையில்!" என்றிருந்தது.

"தூத்துக்குடியில் துப்பாக்கிப் பிரயோகம்" என்று இன்னொரு தலைப்பும் இருந்தது.

பத்திரிகை பார்க்க அவன் துடித்தான்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

ஒரு செம்பு நிறைய காப்பியோடும் குவளைகளோடும் கம்பவுண்டர் வந்தார்.

தனக்குச் சில பத்திரிகைகள் வாங்கித் தருமாறு அவன் அவரிடம் கேட்டான்.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் பத்திரிகைகள் வந்தன.

அவன் இறந்து போய்விட்டதாகவே சில பத்திரிகைகள் கேள்விக்குறியோடு செய்திகள் போட்டிருந்தன.

(சரிதம் தொடரும்)

# மாற்றங்கள்



நெடுந்தீவு குகன்

**மா**லை நேரக்கதிரவன் கொஞ்சம் கொஞ்சமாய் மேற்கு நோக்கி மறையத் தொடங்க இருட்டு நட்சத்திரக்கூட்டங்களுடன் கூட்டணி சேர்ந்துகொண்டு பூமியில் ஆட்சி அமைத்துக்கொண்டது.

செல்லம்மா பரபரத்துக்கொண்டிருந்தாள். 'நாலு மணிப் ஃபிளைற்றில வாறன் எண்டவன் மணி ஆறாகப்போகுது. இன்னும் பிள்ளையக்காணயில்ல. வழியில ஏதாவது பிரச்சனையோ? இல்லாட்டி இந்த மனுசன், அவனத் தவற விட்டிட்டு எங்கயாவது தடவிக்கொண்டு நிக்குதோ தெரியாது...' செல்லம்மா வீதியைப் பார்ப்பதும் வீட்டுக்குள் வருவதுமாகத் தவித்துக் கொண்டிருந்தாள். தன் மகனை இனி எப்ப பார்க்கப்போறன், எண்டிருந்தவளுக்கு ஜீவா இப்ப இன்னும் கொஞ்ச நேரத்தில வரப்போறான். பத்து வருசத்துக்கு முன்னால காலத்தின் கட்டாயத்தால இந்த நாட்டை விட்டு கனடா போனவன் இன்று வருகிறான் என்ற சந்தோஷத்திலும் செல்லம்மாவுக்கு ஏதோ இனம் புரியாத சோகம்.

'பாவம் பிள்ளை; அவன்ர மனசில ஆசைய வளர்த்துப்போட்டு இப்ப எப்பிடி இந்த விசயத்தைச் சொல்லப்போறன்...?' பவானியின் நிலைமையை எப்படி மகனுக்குச் சொல்வது என்ற கவலை செல்லம்மாவுக்கு. அந்தக் கவலையிலும் 'பத்துவருசத்துக்கு முன் பார்த்த முகம் இப்ப எப்பிடி இருப்பானோ...?'

அவள் நினைவை தெருவிலே வந்து நின்ற ஆட்டோ சத்தம் கலைத்தது. ஆட்டோவிலிருந்து வேலுப்பிள்ளை மாஸ்ரரும், ஜீவாவும் இறங்குவது தெரிகிறது. கைகளில் இரண்டு சூட்கேசுடன் கம்பீரமாய் நடந்து வரும் மகனைப் பார்க்க செல்லம்மாவின் பெற்ற வயிறு குளிர்ந்து போனது. அன்போடு அவனை நெருங்குகையில் செல்லம்மாவின் கண்களில் கண்ணீர்.

மகனின் வருகைக்காக செல்லம்மா ஒரு விருந்தே செய்திருந்தாள். பல வருடங்களுக்குப் பின் அம்மாவின் கையால் அப்பாவுடன் ஒன்றாக இருந்து சாப்பிடுவது ஜீவாவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. தன் கனடா வாழ்க்கை, அக்கா, அத்தான், நாட்டு நிலமைகள், உறவினர்கள், அயலவர்கள் என்று கதைத்துக் கொண்டிருந்ததில் நேரம் 12 ஆகிவிட்டிருந்தது. ஆனால் அப்பாவோ, அம்மாவோ பவானி பற்றி ஒன்றும் கதைக்காதது ஜீவாவுக்கு வியப்பாகவே இருந்தது. தானாகக் கேட்கலாம் என்று நினைத்தவன் 'சீ.... வந்த... உடன எப்படிக் கேக்கிறது? அவையள் ஏதாவது நினைப்பினம்.. விடிஞ்சதும் கேப்பம்...' என்று தனக்குள் நினைத்துக்கொண்டான். ஆனால் மாஸ்டரோ பவானி பற்றி எப்படி மகனிடம் சொல்வது என்று தவித்துக்கொண்டிருந்தார். "சரி..மோனை... வந்த களைப்பா இருக்கும். நீ போய் படு மோனை; விடியக் கதைப்பம்!" என்று பேச்சை முடிக்கிறார் மாஸ்டர்.

ஜீவாவுக்கு தூக்கமே வரவில்லை. 'பல வருடங்களுக்கு முன் சொந்த மண்ணில் ஒன்றாகப் படித்து, ஓடி விளையாடியவள் பவானி. இப்ப என்ர வாழ்க்கைத் துணைவியாக வரப்போகிறாள். கனடா வாழ்க்கையில் கனடியக் குடியுரிமை, கைநிறையக் கிரடிட் காட், கார் என்று வசதிகள் இருந்தும் வேதனையான வாழ்க்கை. அந்த வேதனையான வாழ்க்கையிலும் ஒரு சந்தோஷம். என் இன்பத்திலும், துன்பத்திலும் என்னோடு துணை நிற்க ஒருத்தி வருகிறாள் என்பது தான். அவளுடன் தொலைபேசியில் கதைத்த அந்த நேரங்கள். அவள் புகைப்படம் பார்த்து அவள் நினைவுகளைச் சுமந்திருந்த அந்த நாட்கள்... இதையெல்லாம்விட சந்தோசம் காலையில் அவளைச் சந்திக்கப்போற சந்தோசம்.....சீ இந்த நேரமே போகமாட்டேன் எண்டுது...' ஜீவா தூக்கம் வராமலே படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான்.

**ந**ட்சத்திரக் கூட்டணிக்குள் பிளவை ஏற்படுத்திவிட்டு சூரியன் மீண்டும் ஆட்சியைப் பிடித்து விட பொழுது விடிந்துவிட்டிருந்தது. ஜீவா பரபரப்பாக-விழித்துக்கொண்டான். பவானியைப் பார்க்கப்போகிற சந்தோசம் அவனை இயந்திரமாக மாற்றியிருந்தது. "அப்பா...நான் ஒருக்கா பவானி வீட்ட போய்ட்டு வாறன்..." ஜீவாவின் குரல் கேட்டு கையில் அன்றைய தினசரியுடன் இருந்த மாஸ்டர் நிமிர்ந்தார். செல்லம்மா குசினிக்குள்ளிருந்து வெளியே வந்தாள். இருவர் முகத்திலும் கலவரம்.

"என்னப்பா... நான் கேக்கிறன் பேசாம இருக்கிறீங்க...?" ஜீவா புரியாமல் கேட்க,

"அது...மோனை...வந்து...! வந்து...!" செல்லம்மா வார்த்தைகளை விழுங்கிக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா... சொல்லுறீங்க...? எனக்கு ஒண்டுமே விளங்கயில்ல..."

ஜீவா அம்மாவை நோக்க,

"ஓம் தம்பி... அந்த இடம் எங்களுக்குச் சரி வராது. நாங்க வேற இடம் பாப்பம்...!" என்ற அப்பாவின் குரலில் ஜீவா அதிர்ச்சியடைந்தான்.

"என்னப்பா உங்களு,க்கென்ன விசரே...? நீங்களே பாத்து முடிவு செய்துபோட்டு... இப்ப இப்பிடிச் சொன்னா...ஏனப்பா ஏதாவது பிரச்சனையே...? ஏனம்மா பேசாம நிக்கிறீங்க...? என்னண்டு சொல்லுங்கோவன்..!" ஜீவாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"அது மோனை... போன கிழமை பவானிய ஆமிக்காறர் பிடிச்சுக்கொண்டு போய்ட்டாங்கள். இப்ப எங்க வச்சிருக்கிறாங்க, என்ன நடந்தது எண்டு ஒண்டுமே தெரியாது... நாங்கள் உனக்கு முதல்லயே சொல்லுவம் எண்டுதான் யோசிச்சனாங்கள்... நீ திடீரெண்டு வெளிக்கிட்டு வந்ததால சொல்ல முடியாமப்போச்சு...!" செல்லம்மாவின் குரல் ஜீவாவுக்கு முள்ளாய்க் குத்தியது.

"அதுதான் மோனை... நாங்கள் இப்ப அவையள் வீட்ட போக விரும்பயில்ல.... இனி ஆமிக்காறர் கொண்டுபோய் வச்சிருந்த இடத்தில என்ன நடந்ததோ யாருக்குத் தெரியும். நீ ஒரு மாசம் நிக்கப்போறாய்தானே? வேற ஒரு நல்ல இடமாய் பாப்பம்...." என்றபடி மாஸ்ரர் அவனை நெருங்க, ஜீவா சீறினான்:

"சீ... உங்கள என்ர அப்பா எண்டு சொல்லவே வெக்கமாயிருக்கு... எத்தினை பிள்ளையளுக்கு படிப்புச் சொல்லிக்குடுத்த நீங்களே இப்பிடியெண்டா... அம்மா ஒரு பெண்ணாப் பிறந்த நீங்களும்-பாவம் அந்தப் பிள்ளையப்பற்றி யோசிக்கவேயில்லை... இப்பிடி ஒரு இக்கட்டான நேரத்தில அந்தக் குடும்பத்துக்கு ஆறுதலா, உதவியா இருக்க வேண்டிய நீங்களே அவையளத் திரும்பிக் கூடப் பாக்கயில்ல..." பல வருடங்களுக்குப் பின் சந்தித்த பெற்றோரிடம் இப்படி பேசும்படியாகிவிட்டதே என்ற வேதனையிலும் ஜீவா கோபமாய்க் கத்தினான்.

"அதில்லை மோனை...' நாளைக்கு சனம் நாலு' கதை கதைக்கும் எண்டுதான்..." அவனைச் சமாதானப்படுத்த முயன்ற செல்லம்மாவை, "அம்மா இதுவே உங்கட மகள் சுதாவுக்கு நடந்திருந்து அத்தான் அக்காவ இப்பிடி விட்டிருந்தா உங்களுக்கு எப்பிடியிருக்கும் எண்டு யோசிச்சுப்பாருங்கோ... அப்பா நீங்க என்னைப் படிக்க வைச்சு கனடா அனுப்பினதால்தான் நான் இண்டைக்கு இப்பிடியிருக்கிறன். அத நான் ஒருக்காலும் மறக்க மாட்டன். ஆனால் உங்கட முடிவை நான் மீறுறதுக்காக என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ.... நான் இப்ப பவானி வீட்ட போறன். எப்பிடியும் பவானியக் கண்டுபிடிச்சு எழுத்த எழுதிப் போட்டுத்தான் கனடா போவன். உங்கட பிள்ளை செய்யிறது சரியெண்டு பட்டா, சந்தோஷம் இல்ல, நீங்க மாறினாலும் நான் உங்களத்தேடி வருவன், இல்லாட்டி உங்கட செலவுக்கு மாசாமாசம் என்ற காசு வரும்..."

ஜீவா ஒரு முடிவுக்கு வந்தவனாய், "அம்மா... என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ... நான் போய்ட்டு வாறன்...!" என்றபடி தன் சூட்கேசை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் செல்கின்றான். மாஸ்ரரும் செல்லம்மாவும் "தம்பி....மோனை...நில்லு... மோனை!" என்றபடி ஜீவாவின் பின்னாலேயே செல்கின்றனர். ■

# இன்று மட்டும்....!



வீரமுனை வானவர்கோன்

'**க**டவுளே இன்றைக்கு நல்லபடியாக தொழில் நடக்க வேணும். எந்தவித இடையூறுகளும் நடக்கக்கூடாது. இந்தத் தொழிலை நம்பித்தான் வீட்டில் நான்கு சீவன்கள் வாழுகின்றன,' என்று மனதுக்குள்ளே நினைத்தவாறு பஸ்தரிப்பிடத்துக்கு அருகேயுள்ள மதிலோரத்தில் பொலித்தீன் விரிப்பைப் போட்டு பையினுள் இருந்த அன்றாடப் பாவனைப் பொருட்களை எடுத்து பரப்பி வைத்தார் முனியாண்டி.

நேற்று செய்து முடிக்க வேண்டிய வேலைகள் பாக்கி இருந்ததால் அவற்றையெடுத்து சீராக்கி புதுமெருகூட்டத் தொடங்கினார்.

"பரம்பரை பரம்பரையாக இதுதானே எமது பரம்பரைத் தொழில். சுயதொழில் ஒன்றைக் கற்றுக்கொள் எனும் முதாதைகளின் பொன்மொழிக்கேற்ப நானும் இதனைக் கற்றுக் கொண்டதால் தானே நாளாந்தச் சீவியம் போகின்றது.

மூன்று பிள்ளைகளும் பெண்பிள்ளைகளாகப் பிறந்ததால் குலத் தொழிலைக் கற்றுக்கொடுப்பதற்கு ஆண் பிள்ளையொன்று இல்லாததால் மனைவியுடன் எத்தனை தரம் பிரச்சனை பட்டிருப்பேன்? இதனால் கவலை கவலையென்று கசிப்பு குடிக்கப்பழகியதால் இப்போது சும்மா இருக்கவும் முடியாமல் உள்ளது. காலையிலேயே கசிப்புக் குடித்தால் தான் கை கால் சுறுசுறுப்பாக இயங்குகின்றன, இந்தக் குடியால தானே ஒன்றரை மாதம் மகரகம ஆஸ்பத்திரியில் வருத்தமாகப் படுத்தனான். அந்தக் காலத்தில் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கோயிலெல்லாம் நேத்தி வைத்து, தெரிந்தவர்களிடம் எல்லாம் கடன் வாங்கி, என்னை மீண்டும் மனிதனாக்கி விட்டவள் மனைவி. அவளின் தலையில் எத்தனையோ தரம் குடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்திருக்கிறேன்.

படிக்கச் சொல்லி ஸ்கூலுக்குப் பிள்ளைகளை அனுப்பினால் இரண்டு நாட்களின் பின் இயலாதென்று அடம்பிடிக்கிறார்கள். அவர்கள் அடம்பிடிப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை, புத்தகம், கொப்பி, பேனா என்பனவற்றுடன் சீருடையும் அவசியம் தேவையாகும். அத்துடன் நேர காலத்துக்கு உணவு கொடுக்கப்பட வேண்டும். இவை எனது அன்றாட உழைப்பில் எப்படி சாத்தியமாகும்? ஒருவாறு கஷ்டப்பட்டு சீருடை, கொப்பி, பேனாக்களை வாங்கிக் கொடுக்கலாம். ஆனால் வேளாவேளைக்கு உணவைக் கொடுப்பதென்பது முடியாத காரியமாகவே உள்ளது.

இரவு சாப்பிட்டு மிஞ்சியது ஏதாவது இருந்தால் அதுதான் காலை உணவு. இல்லையெனில் மதியம்தான். அதுவும் அன்றைய தொழிலில் கிடைத்த வருமானத்தில் சிகரெட், தேத்தண்ணிச் செலவு போக மிகுதியை எடுத்து அரிசி, காய் கறி வாங்கி வீட்டுக்கு அனுப்பி வைப்பேன். அதில் கத்தரிக்காய்; பருப்பு என்பன தவறாமல் இருக்கும். இவற்றைக் கண்டதும் மனைவி முதலில் முகம் சுழிப்பது எனக்குப் பழகிப் போன விடயம்.

இந்த மூன்று குமர்ப்பிள்ளைகளையும் வளர்த்த பெருமை மனைவிக்குத்தான் சாரும், என்றாலும் இவர்களை யாருடைய கையில் என்றாலும் பிடித்துக்கொடுத்து விட்டால் தான் நிம்மதியாக நானும் மனைவியும் வாழலாம். கொஞ்சம் கொஞ்சமாகவென்றாலும் சேமித்து ஏதாவது நகை நட்டுகளை வாங்கி பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

அரசடிச் சந்தியில் நின்று பிச்சையெடுக்கும் மாடசாமி சீட்டுக்கு வரும்படி என்னை எத்தனையோ தரம் கூப்பிட்டு இருப்பான், பிச்சை எடுக்கும் அவனே சீட்டுப் பிடிக்கும் அளவிற்கு வந்துவிட்டான். இந்த விசயம் ஆட்களுக்குத் தெரிந்தால் அவனுக்குப் பிச்சையும் போடமாட்டார்கள். அவனது பிள்ளைகள் சந்தோசமாக நகைநட்டோடு எவ்வளவு இட்சணமாக இருக்கின்றார்கள். கசிப்புக் குடிக்கக் கொடுக்கும்காசை சீட்டுக்கு கொடுத்திருந்தால் இப்போது மூத்த பிள்ளையின் திருமணத்தை சந்தோசமாக நடத்தியிருக்கலாம்.

இனிமேல் குடிப்பதில்லை. சேமிக்கத்தான் வேண்டும். மாடசாமி இந்தப்பக்கம் வந்தால் சீட்டு இனிமேல் தொடங்கும்போது என்னையும் கூப்பிடுவென்று சொல்ல வேண்டும். மனைவியைத்தான் நன்றாக வைத்திருக்க முடியவில்லை. பிள்ளைகளையும் அப்படி வைத்திருக்க முடியாதே? பாவம் அவர்கள் வாழப் பிறந்தவர்கள். குடிகார முனியாண்டி எனும் பெயரை இன்றுடன் அகற்ற வேண்டும். இனிமேல் என்னை எவரும் தப்பாக நினைக்கக்கூடாது. இன்றைக்கு இந்த நூறு ரூபா சேமிப்பாக இருக்கட்டும். இப்படி ஒவ்வொரு நாளும் சேமித்தால் எனதருமையான குடும்பம் சந்தோசமாக வாழும்." முனியாண்டிக்குள் உறுதி கிளர்ந்தது.

மாலையாகி தெரு ஓய்ந்ததும் நடைபாதையில் இருக்கும் தனது செருப்புத் தைக்கும் கடையில் இருந்த உபகரணங்களை எடுத்து பையினுள் வைத்துவிட்டு பொலித்தீன் விரிப்பை மடித்துக் கொண்டிருக்கும்போது அத்திக்காக வந்த வெள்ளையன், "என்ன மச்சான், இப்பதானே வேலை முடியுது? இண்டைக்கு நல்ல உழைப்பு போல தெரியுது. வா றாக்கம்மாட வீட்டுப்பக்கம் போயிட்டு ஆளுக்கு ஒவ்வொரு 'ட்றாம்' அடிச்சிட்டு வருவம்." வாயூறியது முனியாண்டிக்கு. "நில்லு நானும் வாறன்!" என்றான்.

'இன்றைக்கு மட்டும்தான், இது கடைசித் தடவை. இனிமேல் சாராயத்தைத் தொடவே மாட்டேன்!' என மனதுக்குள் நினைத்தவாறு சாராயக் கிளாஸைப் பற்றி வாயருகே கொண்டு சென்றார் முனியாண்டி.

"'ஏய் இன்றைக்கு மட்டும்தான் என்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறாய்? நீ திருந்தவேமாட்டாயா? உன் வீட்டுக் கூரையைப் பார்த்தாயா? வானம் தெரிவது உனக்குத் தெரியவில்லையா? பகல் பெய்த மழையால் உன் வீட்டினுள் வெள்ளம் நிற்கின்றது. நீ குடி குடியென்று குடித்து உனது குடியையே அழித்து கொண்டிருக்கிறாய்!' என மனச்சாட்சி தடுத்து நிறுத்தியது. வாயை நெளித்துத் துடைத்தவாறு தள்ளாடியபடி முனியாண்டி வெளியேறினார்.

# உயிருக்கும் உயிராக......

**எ**னக்குள் தாங்கமுடியாத துயரம் ஒன்று உறைந்து போய்க்கிடக்கிறது. அதை யாருக்காவது சொல்ல வேண்டும் போலிருக்கிறது. முரசு படிக்கின்ற உங்களுக்கு அதைச் சொல்லலாம்.

இருபத்திநாலு வயது இளைஞனின் துயரம் என்றதும் நீங்களும் அனுதாபத்தோடு கேட்கக்கூடும். கேட்டுவிட்டு இந்த துயரம் ஆற ஏதும் வழியுண்டா என்று சொல்லுங்கள். உங்களுக்கு கார்த்திகாவை முதலில் அறிமுகப்படுத்தி விடுகிறேன். ஐந்தடி உயரம். மெலிந்த தோற்றம் பளீரென்ற நிறம். வட்ட முகத்தில் கருவண்டுகளாய் படபடவென்று அடித்துக்கொள்ளும் கண்கள் அவளுக்கு தனி அழகைத்தரும். தலைமயிர் காற்றில் அசைய சைக்கிள் ஓடிச்சென்ற கார்த்திகாவை நான் ஒரு வெள்ளிக்கிழமைதான் முதன் முதலில் பார்த்தேன். மல்லாவியின் பள்ளம் மேடு வீதியில் சைக்கிள் குலுங்கிக் கொண்டு போன அந்த வினாடி என் உள்ளமும் தடுமாறிப்போய்விட்டது.

முதன் முதலாய் என் மனதில் ஏதோ ஒன்று உடைந்து போய் விட்டது. வரிவரியாய் கவிதை வந்து மனதுக்குள் பதிந்து கொண்டது. மறுநாளும் அதே நேரம் மல்லாவி சந்தி கடந்து போனாள். அவளின் பின்னால் சிறிது இடைவெளி விட்டுபின் தொடர்ந்து அவள் பற்றிய விபரம் சேகரித்தேன். பெயர் கார்த்திகா. தனியார் கல்வி நிறுவனத்தில் உயர்தர கல்வி பெற்று வருகிறாள். வருகிற ஆவணி பரீட்சை எடுக்கப்போகிறாள். யாழ்ப்பாணம்தான் சொந்த இடம். அம்மா, அப்பா ஒரு தங்கையுடனும் வலிகாம இடம்பெயர்வில் கிளிநொச்சிவந்து சத்ஜய நடவடிக்கையில் மல்லாவி யோகபுரத்துக்கு வந்து வீடு போட்டு இருக்கிறார்கள்.

பலநாட்களின் பின்தான் நான் அவளைத் தொடர்வதை கவனித்திருக்கிறாள். நெருப்பாய் ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வையில் நான் வெலவெலத்துப் போனது என்னவோ உண்மைதான். என்னை அறிமுகப்படுத்தும் முதல் சந்திப்பு இப்படி சூடாய் அமைந்துவிட்டதே என்று பதறிப்போனேன்.

என்ன தவிப்பு அது... தொண்டைக்குள் முள்சிக்கியது போல... கனவு, நினைவு எல்லாம் அவளாகிப் போக... இப்படி ஒரு உணர்வை நான் இதுவரை அனுபவித்ததே இல்லை. சந்தோஷமும், துக்கமும் சரி விகிதமாய் கலந்த ஒரு கலவையான தகிப்பு அது.

சில நாள் விட்டு மறுபடி தொடர்ந்தேன். அவள் பார்வை படும் இடங்களில் மௌனமாய் நின்றேன். பாண்டியன் புடவைக் கடையில் அவள் துணி வாங்கிக்கொண்டு நின்றபோது மிக அருகில் நின்று நான் சேட்டு விலை விசாரித்தேன். அவள் முறைத்துப் பார்த்து விட்டு நகர்ந்தாள். அவள் முறைப்பு எனக்கு கவலையைத் தந்தது.

குளிரருவி குளிர்பான நிலையத்தில் தன் சினேகிதிகளுடன் அவள் ஐஸ்கிரீம் குடித்தபோது எதிர்மேசையில் நானும் அமர்ந்து ஐஸ்கிரீம் குடித்தேன்.

அவள் முகத்தை வெடுக்கென்று திருப்பி தன் சிநேகிதிகளிடம், "வேற வேலையில்லை இந்த குரங்குகளுக்கு...." என்று கிண்டலாகச் சொன்னபோதுகூட நான் கோபிக்கவில்லை. விலகவில்லை. பொறுமையாய் காத்திருந்தேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள். ஆறு மாதம் அவள் பின்னால் பைத்தியக்காரனாய் அலைந்தேன். ஆனாலும் அவளிடம் கடிதம் கொடுக்கவோ வலியப்போய்க் கதைக்கவோ நான் எந்த முயற்சியும் செய்யவில்லை.



வெண்ணிலா–சூரியகுமாரன்–வன்னி

அதனால்தான் அவளிடம் அந்த இரசாயன மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். இப்போது அவள் பார்வையில் கொஞ்சம் கனிவு இருந்தது. ஓர் எண்ணம் மனதில் பளீரிட சில நாட்கள் அவள் பார்வையில் படுவதைத் தவிர்த்தேன். மறைவாய் நின்று கவனித்ததில் அவள் மனம் எனக்குப் புரிந்தது. என்னைத் தேடி அவள் பார்வை அலைந்தது. ஒரு சின்ன சந்தோஷம் என் மனதில் கொப்பளித்தது.

தற்செயலாய் கடந்து செல்வதுபோல அவளைப் பார்க்காமலேயே சைக்கிளில் விலகிப்போனேன். அவள் முகத்தின் மாற்றத்தை துல்லியமாய் உணர்ந்து கொண்டேன்.

ஒருநாள் மாலை நிஜமாகவே தற்செயலாய் சிவன் கோவிலில் சந்தித்தோம். அன்று என் வாழ்க்கையில் புதிய திருப்பம் நேர்ந்தது. என் சந்தோஷம் ஆரம்பமான தினம் அது. புன்னகையில் தொடங்கி சில பேச்சுக்களில் தொடர்ந்து எங்கள் அன்பை உறுதிப்படுத்திக் கொண்டோம்.

எழுதுவினைஞர் பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருக்கும் எனக்கு அந்த வேலை கிடைக்க வேண்டும். அவள் பரீட்சை எடுக்க வேண்டும். அதுவரை எங்கள் காதலை அமைதியாக வளர்த்துக் கொள்வது என்று முடிவு செய்தோம்.

எத்தனை இனிய நாட்கள் அவை. பத்திரிகைகளுக்கு கவிதைகள் எழுதினேன். விசிலடித்துக்கொண்டே குளித்தேன். எல்லா சந்தோஷமும் மூன்று மாதங்கள் வரைதான். என் வாழ்வின் பொற்காலம் அந்த மூன்று மாதங்கள்தான்... நான் சாகும்வரை மறக்க முடியாத நாட்கள் அவைதான்.... அதன்பின் இந்தத் துயரச் சிலுவையை இன்றுவரை நான் நெஞ்சோடு சுமந்து கொண்டிருக்கிறேன்.

கார்த்திகா தன் உறவினரின் கல்யாண வீட்டுக்காக பெற்றோருடன் தர்மபுரம் போயிருந்தாள். அந்தச் சிறு பிரிவை தாங்க முடியாத எனக்கு காலம் எத்தனை பெரிய தண்டனையைத் தந்துவிட்டது. தர்மபுரத்திலிருந்து திரும்பும்போது வழியில் கிபிரின் குண்டுவீச்சில் கார்த்திகா.... என் கார்த்திகா பலியாகி விட்டாள். இந்த வார்த்தையைச் சொல்லவே என் நெஞ்சு நடுங்குகிறது. நான் துடித்தேன்...., கதறினேன். என் கண்ணீர் காயவே இல்லை; ஏன் இப்படி நேர்ந்தது? என்னால் தாங்கவே முடியவில்லை... கிபிரிலிருந்து குண்டு போட்டவர்கள் இந்நேரம் காதலியுடனோ மனைவியுடனோ கதைத்துச் சிரித்து சந்தோஷமாய் இருப்பார்கள். ஆனால் கார்த்திகாவை நேசித்த நானும் அவளது உறவுகளும் இங்கே என்ன பாடுபடுகின்றோம்... மனதுக்குள் இருக்கும் துயரத்தை மீறிக்கொண்டு ஆத்திரம்தான் வெடிக்கிறது.

எனக்கும் ஒரு வழி இருக்கிறது. அது உங்களுக்கும் விளங்கக்கூடும். எனை நினைத்து உங்கள் கண்களும் கலங்குமானால் அதை துடைத்துவிட்டு, அடுத்த பக்கம் புரட்டுங்கள்.

ஆளவந்த ஆங்கிலேயத்
தளபதிக்கு
ஆடவந்த மயில்மேல்
மையல்!

அவள் ஆடினாள்
அவன் ஆடிப்போனான்!

"வெள்ளைக் கொக்குகள்
எத்தனையோ பார்த்திருக்கிறேன்
இந்த கறுப்புக் கொக்குக்கு
எவளும் நிகரில்லை!"
என்றான் அருகிலிருந்தவனிடம்!

அருகிலிருந்தவன்
எட்டப்பன்!

வெள்ளைத் துரைகள்
சொந்தப் பெண்களை
கொள்ளையடிக்க
சொல்லித் தருபவன்!

அழகான பெண்களை
வெள்ளை எஜமானர்களுக்கு
அறிமுகம் செய்து
காரியம் பார்ப்பவன்!

சொந்தப் பெண்களை
துகிலுரிவதை
வெட்கமில்லாமல்
வேடிக்கை பார்ப்பவன்!

அவனிடம்தான்
ஆடல் அழகியின்
அழகைப் புகழ்ந்தான்
ஆங்கிலேயத் தளபதி!

"பூங்கனித் தோட்டம்
இவள் உங்கள்
பூங்கனித் தோட்டம்!"

காட்டிக் கொடுத்தான்
காரிகை அழகுகளை!
கூட்டிக் கொடுத்தேனும்
இலாபம்
ஈட்டிக்கொள்வதற்கு
தயங்காதவன்!

"குலுங்குது மாங்கனி
துள்ளுது தேன்கனி
கைக்கெட்டும் கனியினை
கொய்யுங்கள் பசிதீர!"

அழகியும் பாடி
மோகத் தீ ஊட்டினாள்!

ஆங்கிலேயத் தளபதிக்கு
அவள் பாடலை
மொழிபெயர்த்தான்
கெட்டப்பனான எட்டப்பன்!

துதிபாடும் தொழில்
புரிவதற்காகவே
அவர்களது மொழி
படித்தவன் அவன்!



# கௌரவமில்லாத கருவிகள்

வால் பிடிப்பதற்காகவே
அவர்களது
வரலாறும் படித்தவன்!

பல மொழிப் புலமை
கூடாதல்லவே- அவனோ
அந்தப் புலமையால்
சொந்த மண்ணின்
விழியை பெயர்த்து
குருடாக்கி கொண்டிருந்தான்!

"நாலும் அறிந்தவன்
நம்மொழி அறிந்தவன்
நாலு கால் இல்லாத
நன்றியுள்ள நாயிவன்"
என்று புகழ்ந்தார்கள்.

எஜமானர்களும்
எப்போதாவது ஒருதடவை
அடிமைகளை புகழ்வதுண்டு;
இன்னுமொரு யுகத்திற்கு-
அடிமைகளாய் வைத்திருக்க!!

"தொட்டால் சிவக்கும்
தொடாவிட்டால் தவிக்கும்
பட்டால் தகிக்கும்
படாவிட்டால் தவிக்கும்
பக்கம் வா! அணைக்க!

உடல் உருக வேள்வி
உயிர் உருக வேள்வி
பேரின்ப தீயில் சுகம்
காண்போம் இன்பம் வா!

நீமித்த மண்ணில்
முள்ளிருக்கும் பூவில்
கள்ளெடுக்க வா!

தேன்வடிக்கும் இதழ்கள்
நாடியுன்னை தவிக்கும்
நீ எழுந்து வா!

மான் பிடிக்கும்
உனக்கு
நான் வழங்கும்
விருந்து
கூன்விழுந்த பின்னும்
மறக்காது வா!"

இடை சிறுத்து
தனம் பெருத்த சிங்காரி
அவன் மனதை உடைத்து
உட்புகுந்தாள்!

"எட்டப்பா!
'கெட் அப்'பான
குட்டியப்பா!

'குட்' அப்பாவாகிவிட்டாய்
'மை' எட்டப்பா!
'செட்டப்பு' செய்வதிலும்
நீ கெட்டியப்பா!"
ஆங்கிலம் கலந்த தமிழில்
தளபதி புகழ்ந்தான்!

எட்டப்பன்
வில்லாய் வளைந்து
மனுக் கொடுத்தான்!

"காணி நிலம் வேண்டும்
பொன் பொருள் வேண்டும்
என்றும் உமது அருள்
எனக்கு வேண்டும் வேண்டும்!"

தளபதிக்கு இலக்கிய
பரிச்சயம் இருந்தது.

"மிஸ்டர் பாரதி
பராசக்தியிடம் கேட்டதை
நீ என்னிடம் கேட்கிறாய்!"

எட்டப்பன் குனிந்தான்
தலை தரை தொட்டது.
"பராசக்தி என்ன பராசக்தி
பாருக்குள் பெரிய சக்தி
நீங்கள்தானே!"
என்றான்.

தளபதி
சுங்கான் புகை வழிய
நகைத்தான்.

"பதவியும், பட்டமும்
பவிசும் கிடைத்தால்
கடவுளைக்கூட
கைவிட்டு விடுவீர்களடா?"
எங்களைக் கைவிட
எத்தனை நேரமாகும்?
என்றான் குத்தலாக!

## இலக்கிய நயம்

"மக்களை கைவிடலாம்
மானத்தை கைவிடலாம்,
அள்ளித் தரும் தங்களை
ஆங்கிலேயப் பேரரசை
கைவிட மனம் வருமா?"

"சீ நாயே! ஆகாத
செயல்கள் உனக்கெதற்கு?
பெற்ற தாயை விற்று
பெறும் பொன் எதற்கு?"

நடனமங்கையின் குரல்
பின்னால் இருந்து ஒலித்தது!
இருவரும் அதிர்ந்தனர்
குறும் துப்பாக்கி ஒன்று
அவள் கரம் இருந்தது.

எட்டப்பனை நோக்கி
குறும் துப்பாக்கி சீறியது.
குருதி வெள்ளத்தில்
கறையென சரிந்தான்!

தோட்டா காலியாகிவிட்டது
தளபதியைச்சுட
தோட்டா இல்லை!

தளபதி கூறினான்;
"நல்லது பெண்ணே
தப்பிப்போ!
உன் வீரத்தை
மெச்சினேன்!
உன் நாட்டுக்காக
விபசாரம் செய்யவும்
துணிந்ததை மதிக்கிறேன்!"

## துருவது ரசிகன்

அவளுக்கு ஆச்சரியம்;
"உன்னவன் ஒருவன்
செத்துமா
என்னை விடுகிறாய்?"

"என்னவன் என்று
சொல்லாதே!
காட்டிக் கொடுப்பவர்களை
நாங்கள் பயன்படுத்துவதுண்டு!
போராடுகிறவர்களை மட்டுமே
மரியாதை செய்வதுண்டு!

கருவிகள்
உபயோகத்துக்கானவை;
கௌரவத்துக்குரியவையல்ல!
அம்புகள் எய்வதற்கானவை;
பத்திரப்படுத்துவதற்கானவையல்ல!"
தளபதி நகைத்தான்!

அவள் விலகிப்போனாள்
தளபதி
எட்டப்பனை நோக்கினான்.
வேரற்ற மரமாக கிடந்தான்.

"ஆகாத செயல்களை
செய்து பயன்கண்டாலும்
அச் செயல்களே ஒருநாள்
துன்பமும் தரும்!"

"கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு
—அவைதாம்
முடிந்தாலும் பிழை தரும்!"
அதிகாரம்-66, குறள்: 658

**★ புளொட் வவுனியாவில் இருந்து யாழ் மக்களை வெளியேறுமாறு கூறியது தொடர்பான கேள்விக்கு, புலிகள் இவர்களை வெளியேறச் சொன்னது நியாயம் என்றாகிறது எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். புலிகள் யாழ் மக்களை வெளியேற்றியது தமது பாதுகாப்புக்காக அல்ல; அப்படி வெளியேற்றி இருக்காவிட்டால் பாரிய உயிரிழப்பு ஏற்பட்டு இருக்குமல்லவா?**

சி. யோகநாதன், ஆவரங்கால்.

*எனது பதிலில் 'இவர்களை' என்று குறிப்பிட்டது புளொட் இயக்கத்தினரை! புளொட் தமது பாதுகாப்பு கருதி மக்களை வெளியேறுமாறு கூறுவது நியாயம் எனில், தமது பாதுகாப்புக்காக புளொட்டை புலிகள் வெளியேற்றியது சரி என்று அர்த்தமாகிறது என்னும் கருத்தில் கூறப்பட்ட பதிலே அதுவாகும்!*

**★ பழிபாவங்களைச் செய்தவர்கள், ஊர் சொத்தை சுருட்டியவர்கள் எல்லாம் பக்தர்களாக இருக்கிறார்களே?**

எம்.எ.ஃப். ரிஸ்மியா, காத்தான்குடி.

*"நமக்கும் கடவுளுக்கும் இடையே எவ்வளவுதூரம் என்று அறிந்துகொள்ள விரும்புகிறாயா?" என்று தன் சிஷ்யனிடம் கேட்டார் துறவி.*

*"ஆமாம், ஆமாம்!" என்றான் சிஷ்யன்.*

*"என்னுடையது, என்னுடையது என்று நீ எதையெல்லாம் சொல்லுகிறாயோ, அதையெல்லாம் ஒன்றுவிடாமல் ஒரு பட்டியலிடு. என்னுடைய பேனா, என்னுடைய சட்டை என்னுடைய சொத்து, என்னுடைய படுக்கை என்று பட்டியல் போடு. பட்டியல் எவ்வளவு நீளம் வருகிறதோ, அந்தத் தூரம்தான் கடவுளுக்கும் நமக்கும் உள்ள இடைவெளி. பட்டியல் பெரிதாக இருந்தால் நீண்டதூரம். சின்னதாயிருந்தால் கொஞ்சத்தூரம். பட்டியலைச் சுருக்கச் சுருக்க இடைவெளி குறையும்!" என்றார் துறவி.*

**★ சமீபத்திய படங்களில் சிரிப்பு நிறைந்த படம் எது?**

எஸ். சிமியாரம்ஸி, வவுனியா.

*'கல்யாண கலாட்டா'.*
*'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்.'*

**★ நடிகை விசித்ரா என்ன ஆனார்? தமிழ்பட உலகம் அவரை மறக்கலாமா? நியாயமா?**

பூ. ராகவன், கொழும்பு-06.

*நியாயமில்லைத்தான்! விசித்ராவுக்கு வில்லிகள் இன்றைய கதாநாயகிகள்! அதுதான் அந்த நட்சத்திரம், நட்சத்திர கலை விழாக்களில் மின்னிக் கொண்டிருக்கிறது!*

**★ சிந்தியா! 'உயிரே' படம் இந்தியில் இருந்து தமிழுக்கு வந்ததுதானே?**

வி. நிவாஸ், மருதானை.

*ஆம்! ஆனால் கதை-வசனம் நம்ம சுஜாதா. கதை வசனத்தை நாவல் மாதிரியே எழுதிக்கொடுத்தாராம். உச்சக்காட்சியை நாவலில் எழுதியதை விபரிக்கிறார் பாருங்கள்:*

*"ரொம்ப கனமாக இருக்கிறதா ஒன்றிரண்டு குறைக்கவா?" என்று தேவ் அவளைக் கேட்டான்.*

*"இல்லை! நேற்று ரிகர்சலில் கல்வைத்து கணக்குப் பார்த்தோமே அதே எடைதானே?"*

*"குனியவேண்டும் அதுதான் முக்கியம். குனிந்தால்தான் முகத்தில் வெடிக்கும்! இரண்டு முறை அழுத்தினால்தான் வெடிக்கும்!"*

*"சரி இரண்டுமுறை!"*

*கரண் உள்ளே வந்து மேனகாவை ஆதங்கமாகப் பார்த்தான்.*

*"யு லுக் வெரி ப்யுட்டிஃபுல்!" என்றான்.*

*"உன்புற அழகுடன் சேர்ந்து நீ செய்யப் போகும் தியாகத்தின் அக அழகும் சேர்ந்து ஒரு தேவதை போல ஒளிர்கிறாய்.*

*மா ஓ சொன்னது என்ன?*

*நாட்டுக்காக உயிரிழப்பது தாய் மலையைப்போல, நாட்டின் எந்தப் பாகத்தில் இருந்து நோக்கினாலும் தெரியும்!"*

*மேனகாவின் கண்கள் கரித்தன.*

*"எல்லாம் ஞாபகம் இருக்கிறதா?"*

*"இருக்கிறது!"*

*இப்படித்தான் எழுதிக் கொடுத்தாராம் சுஜாதா. அதை எப்படி மணியாக எடுக்கிறார் மணிரத்னம் என்பதை வெள்ளித்திரையில் அல்லது சின்னத்திரையில் காண்க.*

**★ அமெரிக்க ஜனாதிபதியாக கிளின்ரன் தொடர்வது சரியா?**

க. ஞானேஸ்வரன், மட்டக்களப்பு.

*மிகப்பெரும் தவறு! நாட்டுமக்களுக்கு பொய் சொன்ன ஒருவர் ஜனாதிபதியாக இருப்பது அமெரிக்கர்களுக்கு அவமானம்!*

**★ இங்கிலாந்தில் சனத் அடித்த இரட்டைச் சதம்?**

எஸ். வனோஜா, ஹெந்தளை.

*அத்தோடு முரளியின் 16 விக்கெட்டுக்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.*

*கிரிக்கெட்டின் தாய் நாட்டையே வியப்பில் ஆழ்த்திவிட்டது!*


விசித்ரா

**★ செம்மணிப் புதைகுழி பற்றி ஏன் தமிழ்க் கட்சிகள் போராட்டம் நடத்தவில்லை?**

எம். சிகாமணி, யாழ்ப்பாணம்.

*"தோண்டாவிட்டால் நாமே தோண்டுவோம்" என்றனர். தோண்டத்தான் வேண்டாம்; இரவோடு இரவாக யாரும் தோண்டாமல் அப்பகுதியில் கண்காணிப்பு படையாவது அமைத்திருக்கலாம். உண்ணாவிரதம் கூட வேண்டாம்; அப்பகுதியில் கொட்டகை ஒன்றை அமைத்து ஒவ்வொரு கட்சியும் மாறிமாறி கண்காணிப்புப் பணியாவது செய்திருக்கலாம். அது சட்டவிரோதம்கூட இல்லையே!*

**★ மக்கள் போராட்டங்களை முன்னெடுக்க தமிழ்க் கட்சிகள் இங்கு தயங்குவது ஏன்?**

கே. எமிலியா, நாவற்குழி-யாழ்.

*முன்னெடுக்கமாட்டார்கள். மக்கள் தாமாகவே தமது தேவைகளுக்காக உண்ணாவிரதம், ஹர்த்தால், மறியல் என்று யாழில் போராட ஆரம்பித்துவிட்டனர். பின்னால் நின்று தள்ளிவிடுவது, ஆதரவு தெரிவித்து அறிக்கைவிடுவது, அல்லது போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கும், அரசுக்கும் இடையே தரகர்கள்போல செயற்பட்டு பெயர் தேடுவது என்பனதான் தமிழ்க் கட்சிகளின் இன்றைய ஸ்டைல்!*


'உயிரே' படத்தில் ஷாருக்கான்-மனிஷா கொய்ராலா

## சிந்தியா பதில்கள்

**★ வழிகாட்டிகள் எப்படி இருக்க வேண்டும்?**

மா. உதயகுமார், கொழும்பு-12.

*எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இந்தக் கதை:*

*ஒரு சீடன் இருந்தான். கையிலே நீளமான குச்சியை வைத்துக்கொண்டு வானத்தை நோக்கி இடிப்பது மாதிரி குத்திக் கொண்டிருந்தான். குரு அதைப் பார்த்தார்.*

*"என்னப்பா செய்கிறாய்?" என்று கேட்டார்.*

*"அந்த நட்சத்திரத்தையெல்லாம் இந்தக் குச்சியாலே கீழே தள்ளப்போகிறேன்." என்றான்.*

*குரு கோபமாகச் சொன்னார்: "சரியான முட்டாளாக இருக்கிறாயே. என்னுடைய சிஷ்யன் என்று உன்னைச் சொல்லவே வெட்கமாக இருக்கிறது. இங்கே நின்று கொண்டு குச்சியை நீட்டினால் நட்சத்திரம் எப்படி எட்டும்? முட்டாளே! போய் அந்தக் கூரைமேலே ஏறி நின்று இடி! அப்படியானால்தான் நட்சத்திரம் எட்டும்!" என்றாராம்.*

(ஸ்போர்ட்ஸ்)

# பிரட்மன் ஏன் கலந்துகொள்ளவில்லை?

உலகப்புகழ் பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் வீரர் சேர். டொனால்ட் ஜோர்ஜ் பிரட்மனின் 90வது பிறந்தநாள் விழா கடந்த ஆகஸ்ட் 27ம் திகதி அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் நடைபெற்றது. கடந்த 15 ஆண்டுகளாக தனிமையிலேயே வாழ்ந்து வரும் பிரட்மன் இந்த விழாவில் கலந்துகொள்ளவில்லை.

இவரது அன்பு மனைவி கடந்த வருடம் இறந்து போனதும் இவ்விழாவில் பிரட்மன் கலந்து கொள்ளாததற்கு இன்னுமொரு காரணம்.


பிரட்மன்-டெண்டுல்கர்

எனினும் இவரது பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ளச் சென்ற இந்திய அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கரை தனது இல்லத்தில் பிரட்மன் சந்தித்து ஒரு மணிநேரம் பேசினார். டெண்டுல்கருடன் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்னும் பிரட்மனைச் சந்தித்தார்.

அவுஸ்திரேலியாவின் தேசிய பொக்கிஷமாகக் கருதப்படும் பிரட்மன் 1928 முதல் 1948 வரை 52 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இவர்தான் 29 சதங்களை அடித்து, மொத்தம் 6996 ஓட்டங்களைக் குவித்துள்ளவர். இவர் சராசரியாகப் பெற்ற ஓட்டம் 99.94 ஆகும். இந்தச் சாதனையை இதுவரை எவரும் எட்டவில்லை. இனி மேலும் இது கடினமே. தான் விளையாடிய 20 வருடங்களில் அவுஸ்திரேலிய அணிக்கு 12 ஆண்டுகள் கேப்டனாக இருந்துள்ளார்.

பிரட்மனின் பிறந்த நாளை முன்னிட்டு அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவர்ட் கூறிய வாழ்த்துச் செய்தியில்,

"அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த மனிதர் பிரட்மன். இதில் விவாதத்திற்கே இடமில்லை. அவுஸ்திரேலியாவில் மட்டுமல்ல உலகிலேயே சிறந்த கிரிக்கெட் வீரர் பிரட்மன்தான்!" என்று புகழாரம் சூட்டினார்.

"கிரிக்கெட்டிலிருந்து விலகி 50 ஆண்டுகள் ஆன பின்பும் பிரட்மனின் பெயர் நினைவில் நிற்பதற்குக் காரணம் அவரது வலுவான சாதனைகளே!" என்றும் ஜோன் ஹோவர்ட் மேலும் தெரிவித்திருந்தார்.

# "என்மீது சேறு பூசுகிறார்கள்!"

பாகிஸ்தானின் முன்னாள் கேப்டன் வாசிம் அக்ரம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளில் வெறுப்புற்று, சர்வதேசக் கிரிக்கெட் விளையாட்டுக்களிலிருந்து ஒதுங்கி விடக் கருதுவதாகத் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் அணிக்கு மீண்டும் தலைமை தாங்கும்படி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் காலித் மஹ்மூத் விடுத்த வேண்டுகோளை அக்ரம் ஏற்க மறுத்துவிட்டார்.

பாகிஸ்தான் அணியின் கேப்டனாக 17 டெஸ்ட் போட்டிகளிலும் 72 ஒருநாள் போட்டிகளிலும் ஆடியிருக்கிறார். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் உலகிலேயே அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சாதனையாளர் அக்ரம்.

செப்டம்பர் 12ம் திகதி டொரண்டோவில் ஆரம்பமாகவிருக்கும் சஹாராக் கோப்பைப் போட்டிகளிலும் பாகிஸ்தான் அணிக்குத் தலைமை தாங்கும் பொறுப்பினை ஏற்கும்படி சபை அவரை இதுவரை கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. நடுவர்கள் முன் தோன்றி, அவர் மீதுள்ள குற்றச்சாட்டுக் களுக்குத் தக்க விளக்கமளிக்க வேண்டும் என்று மட்டும்தான் சபையால் கேட்கப்பட்டுள்ளாராம்.

"நான் கிரிக்கெட் அணிக்கு இனித் தேவைப் படாதவன் என்று சபை கருதுகிறது போலும்! என்மீது சேற்றை வாரி வீசுவதை நான் ஏற்க முடியாது!" என்று சகலதுறை ஆட்டக்காரரான வாசிம் அக்ரம் அண்மையில் ஒரு பேட்டியின்போது தெரிவித்தார்.

"ஒரு தரமான ஆட்டக்காரரரை வெறுமனே வதந்திகளை மட்டும் ஆதாரமாக வைத்துக் கொண்டு குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது நல்லதல்ல. பெட்டிங் குற்றச்சாட்டைத் தூக்கிப் பிடிப்பதை விடுத்து, சபை எம்போன்றாரை சரியானபடி வழி நடத்த வேண்டும். இது போன்ற சம்பவங்களால் நான் வெறுப்படைந்து விட்டேன். எஞ்சிய காலத்தை வீட்டில் போய்த் தூங்கிக் கழிக்கலாம் என்றுதான் கருதுகிறேன்!" என்று அக்ரம் கூறுகிறார்.

"அணியின் கேப்டனாக மீண்டும் செயற்படுமாறு கேட்டால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது, "சபையிடமிருந்து அத்தகைய தீர்வினை நான் விரும்பவில்லை. சாதாரணமான ஆட்டக்காரனாக விளையாடவே விரும்புகிறேன்!" என்றார்.

# திருமறை தரும் பொது நெறி 25

# மோசேயின் பயண முடிவு!

**இராஜசோமனி**

**ஆ**ண்டவர் மோசேக்குக் கொடுத்திருந்த கட்டளையின் பிரகாரம் நெடும் பயணம் தொடர்ந்தது. நாற்பதாண்டுகாலம் பயணம் செய்த இஸ்ரயேல் மக்கள் கானான் தேசத்தின் அருகேயுள்ள மோவாபுச் சமவெளியில் சில நாட்கள் முகாமிட்டிருந்தனர். இஸ்ரயேல் மக்கள் எகிப்தைவிட்டு வெளியேறியதிலிருந்து அன்றுவரை கடந்துவந்த இடங்களையும் நடைபெற்ற சம்பவங்களையும் என்றும் நினைவில் நிறுத்திக் கொள்ளத்தக்க வகையில் முழுக் குறிப்புக்களையும் தொகுத்தெழுதுமாறு ஆண்டவர் மோசேயிடம் கூறினார்.

மோசே முழு வரலாற்றையும் தொகுத்தெழுதினார். அத்துடன் இஸ்ரயேல் மக்களனைவரும் சகல சம்பவங்களையும் அறிந்து கொள்ளுமாறு உரையாற்றினார். அப்போதிருந்த மக்களில் பெரும்பாலானோர், நெடும் பயணத்தின்போது- பாலை நிலங்களில் பிறந்தவர்கள். எகிப்திலிருந்து தமது முதாதையர் பட்ட துயரங்களைப் பற்றியோ, கர்த்தர் அவ்வப்போது காட்டிய கருணை பற்றியோ அவர்களுக்கு எதுவும் தெரியாது. சகல நிகழ்வுகளையும் மோசே அனைவருக்கும் விளக்கமாகக் கூறினார். ஆண்ட



வர் இஸ்ரயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையினையும் தெளிவுபடுத்தினார்.

நாற்பதாண்டுகள் பலதரப்பட்ட குண இயல்புகளையுமுடைய இலட்சக்கணக்கான இஸ்ரயேல் மக்களை பலநூறு மைல்கள் வழி நடத்தியவர் மோசே. அவர்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதிலும் மோசே தனது பெரும்பொழுதைச் செலவிட்டார். இத்தகைய பெருஞ்சுமையைத் தன் தலைமேல் ஏற்றியமையினாலும் வயதாகிவிட்டமையினாலும் அவர் சோர்வடைந்து விட்டார். உள்ளம் உறுதியுடன்தான் இருந்தது. பார்வையும் மிகக் கூர்மையாகவே இருந்தது.

## வரலாற்றுக் குறிப்பு

மோசேக்கு அப்போது நூற்றிருபது வயதாகிவிட்டது. அத்துடன் மோசேக்குக் கொடுக்கப்பட்ட பணியும் நிறைவு பெறும் காலமும் அண்மித்துவிட்டது. ஆண்டவரும், "இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்துக்காக நாம் வாக்குத்தத்தம் பண்ணிய நாட்டுக்குள் உம்மால் பிரவேசிக்க முடியாது!" என்றும் கட்டளையிட்டுவிட்டார். இதே காலகட்டத்தில், மாபெரும் பயண வரலாற்றை- எதிர்காலத்தில்-இஸ்ரயேல் மக்கள் மட்டுமல்லாமல், இனிமேல் வரப்போகும் அவர்கள் வழிமரபினரும், எதிர்கால உலகுமே அறிந்து கொள்ளும் வகையில் எழுதி வைக்க வேண்டும் என்றும் ஆண்டவர் கேட்டுக் கொண்டார்.

**க**ர்த்தர் மோசேயிடம் யோசுவாவை அழைத்துக்கொண்டு சந்திப்புக்கூடாரத்துக்கு வருமாறு கேட்டுக்கொண்டார். யோசுவா நூன் என்பவரின் மகன்- நல்லொழுக்கமும், நேர்மையும், வலிமையும் கொண்ட இவரை கர்த்தரே மோசேயின் உதவியாளராகத் தேர்ந்தெடுத்திருந்தார்.

மோசேயும் யோசுவாவும் சந்திப்புக் கூடாரத்தின் முன் வாயிற்புறமாக வந்து சேர்ந்ததும் ஆண்டவர் மேகத் தூணில் வந்திறங்கினார்.

## ஆண்டவரின் உறுதி மொழி

"மோசே! உம்முடைய பொறுப்புகளனைத்தையும் யோசுவாவே ஏற்கிறார். அவரே ஜோர்தானைக் கடந்து இஸ்ரயேல் மக்களை கானான் தேசத்துக்கு அழைத்துச் செல்வார். யோசுவாவே முன் செல்வார். எதிர்ப்படும் அத்தனை தடைகளையும் களைந்தெறியும் வல்லமையை நான் யோசுவாவுக்கு ஊட்டுவேன். ஏற்கனவே வகுத்துக் கொடுத்துள்ள திட்டப்படி இஸ்ரயேல் மக்களின் குலங்களுக்குரிய இடங்களை யோசுவா பகிர்ந்தளிப்பார்.

இஸ்ரயேல் மக்களைப் பொறுத்தவரையில் ஆண்டவராகிய எம்மோடு செய்து கொண்ட உடன்படிக்கையினை அவ்வப்போது மீறவே செய்வார்கள். அதற்கான தண்டனைகளையும் நாம் அவர்களுக்குத் தருவோம்.

யோசுவாவுடன் நாம் எப்போதும் முன் சென்று துணைபுரிவோம். மக்களனைவரும் தங்களுக்கான வாழ்வினைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்!"

இவ்வாறு ஆண்டவர் கூறி முடிந்ததும் தம்முடைய கடமைகளை யோசுவாவிடம் முறைப்படி ஒப்படைத்தார் மோசே.

"யோசுவா! ஆண்டவரின் அருட்கடாட்சம் உம்மீது பரிபூரணமாகப் பொலிந்துள்ளது. இந்த மக்கள் சமுதாயத்தை செம்மையாக வழி நடத்தும் பொறுப்பினை உம்மிடம் ஆண்டவர் ஒப்படைத்துள்ளார்.

ஆண்டவரைப் பூரணமாக நம்பு. அவரருள் உம்மிடம் நிறைவாக இருப்பதனால் எதற்கும் அஞ்சவேண்டாம்! துணிவைத் துணையாக்கிக்கொள்! வலிமைபெறு!"

மோசே இவ்வாறு கூறி தனதிரு கைகளையும் மேலே உயர்த்தி கர்த்தரைத் துதித்த வண்ணம் யோசுவாவின் தலை மீது வைத்தார். இதனால் யோசுவா ஞானத்தின் ஆவியால் நிரப்பப் பெற்றார்.

## இறுதிப் பயணம்

இவ்வாறு பல புத்திமதிகளையும் சொன்ன பின்னர், மோசே, தான் எழுதிய பிரயாண விவரங்கள், ஆண்டவரால் அருளப்பட்ட திருச்சட்டங்கள், உடன்படிக்கைகள் ஆகியவற்றை அவற்றுக்கான பேழைகளிலிட்டு உடன்படிக்கைப் பேழையுடன் வைக்குமாறு லேவியரின் வழிவந்த குருக்களிடம் ஒப்படைத்தார். ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையையும் சந்திப்புக் கூடாரத்தையும் லேவியரின் வழிமரபினரே சுமந்து செல்லும் பொறுப்பினைப் பெற்றவர்கள்.

யோசுவாவிடம் மக்களை வழிநடத்தும் பொறுப்பினை ஆண்டவரின் சந்திப்புக் கூடாரத்தில் வைத்துக் கொடுத்தபின் மோசே, மோவாபுச் சமவெளிக்குச் சென்றார். அவருடைய இறுதிப் பயணம் அதுதான். அவர் வழிநடத்தி வந்த இஸ்ரயேல் மக்கள் சமுதாயம் திகைப்புடன் பார்த்துக்கொண்டே இருந்தபோது, ஓர் ஒளி வடிவமாக, சிறிது கூடப் பின் திரும்பிப் பார்க்காமலே அவர் சென்றார். எரிக்கோவுக்குக் கிழக்கே நேபா மலையிலுள்ள பிஸ்கா உச்சியைப் போயடைந்தார்.

அம்மலை உச்சியிலிருந்த வண்ணம் இறைவனால் இஸ்ரயேல் மக்களுக்காக வாக்குத் தத்தம் செய்யப்பட்ட நிலப்பரப்பினை நன்றாகப் பார்வையிட்டார்.

ஆண்டவர் தனது நம்பிக்கைக்குரிய மோசேயிடம்: "மோசே! உமது முதாதையரான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்குத் தருவதாக வாக்களித்த- பாலும் தேனும் பல்கிப் பெருகும் நாட்டை இங்கிருந்தபடியே நன்றாகப் பார். ஆனால் அந்த நாட்டிற்குள் உம்மால் காலடி எடுத்து வைக்கமுடியாது! உமது கடமைகள் இன்றுடன் முடிவு பெறுகிறது. உம்முடைய முன்னோர்களுடன் நீ சேர்ந்து கொள்கிறாய்!" என்று கூறியதும் ஆண்டவரை நன்றியுடன் வணங்கிய வண்ணம் பணிந்ததும் அவர் உயிர் பிரிந்தது.

மோவாபு நாட்டிலுள்ள பெத்பகோருக்கு எதிரேயிருந்த பள்ளத்தாக்கில் ஆண்டவரே மோசேயின் சடலத்தை அடக்கம் செய்தார். கர்த்தர் மோசேயுடன் கொண்டிருந்த மிகக் கச்சிதமான உறவினைப் போல் இஸ்ரயேல் மக்கள் எவரிடமும் உறவு கொண்டதில்லை என்றுதான் கூறவேண்டும்.

மோசே இனிமேல் உயிருடன் தங்களிடம் திரும்பிவரப் போவதில்லை என்பதை யோசுவா வாயிலாக இஸ்ரயேல் மக்கள் அறிந்து கொண்டனர். அனைவரும் அழுது புரண்டனர். முப்பது நாட்கள் துக்கம் அனுஷ்டித்தனர்.

(தொடர்ந்து வரும்)

## திருமறை வினா-விடை-18

திருமறை 18க்கான வினா-'எகிப்தியப் படைகளுக்கு என்ன நடந்தது?' என்பதாகும். இதற்குரிய சரியான விடை- 'செங்கடலில் மூழ்கி மாண்டனர்,.' என்பதாகும். ஆனால் 268வது முரசில் 'படைகள் நைல் நதியில் மூழ்கி மாண்டன' என்று தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. இருப்பினும் பதில் எழுதிப் பரிசு பெறும் ஐவரும் 'செங்கடலில் மூழ்கின' என்ற சரியான விடையையே எழுதினர்.

*தவறுக்கு வருந்துகிறோம்.*

## விடை எழுதுவோருக்கு:

விடைகளை எழுதி அனுப்பும் தபாலட்டைகளில் உங்களுடைய சரியான பெயர்-முகவரியை தெளிவாக தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். பரிசாக அனுப்பப்படும் புத்தகங்கள் உங்கள் கைக்கு வந்து சேரவேண்டும் என்பதை நிச்சயிக்க இது அவசியமாகிறது.

தபாலட்டையில் மட்டுமே பதில்களை அனுப்பிவையுங்கள்!

## திருமறை 23 விடை — 12 பேர்

**பரிசு பெறுவோர்:**

1. ஜெபநாயகம் ஜேம்ஸ் சர்வானந்தன், 437/1, கிராம நீதிமன்ற வீதி, ஏறாவூர்-05.
2. பி. மணிவதனி, அயிஸ்லேபி எஸ்டேட், பண்டாரவளை.
3. எஸ். எரோஷி மீலானி, 41, சுஜபா இடம், கொழும்பு-06.
4. ப. ஜோன்சன், 767 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
5. கி. உதயகுமார் கீர்த்திகாஸ், 34பீ, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

**திருமறை 25 வினா:-** மோசேக்குப் பதிலாக மக்களை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

செப்டெம்பர் 12க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 25—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | :தொல்லை தவிர்ப்புக்குழு |
| தொழில் | :கிடைக்கும் முறைப்பாடுகளை தொகுத்து பத்திரிகைகளுக்கு புளுகுவது. |
| உபதொழில் | :கைதாகும் திருடர்களுடனும்,பொறுக்கிகளுடனும், புலிச்சாயம் பூசி கைதாகும் தமிழர்களையும் ஒரே தராசில் எடைபோட்டுப்பேசி மகிழ்வது! |
| நண்பர்கள் | :முறையிட்டுவிட்டு பத்திரிகைகளுக்கு செய்திதரும் தமிழ்க் கட்சிகள். |
| எதிரிகள் | :ஆளும் கட்சிக்கு எதிரானவர்கள். |
| பொழுதுபோக்கு | :பத்திரிகைகளுக்கு செய்திதருவது. அடிக்கடி கூடி தேனீர் அருந்துவது. |
| சாதனை | :சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுக்கு 'அல்வா' கொடுத்துக் கொண்டிருப்பது. |

## தேவை! தேவை தேவை!



**வ**ன்முறை தவிர்ப்புக்குழு, பொய் தவிர்ப்புக் குழு, பொதி திறப்புக் குழு போன்ற பல குழுக்களை புதிதாக நியமிக்க உத்தேசித்துள்ளோம்.

இக் குழுக்களில் அமர்ந்து கொட்டாவிவிடவும், குப்பை கொட்டவும் தகுதியானவர்கள் தேவை.

பத்திரிகைகளுக்கு மட்டும் சுறு சுறுப்பாக செய்தி கொடுக்கத் தெரிந்தால்போதும். பின்னர் தூங்கலாம்.

எதிரணியைத் தவிர்ந்த எவருக்கும் இவற்றில் பங்குகொள்ள முழு அனுமதி உண்டு. அனுமதி இலவசம். இலவசத்திற்கும் ஜி.எஸ்.ரி. இருக்குமோ என்று கவலைப்படத் தேவையில்லை.

தனிக்கட்சிகளாக இருந்தாலும் அரசபணிக் கட்சிகளாக இருக்கும் தமிழ்க் கட்சிகளின் சிபாரிசுகளுக்கு முன்னுரிமை தரப்படும்.

ஊதியம் தரப்படமாட்டாது. குழுவின் பெயரைப் பாவித்து பத்திரிகைகளில் தம் பெயரை பிரபலம் செய்யவும், மக்களிடம் செல்வாக்குப் பெறவும் பூரண சுதந்திரம் தரப்படும்.

## கந்தசாமியும் முத்துத் தம்பியும்

கந்தசாமி: முத்துத்தம்பியர் சேதி கேட்டீரோ? யாழ் மாநகர முதல்வர் அம்மையாருடன் பேசி துயர் துடைக்க ஏற்பாடு பண்ணப் போறாராம். ஆள் விண்ணர் போல கிடக்கு!

மு.த: என்ன, கொழும்பில் இருந்து கைக்குட்டைகள் கலெக்ட் பண்ணிக்கொண்டு வரப்போகிறாராமோ?

க.சா: தீயசக்திகள் என்று திட்டுவாங்கப் போகிறீர் ஐசே.

மு.த: முன்னர் ஆண்டவர் சிறிமா அம்மையார்! அவரோடு பேசி துயர் துடைப்போம் என்று சொன்ன துரையப்பாவையும், அருளம்பலத்தையும் இன்ன பிறரையும் துரோகிகள் என்று காறி உமிழ்ந்த கட்சி, என்மீது துப்புமோ எச்சி?

க.சா: விபரம் தெரியாமல் பேசவேண்டாம் மச்சி. அது காலம் வேறு இது காலம் வேறு என்று செப்புகினம்.

மு.த: என்ரை விசரைக் கிளரவேண்டாம். செம்மணியடியில் ஒரு பரராஜசிங்கத்தை சுட்டதை வைத்து கூட்டணி மேடைகளில் என்ன முழக்கம் முழங்கினவை தெரியுமோ?

க.சா: மறந்து போனேன் ஐசே.

மு.த: இந்த மறதிக்குணமும், மந்தக் குணமும், சலுகைகளுக்கு மயங்கி இப்படியான கட்சிகள் பக்கம் தாவும் மந்திக்குணமும் தானே இவைக்கு வாய்ப்பாக இருக்குது.

க.சா: அதென்றால் உண்மைதான்! சொல்லும் ஐசே, செம்மணியில் பரராஜசிங்கத்தை சுட்டது யார்? துள்ளியது யார்?

மு.த: சுட்டது பொலிஸ்! "பரராஜசிங்கத்தை சுட்டுவிட்டீர்கள். இன்று உங்கள் கையில் உள்ள துப்பாக்கி நாளை எங்கள் கையில் இருக்கும் பொலிஸ் —களே!" இது யார் பேசின பேச்சுத் தெரியுமோ?

க.சா: முந்தி கூட்டணி மேடையில் யார் பேசினாலும் உப்பிடித்தானே பேசுறவை, பொது ஸ்ரைல்தானே. யார் என்று தனியாக கண்டுபிடிக்கிறது கஷ்டம் ஐசே!

மு.த: குறுமுனி என்று அண்ணர் அமுதரால் வர்ணிக்கப்பட்ட வண்ணை ஆனந்தன் அத்தியடியில் நடந்த ஜி.ஜி.பொன்னம்பலத்தின் நினைவுதினக் கூட்டத்தில் முழங்கியது.

க.சா: அன்றைக்கு ஒரு பரராஜசிங்கம் செம்மணியில் செத்தான். கண்துடைப்புக்காக என்றாலும் விசாரணை நடந்தது. இன்று பலநூறு பரராஜசிங்கங்கள் செம்மணியில்! விசாரணைகூட கிடையாது.



மு.த: தோண்டிப் பாருங்கோ என்றால் சட்டங்களை நோண்டிக் காட்டிக் கொண்டிருக்கினம்.

க.சா: அந்தக் காலத்தில் கவர்மெண்டுடன் பேச மாட்டோம் என்று கர்ஜித்தவை, இந்தக் காலத்தில் கவர்மெண்டுடன் பேசுவதை பத்திரிகைகளுக்கு சொல்லிச் சொல்லியே பிழைப்பு நடத்துகினம் எண்டு சொல்ல வாறியளோ?

மு.த: வாறது என்ன வாறது, அங்கதான் நிற்கிறன்!

க.சா: துவக்குத் தூக்குவம் எண்டு சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னவையை கோபிக்கிறீர், துவக்கையே தூக்கின ஆட்களுமல்லோ இப்போ காவடி தூக்கி நேர்த்திக்கடன் வைக்கினம். மேடம் ஒருதரம் சொன்னா நூறுதரம் சொன்னமாதிரி, நாங்கள் அவரிடம் பிரச்சனையை சொன்னால் அது கடவுளிடம் சொன்னமாதிரி என்றல்லோ சொல்லுகினம்.

மு.த: அப்படியென்றால் யாழில் காணாமல் போனோருக்காக ஆயிரம் ஆணைக்குழுவல்லோ போட்டிருக்க வேண்டும்.

க.சா: ஏன் ஆயிரம்?

மு.த: ஒரு தடவை சொன்னால் நூறுதடவை சொன்னமாதிரி என்றால், ஆணைக்குழு போடுவதாக பல தடவை சொன்னவரல்லோ அம்மையார், கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஆயிரம் ஆணைக்குழு போடப்பட்டிருக்க வேண்டுமல்லோ?

க.சா: என்னதான் சொல்லுகிறீர்?

மு.த: ஏமாற்றாதே, ஏமாற்றாதே! ஏமாறாதே! ஏமாறாதே!

**காதிலை பூ கந்தசாமி**

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி வெள்ளவத்தை கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு கொழும்பு

436331


# பறக்குது பார் இது ரயிலே!




பெட்ரோலோ வேறு எரிபொருளோ தேவைப்படாது. மின்சக்தியால் காந்தப் புலனை உருவாக்கி இவை செலுத்தப்படுகின்றன.

→ ஐரோப்பாவைச் சேர்ந்த ஃபிரான்ஸ், ஜேர்மன், இத்தாலிபோன்ற நாடுகளில் ரயில்களின் வேகம் தூள்கிளப்புகிறது. ஜப்பானில் மணிக்கு 210 கிலோ மீட்டர் வேகத்தில் விரையும் 'புல்லட் ரயில்' நகரங்களுக்கிடையில் சீறித்திரிகிறது. மேற்கு ஃபிரான்ஸில் மணிக்கு 300 கி.மீட்டர் வேகத்தில் ரயில்கள் ஓடுகின்றன.

இடைவிடாத ஆராய்ச்சியின் பயனாக மணிக்கு 480 கிலோ மீட்டர் வேகத்தில் பறந்து செல்லவல்ல 'மக்லெவ்' ரயில்கள்-ஜப்பானில் வந்துவிட்டன. இந்தப் புதுரக ரயில்கள் ஓடுவதற்கு இந்த ரயிலுக்கு இரண்டு தண்டவாளங்கள் தேவைப்படுவதில்லை. தவிர இந்த ரயிலுக்கு சக்கரங்களும் கிடையாது.

ஒரே ரயில் பாதையின் இரு மருங்கிலும் காந்தப் புலனைச் செலுத்தியதும் வண்டி முன்நோக்கி நகரத் தொடங்கும். வேகம் அதிகரித்ததும் பாதையின் மேலே ரயில் உயரும். அந்தரத்தில் பாதையின் மேலாலேயே - மணிக்கு 480 கிலோ மீட்டர் வேகத்தில் வண்டி பறந்து செல்லும். கடபுடா சப்தமோ ஆட்டமோ குலுக்கலோ இல்லாமல் பயணிகள் பயணம் செய்யலாம்.

போக்குவரத்தை நவீனப்படுத்த என்ன வெல்லாமோ செய்கிறார்கள். நம் நாட்டில் போக்குவரத்தை மேலும் சிரமப்படுத்தும் விதிகள் தான் செய்கிறார்கள்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11 செட்டியார் தெரு, கொழும்பு

323657


# அடக்கு முறை

இந்தப் படத்தைப் பார்க்கும்போது ஜேம்ஸ் பொண்ட் திரைப்படத்தின் காட்சியாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றும். இது வீதிப்பாதுகாப்பு தொடர்பான பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட படம்.

பாரிய வாகனங்களைச் செலுத்துவோர்-குறிப்பாக அவ்வாகனத்தைப் பின்னோக்கிச் செலுத்தும் சாரதிகள் வாகனத்தின் பின்னால் உள்ளவற்றைச் சரியாகப் பார்க்க முடிவதில்லை. கவனமாகப் பாராமல் வாகனத்தைப் பின் செலுத்தும்போது ஏற்படும் விபரீத விளைவினை விளக்குகிறது இப்படம்.

பிரிட்டனில் இத்தகைய விபரீத விளைவுகள் அடிக்கடி நடக்கின்றன. கார்களுடன் பயணிகளும் நசுங்குண்டு போவதுமுண்டு. 1992ல் மட்டும் 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாரிய வாகனச் சாரதிகளுக்கும் இத்தகைய வாகனங்களுக்குப் பின்னால் வாகனங்களைச் செலுத்துவோர் மற்றும் பாதசாரிகள் ஆகியோருக்கு அறிவுறுத்தவே இப்படம் பிடிக்கப்பட்டது. இதற்காக பயன்படுத்தப்பட்ட கார் -பழையதோ அல்லது பொம்மைக் காரோ அல்ல. இதற்காகவே கொள்முதல் செய்யப்பட்ட புத்தம் புதிய காராம். அடேங்கப்பா!




# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் ஜெம்ஷித் றெஹான் ரவீந்திரன் (ரவி) 29.05.1998**

உடுப்பிட்டி (ஆதிபாடசாலை) எழாலை (தெற்கு) ரவீந்திரன் (ரவி) அமலா தம்பதிகளின் இனிய அன்புச் செல்வன் ஜெம்ஷித் றெஹான் தனது முதலாவது பிறந்த நாளை SWISS (Uri) மாநிலத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். றெஹானை அன்பு அப்பா, அம்மா, சித்தப்பாமார், அத்தைமார், மாமாமார், உடுப்பிட்டி அப்பு அம்மா, அப்பம்மா, பெரியப்பாமார் பெரியம்மாமார், வவுனியாவில் வசிக்கும் அப்பு அம்மம்மா, அண்ணாமார், அக்காமார் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரை பல்கலைகளும் கற்று செல்வச் சிறப்போடு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல் அப்பா-Uri Swiss

# ஆழ் கடல் அதிசயம்



↑ சிவப்பு நிறத்தில் காணப்படுவது பீறு நீர்த்தாரை வகைப்படும் உயிருள்ள கடற்பிராணி. இதன் உடலில் காணப்படும் இரண்டு துவாரங்களில் ஒன்றினால் அதன் உடலிலுள்ள நீரைப் பீச்சியடிக்கும். கடற் சிப்பிகள் போன்றவற்றில் ஒட்டிக்கொண்டு சீவிக்கும் சிலது ஒரு கூட்டுக்குடும்பமாக வாழ்க்கை நடத்தும்.

↓ மஞ்சள் நிறத்தில் பார்வைக்கு அழகான மலர்போல் காட்சி தரும் இது மலரல்ல. உயிருள்ள பிராணி. ஆழமான சமுத்திரங்களின் அடியில் பாறைகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கும். 'கடல் லில்லி' என்று பெயர்.

குச்சிகளைப் போன்ற முட்களைக் கொண்டதாக நீண்டு வளைந்து தென்படும் அமைப்புகள் இந்தப் பிராணிக்குரிய உணவினைத் திரட்டுவதற்காக இயற்கை அமைத்துக் கொடுத்த சாதனங்கள். இவ்வமைப்புகளின் நடு மையத்தில் இதன் வாய் அமைந்திருக்கும்.

